CHRI 2011

OPEN SESAME

# தகவலைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை அரசமைப்புக்குட்படுத்தல்



Commonwealth Human Rights Initiative

working for the practical realisation of human rights in the countries of the Commonwealth

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA

building a nation of integrity

பாகம் : 02

## பொதுநலவாய மனிதஉரிமைகள் புத்தாக்கம்

பொதுநலவாய மனிதஉரிமைகள் புத்தாக்கம் சுதந்திரமான, பக்கச்சார்பற்ற மற்றும் அரச சாரா நிறுவனமாகும். பொதுநலவாய நாடுகளில் மனிதஉரிமை அரசியல் உணர்நிலையை உறுதிப்படுத்தும் உரிமைக் கட்டளையைக் கொண்டிருக்கின்றது. 1987ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த பல நிபுணர்கள் ஒன்றிணைந்து பொதுநலவாய மனிதஉரிமைகள் புத்தாக்கத்தை தாபித்தனர் (CHRI). பொதுநலவாயம் அங்கத்துவ நாடுகளுக்கு பகிரப்பட்ட விழுமியங்களையும் சட்டத்தின் அடிப்படைகளையும் வழங்கிக்கொண்டிருக்கும் அதேவேளை, அதனுள் ஒரு பொதுமன்றமொன்றை உருவாக்கி அதிலிருந்து மனிதஉரிமைகளை ஊக்குவிக்கலாம் என்று நம்பப்பட்டது. அதேநேரம், பொதுநலவாயத்தினுள் மனித உரிமைகள் தொடர்பான அவதானம் அப்போது இல்லாதிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

பொதுநலவாயத்தின் ஹராரே அடிப்படைகள், உலக மனிதஉரிமைகள் பிரகடனம், ஏனைய சர்வதேச மனித உரிமை கருவிகளுடன் பொதுநலவாய அங்கத்துவ நாடுகளில் உள்ள மனித உரிமைகளுக்கு உதவி வழங்கும் ஏற்பாடுகள் என்பனவற்றில் விழிப்புணர்வை ஏற்படுத்தல் என்பன பொதுநலவாய மனிதஉரிமைகள் புத்தாக்கத்தின் நோக்கங்களாகும். இவ்வமைப்பானது தனது அவ்வப்போதைய விசாரணைகள் மற்றும் அறிக்கைகள் என்பனவற்றை வெளியிட்டு வந்தபோதிலும், பொதுநலவாய நாடுகளில் மனித உரிமைகள் பற்றிய விடையங்களின்பால் ஈர்த்து, முன்னேற்றத்திலும் தடைகளின் காரணிகளிலும் தொடர்ச்சியான அவதானத்தை செலுத்தி வருகின்றது. மனிதஉரிமை துஷ்பிரயோகங்களை அல்லது மீறல்களைக் கட்டுப்படுத்துவதற்கான அணுகுமுறைகளையும் ஏற்பாடுகளையும் பயிற்றுவித்து, பொதுநலவாய நாடுகளின் செயலகம், அங்கத்துவ நாடுகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் என்பனவற்றுக்கு ஆலோசனைகளை வழங்கிவருகிறது. இதன் பொதுக் கல்வியூட்டல் நிகழ்ச்சித்திட்டம், கொள்கை உரையாடல்கள், ஒப்பீட்டாய்வுகள், எடுத்துக்கூறல் மற்றும் வலைப்பின்னலாக்கல் செயற்பாடுகள் என்பனவற்றின் வாயிலாக, அதன் முதன்மைப் பிரச்சினைகள் மீது ஒரு அறிவியல் நெறியாளியாக இவ்வமைப்புச் செயற்பட்டு வருகின்றது.

இதன் அனுசரைணை நிறுவனங்கள் தேசியமட்ட தோற்றத்திற்கும் சர்வதேச வலைப்பின்னலுக்குமான அனுமதியை வழங்கியுள்ளன. இவற்றின் நிபுணர்கள் தமது வேலைகளுக்கான, மனித உரிமைகளின் விழுமியங்களை மையமாகக் கொண்ட பொதுக் கொள்கைகளை உருவாக்கி, மனித உரிமைகள் பற்றிய தகவல்கள், தரநிர்ணயங்கள் மற்றும் பயிற்சிகள் என்பனவற்றை பரிமாறுவதற்கான ஒரு ஊடகமாகச் செயற்படும். இக்குழு உள்ளூர் அறிவினை ஒன்று திரட்டி, கொள்கை வகுப்பாளர்களை அணுகி, பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்து, மனிதஉரிமைகளை ஊக்குவிக்க ஒத்துழைப்பு வழங்குபவராகவும் திகழ்கிறது.

பொதுநலவாய மனிதஉரிமைகள் புத்தாக்கமானது டில்லியில் தாபிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து தலைநகர் லண்டனிலும் மற்றும் கானா நாட்டு தலைநகர் அக்ராவிலும் அலுவலகங்களைக் கொண்டிருக்கின்றது.


**சர்வதேச ஆலோசனை ஆணைக்குழு:** பிரதானியாக, சேம் ஒகுட்சேட்டோ என்பவரையும் அங்கத்தவர்களாக, யுனிஸ் புருக்மன் - அமிஸ்ஸா, முரே பேர்ட், யாஷ் காய், எலிஸன் டக்ஸ்பரி, நெவில் லின்டன், பீ.ஜீ வெர்கசி, ஸொஹ்ரா யூசுப் மற்றும் மஜா தருவாலா ஆகியோரைக் கொண்டிருக்கின்றது.

**நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் (இந்தியா) :** பிரதானியாக பீ.ஜீ வெர்கசியும், அங்கத்தவர்களாக அனு அகா, பீ. கே சந்திரசேகர், பக்வான்தாஸ், நிட்டின் தேசாய், கே.எஸ் திலன், ஹரிவான்ஸ், சன்ஜோய் ஹஸரிக்கா, பூணம் முட்ரேஜா, ரூமா பால், ஆர். வீ. பிள்ளை, கமல்குமார் ஆகியோரும் பணிப்பாளராக மாஜா தருவாலா கடமையாற்றுகின்றனர்.

**நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் (கானா):** பிரதானியாக சாம் ஒகுட்சேடோவும் அங்கத்தவர்களாக அனா பொஸ்மன், நெவில் லின்டன், எமிலி சோட், வேர்கசி ஆகியோரும் பணிப்பாளராக மாஜா தருவாலாவும் கடமையாற்றுகின்றனர்.

**நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் (இங்கிலாந்து):** பிரதானியாக நெவில் லின்டன், இணைப்பிரதானியாக லின்சே ரோஸ், அங்கத்தவர்களாக பிரான்ஸ் டி சூசா, ஒஸ்டின் டேவிஸ், மீனாக்சி தார், தெரக் இங்ரம், கிளயர் மாட்டின், செய்யித் ஷர்புத்தீன் மற்றும் எலிசபத் சுமித் ஆகியோர் கடமையாற்றுகின்றனர்.


பொதுநலவாய ஊடகவியலாளர்கள் அமைப்பு, பொதுநலவாய சட்டத்தரணிகள் அமைப்பு, பொதுநலவாய சட்டக் கல்வி அமைப்பு, பொதுநலவாய பாராளுமன்ற அமைப்பு, பொதுநலவாய ஊடகச் சங்கம், பொதுநலவாய ஒலிபரப்பு அமைப்பு.


ISBN : 978 - 955 - 1281 - 43 - 4


பொதுநலவாய மனித உரிமைகள் புத்தாக்கம், 2011
இந்த அறிக்கையிலிருந்து பகுதிகள் உரியவருக்குத் தெரியப்படுத்திய பின்னர் பயன்படுத்தலாம்



பொ.ம. பு. தலைமையகம், புது டில்லி
பீ - 117, இரண்டாம் மாடி,
சர்வோதய என்கிளாவே,
புதுடில்லி – 110017
தொ - +91 – 11 – 43180200
தொ.ந +91 – 11 –2686 – 4688
மின்னஞ்சல்:
ingo@humanrightsinitiative.org

பொ.ம. பு. ஐக்கிய இராச்சியம், இங்கிலாந்து
பொதுநலவாய கற்கை நிறுவனம்
28, ரசள்ஸ் சதுக்கம்
இங்கிலாந்து WC1B5DS
ஐக்கிய இராச்சியம்
தொ -+44 – 020 – 7 862 - 8857
தொ.ந44 – 020 – 7 862 – 8820
மின்னஞ்சல்: chri@sas.ac.uk

போ.ம. பு. அக்ரா
இல்ல இலக்கம் 09, சமோரா மசேல் அஸ்யும் டவுன் வீதி
பேவளி ஹில் ஹோட்டலுக்கு எதிராக
ட்ரஸ்ட் டவருக்கு அருகில், அக்ரா, கானா
தொ -+233302971170
தொ.ந - +233302971170
மின்னஞ்சல்:
chriafr@africaonline.com.gh

ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா
06, 37 ஆவது ஒழுங்கை, குயின்ஸ் வீதி, கொழும்பு 3
தொலைபேசி 011 2506419
தொலைநகல் 011 2592287
மின்னஞ்சல்: tisl@tisrilanka.org
இணையத்தளம்: www.tisrilanka.org

# தகவலைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை அரசமைப்புக்குட்படுத்தல்

**(பொதுநலவாய சபையின் மனித உரிமைகள் பட்டயத்தின் ஆலோசனை ஆணைக்குழுவின் 2003ம் ஆண்டு அறிக்கையான பொதுநலவாய சபை நாடுகளின் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் உரிமை நோக்கிய ஒரு பார்வை:** Open sesame **ஆவணத்தின் அடிப்படையில்)**

**தொகுப்பு (முதற்பதிப்பு):**
மாஜா தருவாலா

**பங்களிப்பு:**
வெங்கடேஷ் நயாக்
சுஞ்ஜிதா பக்ஷீ

**பொதுநலவாய நாடுகள் சபையின் மனித உரிமைப்பட்டயம் ஸ்ரீலங்கா**
புதுடில்லி

**ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல்**
கொழும்பு

**2011**

# உள்ளடக்கம்

முக்கிய சர்வதேச தரம் 02

தெற்காசியாவின் தரங்கள் 13

தேசிய அரசமைப்பை உருவாக்குதல் 14

# தகவலைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை அரசமைப்புக்குட்படுத்தல்

எந்தவொரு அரசினதும் நிறைவேற்றதிகாரம், நீதித்துறை மற்றும் சட்டவாக்கதுறை ஆகிய மூன்று உறுப்புக்களினாலும் இன்னும் அரசாங்க நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது பொது நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எந்த அரச அங்கங்களினாலும் வைத்துக்கொள்ளப்படும் தகவல்கள், தகவல் அடங்கிய பத்திரங்கள் ஏனைய பதிவுகளை ஓர் தனிப்பிரஜை தான் விரும்பும் வேலையில் பெற்றுக்கொள்வதற்கான அனுமதியை வழங்கக்கூடிய அடிப்படையில் ‘தகவல் அறியும் உரிமை’ சட்டமாகவும், அமுல்படுத்தப்படும் உரிமையாகவும் உத்தரவாதமளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

**-தகவல் அறியும் உரிமை பற்றிய பொதுநலவாய நிபுணர் குழு – 1999**

தகவல்களுக்குள் நுளைவதற்கு சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ள மனித உரிமைகள் பாதுகாப்பது மற்றும் ஊக்குவிப்பது சகல அரசாங்கங்களினதும் பொறுப்பாகும். விஷேடமான சட்ட மூலமொன்றை அமுல்படுத்துவதன் மூலம்தான் இதனை பயனுள்ள வகையில் அமுல்படுத்த முடியம். இது சம்பந்தமான பாவனையாளர்களினது தேவைக்கு ஏற்றதாகவும், சரியான அடிப்படையிலும் அமையக்கூடிய உண்மையான சட்டமொன்றை இயற்ற மக்களது பங்களிப்பு முக்கியமானதாகும். இச்சட்டத்தின் உள்ளடக்கங்களும் அவ்வாறே முக்கியமானதாகும். இவ்வாறான பயனுள்ள சட்டங்களின் முன்னேற்றத்துக்கு தேவையான நியமங்களை உள்ளடக்கிய கோட்பாடுகளையும் அறிவுறைகளையும் சர்வதேச ஸ்தாபனங்களும் சிவில் சமூகமும் பல ஆண்டுகளாக விருத்தி செய்து வந்துள்ளது. பொதுநலவாய குழுக்களுக்குள்ளே இப்படியான சட்டங்கள் பல இருக்கின்ற அதேவேளை சிறப்பான அமுலாக்கம் நிறைந்த உதாரணமிக்கவைகளும் நிறையவே இருக்கின்றன.

## முக்கிய சர்வதேச தரம்

### ஐக்கிய நாடுகள் சபை

தகவல் அறிவதற்கான உரிமை சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் மிக உறுதியாக உள்ளடக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையானது அதன் உருவாக்கத்தின் ஆரம்பத்திலேயே பொது மக்களுக்கு தங்களது அரசாங்கங்களிடமிருந்து தகவலை பெற்றுக்கொள்ளும் மனித உரிமை இருக்கிறது என அடையாளப்படுத்தியுள்ளது. இவ்வுரிமையானது நாட்டுப் பிரஜைகள் தோதல்களிலும் அதனூடாய் ஆட்சி முறைமையிலும் அறிவுச்சார் அடிப்படையில் பங்குகொள்வதற்கும், அவர்களுக்கு உரித்தானவைகளை அறிந்துக்கொள்வதற்கும், தங்களது உரிமை மீறல்களை புரிந்துக்கொள்வதற்குமான அடிப்படை உரிமையாகும். இன்னும் அரசாங்கம் உள்;ர் மற்றும் சர்வதேச சட்டங்களுக்கமைய மக்களது உறிமைகளை பாதுகாக்கும் கடமையை நிறைவேற்றவேண்டும் என்று கோருவதற்கு காரணமாய் அமையும் அடிப்படை மனித உரிமை இதுவாகும் என்பதை ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்திருக்கிறது.

> ‘தகவல்களை பெற்றுக்கொள்ளும் சுதந்திரம் அடிப்படை மனித உரிமையாக இருப்பது போல் ஐக்கிய நாடுகள் சபையின் அர்ப்பணிப்புடனான சகல சுதந்திரங்களையும் உருவாக்கும் உரைகல்லாகவும் திகழ்கிறது’
>
> -ஐக்கிய நாடுகள் சபை பொது மன்றம், 1946[2]

சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் 19ம் பிரிவு தகவல் பெற்றுக்கொள்ளும் உரிமையானது அடிப்படை மனித உரிமையாகும் என்பதை வலியுறுத்துகிறது. இந்த உரிமையை பாதுகாப்பதும் ஊக்குவிப்பதும் ‘குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான அனைத்துலக உடன்பாட்டு உறுப்புரை’ (ICCPR) யில் கைச்சாத்திட்டு ஏற்றுக்கொண்ட எல்லா அரசுகளினதும் கடமையாகும். இவ் உடன்பாட்டு உறுப்புரையின் 19ம் பிரிவு இப்படி கூறுகிறது:

> “எந்த ஒரு விடயம்பற்றியும் சுய கருத்துக்களை கொண்டிருப்பதற்கும் அதை வெளியிடுவதற்கும் சகலருக்கும் உரிமையுண்டு. இவ் உரிமையானது அந்நபர் எதுவித தடையுமின்றி சுய கருத்தை கொணடிருப்பதற்கும் அது பற்றிய தகவல் அல்லது கருத்தை உலகின் எப்பகுதியிலிருந்தும் தேடுவதற்கோ, பெறுவதற்கோ, அல்லது வழங்குவதற்கோ இருக்கும் உரிமையை உள்ளடக்குவதாய் இருக்கும்.”

தகவல் அறியும் உரிமையை ஒரு மனித உரிமையாக ஆரம்பத்திலேயே இனங்கண்ட ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக்கான ஆணைக்குழு 1993ல் சுய கருத்தை கொண்டிருத்தல் அந்த கருத்தை வெளியிடுவதற்காக விசேட இணைப்பாளர் ஒருவரையும் நியமித்தது. அவ் உரிமையின் அமுலாக்கம் பற்றி மேற்பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிப்பது இவ் இணைப்பாளரின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும். ஒரு அரசு தன்னகத்தே, எவ்வகையிலான பாதுகாப்பு முறையிலாகிலும் வைத்திருக்கும் தகவல்களை ஓர் தனிப் பிரஜை பெற்றுக்கொள்ள வழி செய்வது அவ் அரசின் முக்கிய கடமையாகும் என ICCPR ன் 19ம் பிரிவின் தகவல் அறியும் உரிமை உறுதிப்படுத்துவதாக இவ்விசேட இணைப்பாளர் மிகத் தெளிவாக கருத்து தெரிவித்திருந்தார். இக்கருத்தை வரவேற்று மனித உரிமைக்கான ஐ. நா. சபையின் ஆணைக்குழு 1998ல் தீர்மானம் நிறைவேற்றியது. இவ் இணைப்பாளர் தகவல் அறியும் உரிமை பற்றிய பல கொள்கை கோட்பாடுகளையும் 2000ஆம் ஆண்டு குறிப்பீடு செய்தார்.

கருத்து மற்றும் பேச்சு சுதந்திரத்திற்கான ஐ. நா. சபையின் விசேட இணைப்பாளரால் 2004ஆம் ஆண்டு கருத்துச் சுதந்திரத்தை ஊக்குவிக்கும் சர்வதேச செயல்முறையின் கூட்டுப் பிரகடனம் ஒன்றும் வெளியிடப்பட்டது. இக்கூட்டுப் பிரகடனத்தில் அமெரிக்க இராச்சியங்களின் ஸ்தாபனமும் (OAS), ஐரோப்பிய பாதுகாப்பு மற்றும் கூட்டுறவுக்கான ஸ்தாபனமும் (OSCE) இணைந்துக்கொண்டது. இக்கூட்டு பிரகடனம் தகவல் அறிவதானது ஒவ்வோர் பிரஜையினதும் அடிப்படை மனித உரிமையாகும் எனவும் ஒரு நாட்டின் எல்லா மக்களும் தமக்கு தேவையான தகவல்களை போதுமான அளவு பெற்றுக்கொள்வதற்கு போதிய சட்டங்களை ஏற்படுத்துவதன் மூலம் இவ் உரிமைக்கு அரசாங்கங்கள் மதிப்பளிக்கவேண்டும் எனவும் வலியுறுத்தியது. நாட்டு மக்கள் ஆட்சியில் பங்கு கொள்வதற்கும், அரசாங்கங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கும், ஊழலை இல்லாதொழிப்பதற்கும் ஆதரவளிக்க தகவல் அறிந்து கொள்வது எவ்வளவு முக்கியம் என்பதையும் இப்பிரகடனம் இனங்காட்டியது.

இலங்கை 1980ல் அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பாக சர்வதேச உடன்பாட்டு உறுப்புரைக்கு இணக்கம் தெரிவித்தது. ஆகையால் மக்கள் தகவல்களை பொது அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ள பயன்மிக்க செயல்முறை ஒன்றை அமுல்படுத்தி மக்களின் தகவல் அறியும் உரிமையை உறுதிப்படுத்தும் சட்டரீதியான கடப்பாடு இலங்கை அரசாங்கத்துக்கு உண்டு.

“தகவல் அறியும் வெளிப்படையான அணுகவழிக்கான மக்கள் உரிமையானது கருத்துச் சுதந்திரத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதோடு அரசாங்கங்கள் மக்களது சார்பில் என்ன செய்கின்றன என்று அறியும் உரிமையும் அதனுள் அடங்குகின்றது. இத்தன்மை இல்லாவிட்டால் உண்மைகள் மங்கிவிடுவதோடு அரசாங்கங்கத்தில் மக்கள் பங்களிப்பும் சிதறுண்டுவிடும்.”

அபித் ஹுஸைன் - ஐ. நா. விசேட அறிப்பாளர், 1999

**தகவல் சுதந்திரம் தொடர்பான ஐ. நா. கோட்பாடுகள் (2000)**

• உச்சக் கட்ட வெளிப்பாடு: அரச நிறுவனங்களுக்கு தகவல்கள் வெளியிடும் பொறுப்பு இருப்பதோடு பொது மக்கள் ஒவ்வொருவருக்கும் தகவல் பெற்றுக்கொள்ளும் உரிமை உண்டு. ‘தகவல்’ என்பது பொது நிறுவனங்களால் வைத்துக்கொள்ளப்படும் எல்லா பதிவுகளையும், பத்திரங்களையும் உள்ளடக்கும், அவைகள் எந்த அமைப்புகளில் பாதுகாக்கப்பட்டிருந்தாலும் இதில் உள்ளடக்கப்படும்.

• வெளியிடுவதற்குள்ள பொறுப்புகள்: அரச நிறுவனங்கள் பொது நலனுக்கு முக்கியத்துவமளிக்கும் பத்திரங்களை பிரசுரித்து பகிர்ந்தளிக்கப்படவேண்டும். உதாரணமாக – அவைகள் இயங்கும் முறையென்ன, பொது மக்களை பாதிக்கும் முடிவுகள், கொள்கைகள் போன்றவை.

• வெளிப்படையான அரசாங்க முறையை ஊக்குவித்தல்: பொது மக்களுக்கு அறிவூட்டும் தன்மையை குறைந்த பட்சம் சட்டம் உறுதி செய்வதோடு உரிமைகள் பற்றிய தகவல் வெளியிடப்படவேண்டும். அதோடு அரசாங்கத்துக்குள் இரகசிய கலாச்சாரங்களுக்கு தீர்வளிக்கும் செய்முறைகளும் உள்ளடக்கப்படவேண்டும்.

• விதிவிலக்குகளின் எல்லையை மட்டுப்படுத்தல்: தகவல் வெளியீட்டு மறுப்பு என்பது அரசாங்கத்தை தொல்லை கொடுப்பது அல்லது சங்கடத்துக்குள்ளாக்குவது என்ற அடிப்படையிலோ இல்லாவிட்டால் அரசாங்கத்தால் வெளிக்கொணரப்படும் என்ற அடிப்படையிலோ இருக்கக்கூடாது. தகவல் மறுப்பை நியாயப்படுத்தக்கூடிய சட்டரீதியான அடிப்படைகளின் மொத்த பட்டியலை சட்டம் உள்ளடக்கியிருத்தல் அவசியம். அதோடு சட்டரீதியான, பொது நலன் பாதிக்காத வகையில் முக்கிய சாதனங்கள் உள்ளடக்கப்படாது விதிவிலக்குகள் குறுகியதாய் வரையப்படல் வேண்டும்.

• அணுகுவழியை எளிதாக்கும் நடைமுறைகள்: பொது மக்களின் தகவல் பெறும் உரிமையை உறுதிப்படுத்தும் முகமாக அனைத்து பொது நிறுவனங்களும் திறந்த அணுகுவழிக்கான உள்ளக முறைமைகளை உருவாக்க நிர்ப்பந்திக்கப்படவேண்டும். மககளின் வேண்டுகோள்களை நடைமுறைப்படுத்துவதற்கான கால எல்லையை சட்டம் கண்டிப்பாக நிர்ணயிக்க வேண்டும். அத்துடன் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் அவைகள் போதுமான காரணங்களோடு எழுத்தில் அறிவிக்கப்பட வேண்டும் என சட்டம் கண்டிப்பாக வலியுறுத்தவும் வேண்டும்.

• கட்டணம்: தகவலை பெற்றுக்கொள்வதை தடுக்கும் வகையிலான உயர்ந்த கட்டணத்தை விதிப்பதன் மூலம் விண்ணப்பதாரிக்கு சட்டத்தின் சலுகையை இல்லாதொழிக்கக்கூடாது.

• வெளிப்படையான கூட்டங்கள்: நிர்வாக நிறுவனங்களின் எல்லா கூட்டங்களும் பொது மக்களுக்கு வெளிப்படையானதாக இருக்குமென சட்டம் நிர்ணயிக்கவேண்டும்.

• வெளியீட்டுத் தன்மை முன்னிலை பெறல்: ஏனைய சட்டஙகள் பொருள்கொள்ளப் படும்போது இத்தகவல் அறியும் சட்டத்தின் ஏற்பாட்டின் அடிப்படையில் பொருள்கொள்ளப்படுவதை அச்சட்டம் முடிந்தளவு உறுதி செய்ய வேண்டும். விதிவிலக்குகளை ஏனைய சட்டங்கள் விருத்தி செய்துவிடாத அளவுக்கு இச்சட்டம் விதிவிலக்குகளை பூரணமாக உட்கொண்டிருத்தல் அவசியம்.

• ஆதரவு வழங்குபவர்களுக்கான பாதுகாப்பு: தவறான செயற்பாடுகள் பற்றி தகவல் வெளியிடும் தனி நபர்கள் சட்டரீதியான, நிர்வாக ரீதியான அல்லது தம் தொழில்ரீதியான பாதிப்புகளிலிருந்து பாதுகாக்கப்படவேண்டும்.

சர்வதேச பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான உடன்பாட்டு உறுப்புரை (ICESCR) தகவல் அறியும் உரிமை பற்றி வெளிப்படையாக சுட்டிக்காட்டாத போதும் அதன் மேற்பார்வை குழுவான பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளுக்கான குழு (CESCR) இவ் உரிமையை செயல்ரீதியாக நடைமுறை படுத்துவது பற்றி பல குறிப்புகளை தெரிவித்துள்ளது. இன்னும் தகவல் அறியும் அணுகுவழியினதும் ஆட்சியின் வெளிபாட்டுத்தன்மையினதும் முக்கியத்துவம் பற்றியும் தெரிவித்துள்ளது. உதாரணமாக பொது குறிப்பு இலக்கம் 14 உயர்ந்த தரத்திலான

உடல் நலச் சேவைகளுக்கான உரிமை பற்றி கூறும்போது இப்படி கூறுகிறது – “எல்லா விதத்திலுமான, எல்லா அளவிலுமான உடல்நல உரிமையானது தகவல் அறியும் உரிமையாகிய அவசியமான அங்கத்தை உள்ளடக்கியதாக இருக்கும். தகவல் அறிவதென்பது உடல் நலம் சம்பந்தமான கருத்துக்கள், தகவல்களை தேடுவதற்கோ பெற்றுக்கொள்வதற்கோ, கொடுப்பதற்கோ உள்ள உரிமையாகும்.” இக்குழு தகவல் அறியும் உரிமை பற்றிய இன்னும் பல தொடர்ப்புகளையும் ஏற்படுத்தி கூறியுள்ளது. அவைகளாவன – நீர் பெறும் உரிமை (பொது குறிப்பு 15), கல்வி பயிலும் உரிமை (பொது குறிப்பு 13), உணவு பெறுவதற்கான உரிமை (பொது குறிப்பு 12). இவ்வடிப்படை உரிமைகளை அடையும் வழியானது தகவல் பெறும் வழியையும் உள்ளடக்கியதாக உள்ளது. இதனூடாக மக்கள் தேவையான தகவல்களை பெற்று இவ்வுரிமை உருவாக்கத்தின் கொள்கை திட்டமிடல் நிலை துவக்கம் அமுல் படுத்தல் நிலை வரை தமது பங்களிப்பை செய்து அதன் தாக்கத்தை மேற்பார்வையிட்டு அளவீடு செய்யலாம். ஐஊநுளுஊசு உடன்பாட்டு உறுப்புரைக்கு 1977ல் இலங்கையும் இணக்கம் தெரிவித்தது. எனவே மக்கள் தகவல் அறியும் வழியை உறுதிப்படுத்தி இவ் உரிமையின் பலனை பூரணமாக பெற்றுக்கொள்ள வழி வகுப்பதற்கு சட்டரீதியான உரிமை அதற்கு உள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் பட்டயம் விஷேடமான மக்கள் குழுக்களின் பாதுகாப்பு சம்பந்தமான புதிய மனித உரிமை ஒப்பந்தங்களும் தகவல் அறியும் உரிமை பற்றிய முக்கியத்துவத்தை அடையாளம் கண்டுள்ளது. உதாரணமாக ‘பெண்களுக்கெதிரான எல்லா விதமான வேறுபாடுகளையும் அழித்தொழிக்கும் ஒப்பந்தம்’ (CEDAW), ‘குழந்தைகள் உரிமைக்கான ஒப்பந்தம்’ (CRC), இன்னும் ‘புலம்பெயர் தொழிலாளர்களதும் அவர்கள் குடும்பங்களதும் உரிமை பாதுகாப்புக்கான ஒப்பந்தம்’ (CMW), ஆகிய அனைத்தும் குறிப்பிட்ட மக்கள் குழுக்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் அரசாங்கத்திடமிருந்து தேவையான தகவல்களைபெறும் வழிகளை ஏற்படுத்தல் சம்பந்தபட்ட அரசுகளுக்குள்ள பொறுப்புக்களென சுட்டிக்காட்டுகின்றன. இவ் ஒப்பந்தங்கள் அனைத்திலும் இலங்கை இணக்கம் தெரிவித்து கைசாத்திட்டுள்ளது. 1981ல் CEDAW ஒப்பந்தத்திலும், 1991ல் CRC ஒப்பந்தத்திலும், 1996ல் CMW ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்டுள்ளது. எனவே பெண்கள், குழந்தைகள், புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் பொது அதிகாரிகளிடமிருந்து தேவையான தகவலை உரிமையோடு பெற்றுக்கொள்ள வழி வகுப்பது இலங்கை அரசாங்கத்தின் சட்டரீதியான பொறுப்பாகும் என வலியுறுத்தியது.

தகவல் அறியும் உரிமையின் முக்கியத்துவத்தை இனம்காண்பது வெறுமனே சம்பிரதாயம் அல்ல. மாறாக சர்வதேச சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிலையான, பாகுபாடற்ற அபிவிருத்திக்கும், ஊழலற்ற ஜனநாயக ஆட்சிக்குமான திட்டதிதின் ஒரு அங்கமாகும்.

ஒவ்வொரு தனி நபரும் தாம் வாழும் சமூகத்தில் நிகழும் அபாயகரமான பொருட்கள் சம்பந்தமான நடவடிக்கைகள் பற்றிய சரியான தகவலை பெற்றுக்கொள்ளும் வழிமுறையை அறிந்தவனாக இருத்தல் வேண்டும் எனவும் இது சம்பந்தமான தகவல்களை பரவலாக வழங்குவதன் மூலம் மக்களை விழிப்படைய செய்து அவர்களின் பங்களிப்பை நெரிப்படுத்துவதற்கு அரசு வழிவகை செய்ய வேண்டும் எனவும் சூழல் மற்றும் அபிவிருத்தி சம்பந்தமான RIO பிரகடனம் 1992ல் இனம்காட்டிதியது. இப்பிரகடனத்தை ஐ. நா. பொதுச் சபை 1997ல் ஆதரித்ததோடு “தகவல் அறிவதற்கான வழிமுறையையும் கொள்கை முடிவுகளில் மக்கள் பங்களிப்பும் நிலையான அபிவிருத்திக்கு அவசியமான அடிப்படைகளாகும்” என தீர்மானமும் நிறைவேற்றியது.இன்னும் தேசிய மட்டத்திலான சூழல் சுற்றாடல் பற்றிய விடயங்களின் நீதி மற்றும் நிர்வாக நடவடிக்கைகள், சுற்றாடல் சம்பந்தமான தகவல்களுக்கான வழிகளை அரசாங்கங்கள் உறுதிப் படுத்த வேண்டும் என 2002ம் ஆண்டு ஜொஹன்னாஸ்பேர்க் நகரில் நடைபெற்ற நிலையான அபிவிருதிதிக்கான 10ஆவது  உச்சி மகாநாட்டின் அமுலாக்கல் திட்டம் முடிவெடுத்தது. அதே போன்று சமூக அபிவிருத்திக்கான உச்சி மகாநாட்டின்  நகர செயல்திட்ட நிகழ்வு பல ரீதியிலான தகவல்களை எல்லா மக்களும் அடைவதற்காக ஊக்குவிப்பது கடமை எனவும் திறந்த அரசியல் மற்றும் பொருளாதார முறைமைக்கு அறிவு, கல்வி, மற்றும் தகவல் பெறுவது அவசியம் எனவும் வலியுறுத்தியது.

ஊழலுக்கு எதிரான ஐ. நா. ஒப்பந்தத்தின(2003) முக்கிய அங்கமாக தகவல் அறிவதற்கான அணுகுவழி திகழ்கிறது. ஊழலுக்கு எதிரான போராட்டம் மற்றும் ஊழல் தடுப்பு ஆகிய அம்சங்களில் சமூக பங்களிப்பு மிக முக்கியம் என இவ்வொப்பந்தத்தின் 13ம் பிரிவு அடையாளப்படுத்தியுள்ளது. இம்மக்கள் பங்களிப்புக்காக அரச அதிகாரிகள் முடிவெடுக்கும் நடைமுறைகளில் வெளிப்படை தன்மையை கடைபிடிப்பதோடு மக்கள் தகவல்களை பெற்றுக்கொள்ள பயன்மிக்க வழிமுறைகளை கையாளவேண்டும். 2004ம் ஆண்டு இலங்கை இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. எனவே ஊழலை தடுப்பதற்காக வெளிப்படை தன்மையை பேணுவது சர்வதேச சமூகத்திற்கு தமது அர்ப்பணிப்புத்தன்மையைக் காட்டுவது இலங்கைக்குள்ள சட்டரீதியான பொறுப்பாகும்.

## பொதுநலவாய அமைப்பு

ஜனநாயகம் மற்றும் அபிவிருத்தியை பொது நோக்கமாகக் கொண்டு ஒன்றிணைந்து மற்றும் ஒருவருக்கொருவர் உதவி புரிந்து, ஒன்றாய் இணைந்து செயல்படும் 53 நாடுகளைக் கொண்ட ஒரு சுயேச்சை சங்கமான பொதுநலவாய அமைப்பின் இலங்கை ஒரு அங்கத்துவ நாடாகும். பல சந்தர்ப்பங்களில் அவசியப்படும் தகவல்களை பெற்றுக்கொள்ளும் உரிமையின் அடிப்படை முக்கியத்துவத்தை பொதுநலவாய அமைப்பின் அங்கத்துவ நாடுகள் கூட்டாக இனம் கண்டுள்ளன. “அரச தகவல்கள் நாட்டு பிரஜைகளுக்கு தடையின்றி கிடைக்கின்றபோதே அரசாங்க செயல்முறைகளிலும் ஜனநாயகத்திலும் மக்களின் பங்களிப்பு அர்த்தமுள்ளதாய் அமையும்” என 1980களில் கூடிய பொதுநலவாய சட்டத்துறை அமைச்சர்கள் பிரகடனம் செய்தனர்.அன்றிலிருந்து அங்கத்துவ நாடுகளின் கொள்கை வகுப்பு அறிக்கைகள் “தகவல் சுதந்திரத்தை ஓர் அமுல்படுத்தப்படவேண்டிய, சட்டரீதியான உரிமை” யாக கருதுவதற்கு ஊக்குவித்துள்ளன.

1999ல் பொதுநலவாய அமைப்புக்களின் செயலகம் அறியும் உரிமை மற்றும் ஜனனாயக, அபிவிருத்திகளின் வளர்ச்சிகளுக்கான நிபுணர் குழுவை நியமித்தது. இந்நிபுணர் குழுவின் இறுதி அறிக்கையின்படி பொதுநலவாய நாடுகளின் சட்டத்துறை அமைச்சர்கள் ஒன்றிணைந்து பொதுநலவாய தகவல் சுதந்திரத்தின் கொள்கைகளை வகுத்தனர். இக்கொள்கையானது தகவல் அறியும் வழிமுறைக்கான உரிமையை ஓர் அடிப்படை மனித உரிமையாக அடையாளப்படுத்தியது. இதன் நலன்பாடுகளாக பொது விவகாரங்களில் மக்கள் பங்களிப்பை ஊக்குவித்தல், அரசாங்கத்தின் பொறுப்பு கூறும் தன்மையை அதிகரித்தல், ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் பலமான ஆதரவை நல்குவது மற்றும் அபிவிருத்தி விவகாரங்களில் முக்கிய துணையாகவிருப்பது போன்ற விடயங்கள் அடங்குகின்றன.

பொதுநலவாய சட்டத்துறை அமைச்சர்களால் வகுக்கப்பட்ட இக்கொள்கைகளின் இறுதி அம்சங்கள் துரதிஷ்டவசமாக நிபுணர் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களைவிட குறைவான பூரணத்துவமற்றதாகவும் குறைந்த சுதந்திரத்தன்மை உடையதாகவும் அமைந்தது. ‘உச்சக் கட்ட வெளிப்பாடு’ கோட்பாடு தரம் குறைக்கப்பட்டிருந்தது. ‘விதிவிலக்கு’ ஏற்பாட்டில் தகவல் தடுத்தல் பொது நலனுக்கு எதிராக இல்லாமல் அவசிய நலன்கல் பாதிக்கப்டும் வேளையில் மாத்திரமே தகவல் வழங்குவது தடுக்கப்படும் என்ற அவசியமான அம்சம் சேர்க்கப்படவில்லை. இன்னும் நிபுணர் குழுவால் சிபாரிசு செய்யப்பட்ட பயனுள்ள அமுலாக்கத்தை உறுதி செய்ய போதுமான நிர்வாக ஏற்பாடுகளை வேண்டிநிற்கும் வழிகாட்டல்களும் அமைச்சர்களின் இறுதி கொள்கைகளில் இடம்பெற்றிருக்கவில்லை.

**பொதுநலவாய தகவல் சுதந்திர கோட்பாடுகள் (1999)**

- அங்கத்துவ நாடுகள் நேரடியாக மற்றும் அனுமதிக்கப்பட்ட உரிமையாக தகவல் சுதந்திரத்தை மதிக்க ஊக்குவிக்கப்படவேண்டும்

- அரசு வெளிப்படைத்தன்மையை கலாசாரமாக விருத்தி செய்ய வேண்டும். அத்துடன் வெளிப்பாடு தொடர்பான ஆர்வத்துடனான ஊகத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

- தகவல்களை நோக்கி செல்லும் உரிமைக்கான வழிமுறைகள் மட்டுப்படுத்தப்பட்ட விதிவிலக்குகளுக்கு ஆளாகலாம், இருந்தும் அவை குறுகிய இறுதித் தீர்மானத்திற்கு வரக்கூடாது.

- அரசாங்கங்கள் குறிப்புக்களை பேணவேண்டும். அதேபோல் அவற்றை பாதுகாக்க வேண்டும்.

- பிரதானமாக பதிவுகள் மற்றும் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான மறுப்புகள் சுயமான விமர்சனத்துக்கு உட்படுத்தப்படவேண்டும்

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் 1999 நவம்பரில் அங்கீகரித்த இக்கோட்பாடுகளை பொதுநலவாய செயலகம் செயல்ரீதியாக ஊக்குவிக்கவேண்டும் என பொதுநலவாய நாடுகளின் நீதி அமைச்சர்கள் அறிவுறுத்தினர். இவ்வடிப்படையில் செயலகமானது தகவல் சுதந்திரம் பற்றிய மாதிரி சட்டமொன்றை வடிவமைத்துள்ளது. இது அரசாங்கங்களின் சரியான சட்டவாக்கத்திற்கு உதவியாய் அமையும். மொத்தத்தில் இம்மாதிரி சட்டமானது முன்னேற்றமுடையதாகவும் சிறந்த ஏற்பாடுகள் பலவற்றை கொண்டதாகவும் உள்ளது. இருந்தபோதும் சர்வதேச தரங்களின் அடிப்படையில் பொதுவாக அடையாளம் காணப்படாத சில தீர்வுகளும், வரையறைகளும் அதில் உள்ளன.

பொதுநலவாய நாடுகளின் தரம் சர்வதேச அமைப்புகளால் வகுக்கப்பட்டவைகளைவிட பூரணத்துவமற்றதாகவே உள்ளது. உதாரணமாக ஆபிரிக்க சங்கம் தனியார் அமைப்புக்களிடமிருந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளும் உரிமையை அங்கீகரித்துள்ளது. அதோடு தகவல் பெறுவதற்கான அணுகுவழியை செயல்படுத்துமுகமாக இரகசிய சட்டங்களை திருத்தும் அவசியத்தையும் அடையாளம் கண்டுள்ளதோடு சுயாதீன மேன்முறையீட்டு நிறுவனத்தின் அவசியத்தையும் கூறியுள்ளது. மேலும் மனித உரிமைகளுக்கான ஐ. நா. ஆணைக்குழுவின்

கோட்பாடுகளானது தகவல் உரிமை பற்றி அறைகூவல் விடுபவர்களை அரசாங்கம் பாதுகாப்பது கடமையென்றும், பொது மக்கள் அறிவூட்டப்படுவது பற்றியும் எடுத்துறைக்கிறது. இந்த ஒழுங்கு விதிகள் எதுவும் பொதுநலவாய மாதிரி சட்ட மூலத்தில் உள்ளடக்கப்படவில்லை. இவைகள் பற்றி கூறப்படவில்லை.

**சர்வதேச பொருளாதாரம் மற்றும் வணிக நிறுவனங்கள் : வெளிப்பாட்டிலிருந்து விலக்கப்பட்டதல்ல.**

தேசிய அரசாங்க சீறமைப்புக்கும் அபிவிருதிதிக்கும் முக்கிய காரணியாக வெளிப்பாட்டுத்தன்மைதான் திகழ்கிறது என உலக வங்கி (WB), சர்வதேச நாணய நிதியம் (IMF), மற்றும் உலக வர்த்தக அமைப்பு (WTO) ஆகிய சர்வதேச நிதி நிறுவனங்கள் போதிக்கின்றன. எனினும் இந்நிறுவனங்களே தகவல் வழங்குவதில் பின்நிக்கின்றன. இருப்பினும் இந்நிறுவனங்களின் புகழைப் பேணுவதற்கும், செயல்திறனை உறுதிப்படுத்துவதற்கும் இக்காரணி முக்கியமாகும். பல பொதுநலவாய நாடுகள் இந்நிறுவனங்களில் அங்கத்துவம் வகிக்கின்றன. அதன் கொள்கைகளுக்கும் மட்டுப்படுத்தப்படுகின்றன. இந்நிறுவனங்கள் போதிக்கும் நல்லாட்சியின் கொள்கைகளை அமுல்படுத்த வேண்டும் என வலியுறுத்த அங்கத்துவ நாடுகளுக்கு இருக்கும் வாக்குறிமை வாய்ப்பை அளிக்கிறது.

இச்சர்வதேச நிறுவனங்கள் சர்வதேச உரிமை முறைகளுக்கும் தேசிய சட்டங்களுக்கும் தாம் கட்டுப்பட்டவர்கள் அல்ல எனவும் அங்கத்துவ நாடுகளுக்கு மாத்திரமே தாம் பொறுப்பு கூறவேண்டும் எனவும் நீண்ட காலமாக கூறி வருகின்றன. இருப்பினும் இவைகள் அதிக பொறுப்பு வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்ற அழுத்தம் காரணமாக அண்மைகாலங்களில் தகவல் வெளிப்பாட்டு கொள்கையின்பால் நகர்வதை காணலாம். இக்கொள்கைகள் வித்தியாசமான படித்தரங்களினாலான வெளிப்பாட்டுத் தன்மையுடையதாய் இருக்கவேண்டும். நிறுவனத்தை நடத்தும் விதம் மற்றும் முடிவு எடுத்தல் ஆகிய தகவல்களைவிட நிறுவனத்தின் கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகள் பற்றிய தகவல்களை வழங்குவதையே இந்நிறுவனங்கள் அதிகம் விரும்புகின்றன. திட்டவட்டமாக அந்நிறுவனங்கள் வெளியிடும் தகவல்களின் அளவானது அத்தகவல்கள் பற்றிய சரியான தகவல்கள் வழங்குவதை சிரமப்படுத்துகிறது. இன்னும் அவர்களது வேலை முறைமையின் சிக்கல்தனம் பற்றிய பரீட்சார்த்தமின்மையும், பாவிக்கும் தொழில்நுட்ப பதங்களும் அவர்களது வெளியீடுகள் பற்றி கருத்து கூறுவதை சிரமப்படுத்துகிறது. செல்வாக்கு மிக்க

சர்வதேச நிறுவனங்களின் தகவல்கள் ஜனநாயகம் மற்றும் அபிவிருத்தி பெறுமானம் கொண்டதாய் இருக்க வேண்டுமாயின் சம்பந்தப்பட்ட மக்களுக்கு எளிதாக கிடைக்கக்கூடியதாக இருக்கவேண்டும். அதுமட்டுமின்றி முடிவெடுக்கும் விடயங்களுக்கு கருத்து வழங்க போதுமான பொருள் தரக்கூடியதாகவும் சக்தி வாய்ந்த நிறுவனங்களும், அங்கத்துவ அரசாங்கங்களும் தத்தமது கொள்கைகளுக்காக பிரஜைகளுக்கு பொறுப்புக்கூற வகை செய்யும் தகவல்களாகவும் அவை இருத்தல் அவசியம்.

**உலக வங்கி :**

முன்பைவிட அதிக அளவில் தகவல் பெறும் வழிமுறையை ஏற்படுத்தும் நோக்கில் உலக வங்கியானது புதிய கொள்கை ஒன்றை வகுத்துள்ளது. இக்கொள்கை 2010 ஜுலை 01ம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்தது. இக்கொள்கையானது பலதரப்பட்ட பங்குதாரர்களின் பரவலான ஆலோசனையின் பிரதிபலனாகும். இது வங்கியின் தகவல் வெளிப்பாடடுக் கொள்கை மற்றும் பொறுப்பு கூறல் ஆகிய நோக்கங்களில் ஏற்பட்டுள்ள பாரிய மாற்றமாகும். இரகசிய தகவலை மாத்திரம் இடைநிறுத்தி ஏனைய அனைத்தையும் வெளியிடும் ‘வெளிப்படையானது என்ற ஊகம்’ (presumption of openness) எனும் கொள்கையை இது வலியுறுத்துகின்றது. இப்புதிய கொள்கையின் அடிப்படையில் முன்பு வெளிப்படுத்தாத தகவல்களாகிய பணிப்பாளர் சபை கூட்ட குறிப்புகள், கலந்துரையாடலின் சுருக்கங்கள், நடைமுறைபடுத்தும் தரம் மற்றும் பெறுபேறு அறிக்கைகள், கோட்பாடு குறிப்புகள் மற்றும் வெளிப்புற ஆலோசனைக்கு பாத்திரமாகும் கொள்கை மறுபரிசீலனைக்கான ஆலோசனை திட்டங்கள் ஆகிய அனைத்தும் பொது மக்கள் நுண்ணாய்வுக்கு விடப்படும். இன்னும் தகவல்கள் ‘நியாயமற்ற அல்லது முறைகேடான’ வகையில் மறுக்கப்பட்டிருந்தால் அவை பற்றிய மேன்முறையீட்டை பரிசீலித்து தீர்வுகாண மூன்று அங்கத்தவர்களை கொண்ட சுயாதீன மேன்முறையீட்டு சபை ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

இந்த உலக வங்கியின் பகிரங்கத்தன்மைக்கான ஈடுபாடு பல காரணிகளால் முன்னெடுத்து செல்லப்பட்டதாக வங்கி அறிவிக்கின்றது. வறுமை ஒழிப்பு மற்றும் வங்கியின் கொள்கை, வேலை திட்டம் ஆகியவற்றை வகுத்தலுக்கும் அமுலாக்கலுக்கும் முக்கிய அம்சமாக இருக்கும் மக்கள் பங்களிப்பு, மக்கள் உரிமைபாடு ஆகியவைகளே அக்காரணிகள் என உலக வங்கி கூறுகிறது.

**சர்வதேச நாணய நிதியம் :**

சர்வதேச நாணய நிதியம் அதன் அந்தரங்க செயல்பாடுகளுக்காக அதிக அளவில் விமர்சிக்கப்பட்டது ஐஆகு. நிறுவனத்தின் 1998ம் ஆண்டின் வெளிப்பாட்டு கொள்கைகள், பார்வைக்காக விடப்பட்டுள்ள பத்திரங்களை பட்டியலிட்டுள்ளது. அதனால் சம்பந்தப்பட்ட அரசாங்கங்கள் விரும்பினால் மாத்திரமே அவற்றை வெளியிடலாம். நிர்வாக சபை கூட்டதிதின் குறிப்புகள, நிகழ்ச்சி நிரல்கள் ஆகியன இப்பட்டியளில் சேர்க்கப்படவில்லை. இந்நிறுவனமானது அஙகத்துவ நாடுகளுக்கு மாத்திரமே பொறுப்பு கூற வேண்டுமென்றும் அதி கூடுதலான வெளிப்பாட்டு தன்மைக்கு அரசாங்கங்களுக்கு மத்தியில் இணக்கம் வேண்டுமென்றும் தொடர்ச்சியாக வந்த நிறுவன முகாமைத்துவ பணிப்பாளர்கள் கூறிவந்துள்ளார்கள். இருப்பினும் தற்பொழுது அங்கத்துவ நாடுகளின் கட்டாய வெளிப்பாட்டுத்தன்மையை கோருவது பற்றிய சட்டரீதியான விடயங்கள் பரிசீலிக்கப்பட்டு வருவது நன்மையான விடயமாகும்.

**உலக வர்த்தக அமைப்பு:**

இந்நிலையத்தின் முக்கிய அங்கங்களின் செயல்பாடுகள், நிலைய பரிபாலன கட்டமைப்பு, அது பற்றிய விபரம் ஆகிய தகவல்கள் எளிதாக பெறக் கூடியவைகளாக இருக்கின்றன. இன்னும் எல்லா விதமான இறுதி ஒப்பந்தங்களும் கிடைக்கப் பெறுகின்றன. அதே போல் பரிபாலன குழுவின் அறிக்கைகள், முடிவுகள் ஆகியவற்றின் சுருக்கங்களும் கிடைக்கப் பெறுகின்றன. ஆனால் அனைத்து வர்த்தக கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சர்ச்சையான தீர்ப்புகள் ஆகியன பொது மக்கள் பார்வையிலிருந்து தடுக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தங்கள் கைச்சாத்தான பிறகு அவைகளை மக்கள் பார்வைக்கு விடுவது திருப்தியானது அல்ல என விமர்சகர்கள் வாதிடுகின்றனர். அது உலக வர்த்தக அமைப்புக்கு அல்லது நாடுகளின் பிரதிநிதிகளுக்கு பரிசீலித்துப் பார்ப்பதை நிறுத்துவது கடினமாகும். இந்நிலையத்தின் 2002ம் ஆண்டின் வரையறை வகுப்பு கொள்கை தகவல் வெளியிடப்படும் கால எல்லையை 8 முதல் 9 மாத கால எல்லையிலிருந்து 6 முதல் 8 வாரம் வரையிலான கால எல்லையாக குறைத்தது. நிலையத்தின் அங்கத்துவ நாடொன்றால் கொடுக்கப்பட்ட தகவலை கூட இன்னுமொரு அங்கத்துவ நாடு கேட்டுக்கொண்டால் வர்த்தக நிலையம் அதை வெளியிடாது தடுத்து வைக்கலாம். ஆனால் நிலையத்தின் வெளியிடப்படக்கூடாத தகவல் பட்டியல் குறைக்கப்பட்டுள்ளது நல்ல விடயமாகும்.

ஆக மொத்தத்தில் இந்த சர்வதேச நிதி நிறுவனங்கள் சகலதும் தங்களது செயல்பாடுகளில் வெளிப்படை தன்மையை கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ள போதிலும் அவைகளது தகவல் வெளிப்பாட்டுக் கொள்கையில் அடிப்படை குறைபாடுகள் இருக்கவே செய்கின்றன. முதலாவதாக எல்லா அங்கத்துவ நாடுகளும் தங்களது செயல்பாடுகள் பற்றிய தகவல் வெளியிடப்பட வேண்டும் என்ற கோடபாட்டுக்கு இணக்கம் தெரிவிக்கின்ற அதே வேளை அக்கொள்கை மாற்றத்துக்கு அனைத்து அங்கத்துவ நாடுகளினதும் கருத்தொற்றுமை அவசியப்படுகிறது. அடுத்ததாக தகவல் கோரப்படும்போது மறுப்பு தெரிவிக்கப்பட்டால் அதனை சுயாதீனமாக மறு பாசீலனை செய்ய ஏற்பாடுகள் இல்லை. மூன்றாவதாக தகவல்கள் முடிவெடுக்கப்படும் படிமுறைகளிலே அதுபற்றிய விபரங்களை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை கொடுக்காமல் முடிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின்பே மக்களுக்கு வெளியிடப்படுகின்றன. இப்படியான நிலை பரந்த மக்கள் பங்களிப்பை ஏற்படுத்தாது. எனவே இது சம்பந்தமான விடயங்களில் அபிவிருத்தி காணப்பட்ட போதிலும் பல குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன.

## தெற்காசியாவின் தரங்கள்

மனித உரிமைகளுக்கான ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு சம்பந்தமாக ஐரோப்பியா, அமெரிக்கா மற்றும் ஆபிரிக்காவில் கடைப்பிடிக்கப்படும் பிராந்திய செயல்முறைகளைப்போல் தெற்காசியாவில் கடைப்பிடிக்கப்படுவதில்லை. இருப்பினும், பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கம் (சார்க்) எனும் அமைப்பு அங்கத்துவ நாடுகளில் பொருளாதார, சமூக அபிவிருத்தியை ஊக்குவித்து துரிதப்படுத்தும் நோக்குடனான ஒரு பிராந்திய அமைப்பாகும். இவ்வமைப்பில் இலங்கை ஓர் ஸ்தாபக அங்கத்துவ நாடாகும். ஏனைய அங்கத்துவ நாடுகளான பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைத்தீவு, நேபாளம், பாக்கிஸ்தான் ஆகிய நாடுகளுடன் இலங்கையும் இணைந்து 2004ல் ஏற்படுத்திய சமூக சாசனம் பல விடயங்களை அங்கத்துவ அரசாங்கங்கள் உறுதிப்படுத்தவேண்டும் என்ற விதிமுறையை ஏற்படுத்தியுள்ளது.

பொது நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தேசிய, சர்வதேச நிறுவனஙகளின் நிர்வாக நடப்புகள் வெளிப்படை தன்மையுடையதும், பொறுப்புவாய்ந்ததாகவும் இருக்கவேண்டும் என நிர்வாக நடவடிக்கை உறுதிப்படுத்த வேண்டும் என்பதை அவர்களின் அரசுகளுக்கு பணிக்கப்படுகின்றது.

அபிவிருத்தி சம்பந்தமானகௌ்கைகளை வகுக்கும் போது பெண்கள் மற்றும் இளைஞர்களின் பங்களிப்பை பெருமளவில் உறுத்ப்படுத்த நடவடிகடகைை மேற்கொள்ள விஷேட கவனம் செலுத்தப்படுகின்றது. முடிவுகளை தயார்படுத்தல், மதிப்பிடுதல், அமுல்படுத்தல் ஆகிய கட்டங்களில் மக்களின் பூரண பங்களிப்பையும் பெறுபேறுகளை நியாயமாக பகிர்ந்தளிப்பதிலேயுமே வலுவூட்டல் தங்கியுள்ளது என்ற விடயங்களையும் SAARC சமூக சாசனம் அடையாளப்படுத்தியுள்ளது. அபிவிருத்தி சம்பந்தமான கொள்கை வகுப்பு கட்டங்களில் பெண்கள் மற்றும் இளைஞர்களது பங்களிப்பை உறுதிப்படுத்த விசேட நடைமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் சாசனம் கூறுகிறது. இவ்வுறுதிப்பாடுகள் வெறும் வார்த்தைகளாக மட்டும் இருக்கக்கூடாது. அதற்காக அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சி நிரல்கள் பற்றிய தகவல்கள் உருவாக்கத்திலிருந்து அமுலாக்கம் வரையிலான வரைக்கும் மக்களுக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய முறையை அங்கத்துவ நாடுகள் நம்பகமான வகையில் உறுதி செய்யவேண்டும். பாக்கிஸ்தான் (2002ல்) இந்தியா (2005ல்) நேபாளம் (2007ல்) மற்றும் பங்களாதேஷ் (2009ல்) தம் நாட்டு பிரஜைகளுக்கு தேவையான தகவல்களை உரிமை என்ற அடிப்படையில் பெற்றுக்கொள்ள அமைவான சட்டம் மற்றும் நிறைவேற்று ரீதியான நடைமுறைகளை மேற்கொண்டுள்ளது. இலங்கையும் தகவல் பெறும் வழிமுறைக்கான சட்டத்தை உருவாக்க 2003ல் ஏற்பாடுகள் செய்தது. இருப்பினும் அக்கட்டத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றமும் உள்ளூர் இனப்பிரச்சனையும் அம்முயற்சியை முடக்கிவிட்டுள்ளது.

## தேசிய அரசமைப்பை உருவாக்குதல்

தகவல் பெறுவதற்கான உரிமையை அதற்கான வழிமுறையை அனுமதிக்கக்கூடிய அரசமைப்பு ரீதியான பாதுகாப்பு மற்றும் தனிப்பட்ட பிரிவுகளின் கட்டளைகள் வரை பல்வேறு நேரடி பொறிமுறை மூலமும் பாதுகாக்க முடியும். உதாரணமாக திணைக்களங்களால் சுயேச்சையாக உருவாக்கப்பட்ட பிரஜைகள் சாசனம் மூலமோ அல்லது நிறைவேற்று கட்டளைகள், கோவைகள் மூலமான ஏற்பாடுகள் மூலமோ தகவல்களை பெற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கலாம். ஐக்கிய இராச்சியம் (UK) தனது தகவல் பெறும் சுதந்திர சட்டத்தை (2000ம் ஆண்டு) ஏற்படுத்துவதற்கு முன் 1997ம் ஆண்டின் திறந்த அரச கோவை மூலமாக தகவல் அறியும் வழிமுறையை ஏற்படுத்தியிருந்தது. இருப்பினும் நிறைவேற்று கட்டளைகள் மூலமோ நிர்வாக வலியுறுத்தல்கள் மூலமோ தகவல் பெறுவதற்கான வழிமுறையை ஏற்படுத்துவது உசிதமல்ல. காரணம் அவற்றை எந்த நேரத்திலும் மாற்றிவிட முடியும். தகவல் அறியும் உரிமையை நிலைப்பெறச் செய்வதற்கான சரியான வழிமுறை அதற்கான விசேட சட்டவாக்கமாகும். குறிப்பிட்ட விசேட சட்டங்கள் இல்லாதபோதும் இவ்வம்சம் சார்ப்பான விசேட சட்டங்கள் சில வேளை தகவல் வெளிப்பாட்டை கட்டாயமாக்கும்.

உதாரணமாக சுற்றாடல் சட்டங்கள் விளைவு மதிப்பீடுகளை பிரசுரிக்க கட்டளை பிறப்பிக்கும். அதேபோல் நிறுவன சட்டங்கள் வருடாந்த அறிக்கையையும், நிதி அறிக்கைகளையும் விநியோகிப்பதை கட்டாயமாக்கும். பெரும்பாலான வேலைகளில் அரசமைப்பு பாதுகாப்பும் வழங்கப்படுகிறது.

பொதுநலவாய நாடுகள் பலவற்றின் அரசியல் சாசனம் தகவல் பெறுவது மற்றும் கொடுப்பதற்கான உரிமையை பேச்சு சுதந்திரத்திற்கான அடிப்படை உரிமையாகவே கருதுகின்றன. தெற்காசிய நாடுகளுக்கு மத்தியில் காணா, மாளாவி, மொசாம்பிக், பெப்புவா நியுகினியா, தென்னாபிரிக்கா, தன்சானியா மற்றும் உகண்டா ஆகிய நாடுகள் மட்டுமே தகவலுக்கான வழிமுறையை ஒரு தனியான அடிப்படை உரிமையாகவோ, அடிப்படை உரிமையின் ஒரு பகுதியாகவோ கருதுகிறது. தகவல் பெறுவதற்கான வழிமுறை சம்பந்தமாக அரசியல் சாசன உத்தரவாதம் இருக்கின்ற நிலையிலும்கூட இதற்கான சட்டவாக்கம் அவசியப்படுகிறது. ஏனெனில் உரிமையின் உள்ளடக்கம், பரப்புகளை விபரப்படுத்தவும் இவ்வுரிமை கட்டுபாடுகள் குறுகிய அளவில் விபரிக்கப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்துவதற்கும் அது அவசியப்படும். நேபாளம் மற்றும் மாலைத்தீவு ஆகிய நாடுகளின் அரசியல் சட்டமானது அரசாங்கங்கள் தகவல் உரிமையை பாதுகாப்பதற்கு சட்டவாக்கம் செய்ய வேண்டுமென கட்டாயப்படுத்துகிறது. உகண்டா நாட்டில் இது இன்னும் நடைபெறாதது ஒரு துரதிஷ்டமே. வெளிப்பாட்டுத் தன்மையுடனான கலாச்சாரத்தை உருவாக்குவதற்கும் சரியான முறைமைகளை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கு சட்டவாக்கம் ஒரு தெளிவான வரையறையை ஏற்படுத்துகிறது. ஆகவே கட்டுப்பாட்டை விதிக்கும் சட்டங்கள் அமுலில் இருந்தால் தகவல் உரிமைக்கான சட்டத்தை அமுல்படுத்த முடியாது போய்விடும்.

இலங்கை அரசியல் சட்டத்தில் இருக்கும் அடிப்படை உரிமைகளான பேச்சு சுதந்திரம், சிந்தனை சுதந்திரமானது தகவல்கள் பெற்றுக்கொள்ளும் உரிமையையும் உள்ளடக்குகின்றது என உயர்நீதி மன்றம் பல சந்தர்ப்பங்களில் விளக்கி கூறியுள்ளது.

அயல்நாடான இந்திய அரசியலமைப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ள சுதந்திரமான பேச்சு உரிமை யதார்த்த நிலை அடைவதற்கு அரசாங்கத்திடமிருந்து வேண்டிய தகவல்களை பெற்றுக்கொள்ளும் அடிப்படை உரிமை ஒரு நிபந்தனையாகும் என நம் அண்டை நாடான இந்தியாவின் உயர் நீதி மன்றம் 1975ல் முதல் தடவையாக அடையாளப்படுத்தியது. பின்பு 1981ல் இவ் உயர் நீதி மன்றம் அரசியலமைப்பின் 21ம் பிரிவில் உறுதியளிக்கப்பட்டிருக்கும் வாழ்வதற்கான உரிமை தகவல் பெறும் உரிமையை உள்ளடக்கியிருப்பதாக கருத்தளித்தது. அதன் பிறகு பல சந்தர்ப்பங்களில் இந்நீதிமன்றம் தகவல் பெறும் உரிமையை வலியுறுத்தி தீர்ப்புகள் வழங்கியுள்ளது. 2004ல் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட தகவல் உரிமைக்கான சட்டமூலத்தின் நோக்கங்களுக்கான அறிக்கையானது ஓர்

உள்ளடக்கியுள்ள அடிப்படை உரிமையாக திகழும் தகவல் அறியும் உரிமையை அமுல் படுத்தும் நோக்கிலேயே இச்சட்டமூலம் வரையப்பட்டது என்பதை சுட்டிக்காட்டுகிறது.

பங்களாதேஷின் உயர் நீதி மன்றம் அரசியல் சாசனத்தின் 39(2) ம் பிரிவை பற்றி கருத்து வெளியிட்டபோது இப்பிரிவில் உறுதியளிக்கப்பட்டடிருக்கும் சுதந்திர பேச்சுக்கான உரிமை, பிரஜையின் தகவல் அறியும் உரிமையயும் உள்ளடக்கியுள்ளதாக கருத்துக் கூறியது. இந்திய சட்டவியலை உதாரணமாகக் கொண்ட இவ்உயர் நீதி மன்றம் தகவல் அறிவதற்கான வழிமுறையை மறுப்பது அரசியல் சாசனத்தின் 39(2) ம் பிரிவில் உறுதிசெய்யப்பட்டுள்ள சுதந்திரத்தை மறுப்பதற்கு சமமாகும் என தீர்ப்பளித்தது. 2009ல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பங்களாதேஷின் தகவல் உரிமை சட்டத்தின் முன்னுரை தகவல் அறியும் உரிமையானது அரசியல் சட்டத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ள பேச்சு சுதந்திரம், சிந்தனை மற்றும் உளச்சான்று சுதந்திரம் ஆகியவைகளின் பிரிக்க முடியாத அங்கமாகும் என அடையாளப்படுத்தியுள்ளது.

**பெயரளவிலான பழைய சட்டமாக இருக்கக்கூடாது.**

தகவல் பெற்றுக்கொள்ளும் உரிமையை ஏற்றுக்கொள்வதாக சட்டம் மாத்திரம் நிறைவேற்றப்படுவது போதுமானதல்ல. சட்டம் யதார்த்தமாக, பயனுள்ளதாக அமையவேண்டுமாயின் சர்வதேச தரத்திலான சிறந்த வழக்கத்தை கொண்டதாக அது அமைய வேண்டும். துரதிஷ்டவசமாக சில நியாயாதிக்கங்கள் நிறைவேற்றும் சட்டமானது வெறும் கண்துடைப்பாக இருப்பதோடு உண்மையான ஏற்பாடுகளில் தரக்குறைவானதாகவே இருக்கின்றது. உதாரணமாக பாகிஸ்தானின் 2002ம் ஆணடின் தகவல் சுதந்திர கட்டளைச் சட்டம் வரையறுக்கப்பட்ட அரச அங்கங்கள் மற்றும் தகவல்களை மாத்திரமே உள்ளடக்கியள்ளதோடு மிக பரந்த விதிவிலக்குகளையும் அளிக்கிறது. இன்னும் கோரப்படும் தகவல்களை கொடுப்பதற்கு மறுப்பு தெரிவிப்பதை அத்தகவலை மறுப்பதால் பொதுமக்கள் நலன் பெரிதும் பாதிக்கப்படுமா என்ற முக்கிய பரிசோதனைக்கு பாத்திரப்படுத்துவதுமில்லை. மேலும் மேன்முறையீட்டுக்கான ஏற்பாடுகளும் திருப்தியானதாக இல்லை. விசாரணை நடத்தும் முறைகளோ அல்லது முறையீட்டை விசாரிக்கும் அதிகாரிகளின் பலம் பற்றியோ குறிப்பிடப்படவில்லை.

1997ல் தகவல் உரிமைக்கான சட்டத்தை உருவாக்கிய இந்தியாவின் மாநில அரசான தமிழ் நாடு அரசு தகவல் வெளிப்பாட்டுக்கு விதிவிலக்கான தகவல்களின் 23 பிரிவுகளை அடையாளப்படுத்தியது. இந்திய பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட அதிக முன்னேற்றமுடைய 'தகவல் அறியும் உரிமை' சட்டத்தின் பின் தமிழ் நாட்டு அரசின் இந்தச் சட்டம் இல்லாதொழிக்கப்பட்டது.

**சட்டவாக்கத்தின் குறிக்கோள்கள்**

உச்சக்கட்ட வெளிப்பாடு சம்பந்தமான நியதியுடனும் வழிமுறைக்கு சார்ப்பான வலுவான ஊக்கத்துடனும் சட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும். தெளிவான வார்த்தைகள் அடங்கிய குறிக்கோள் பற்றிய வாசகம் முக்கிய கோட்பாடுகள் அடிப்படையில் அரசாங்கத்தை செயல்பட வைப்பதோடு நிர்வாக மற்றும் நீதித்துறை கருத்தக்களுக்கும் உதவும்.

சட்டத்தின் முன்னுரையும் குறிக்கோளும் வழிமுறைக்கான சட்டம் நிறைவேற்றப்படுவதன் காரணத்தையும் அதன் விரிவாக்கத்தையும் தெளிவு படுத்தும். உச்சக்கட்ட வெளிப்பாடு, வெளிப்படைத் தன்மை, பொறுப்பு கூறல் மற்றும் மக்களின் தகவல் பெறும் உரிமை ஆகியவைகளை ஆதரித்து வெளியாகும் அறிக்கைகளுமே அரசாங்கம் வெளிப்படையான, திறந்த ஆட்சிக்கு பொறுப்பாக தன்னை அர்ப்பணித்துள்ளது என்ற செய்தியை மக்களுக்கும் பொது அதிகாரிகளுக்ககும் எடுத்துக் கூறும். மாறாக மக்களின் தகவல் அறியும் உரிமையை அடையாளப்படுத்த தவறுவதோ உரிமையின் வரையறையை சரியாக குறிப்பிட தவறுவதோ அதிகாரிகள் சட்டத்தை கட்டுப்பாடோடு கருத்துக் கூற வழிவகுக்கும்.

இந்தியாவின் 2005ம் ஆண்டின் தகவல் அறியும் உரிமை சட்டம் அதன் நோக்கத்தை பற்றி பிரத்தியேகமாக கூறுகிறது. "பொது அதிகார நிறுவனங்களின் செயல்பாடுகளில் வெளிப்படைத் தன்மையையும், பொறுப்பணர்ச்சியையும் ஊக்குவிப்பதற்கே" என கூறுவதோடு "தடையின்றி தகவல் பெறக்கூடிய பிரஜைகள் இருப்பதே ஜனநாயகத்தின் தேவைப்பாடு" என்றும் குறிப்பிடுகிறது. இன்னும் 'தகவல் வெளிப்பாடும், ஊழல் தடுப்பும், மக்களுக்கு பொறுப்பு சொல்லக் கூடிய அரசாங்கம் மற்றும் அரசாங்க நிறுவனங்களும் ஜனநாயகத்தின் செயல்பாடுகளுக்கு அவசியம்' என்பதையும் சட்டத்தின் நோக்கமாக முன்னுரை கூறுகிறது.

1982ம் ஆண்டின் இந்தியாவின் தகவல் உரிமைக்கான சட்டம் அதன் குறிக்கோளை பற்றி கூறும்போது 'அவுஸ்திரேலிய சமூகத்திற்கு முடிந்த அளவு தகவல் அறியும் வழிமுறையை பரவலாக்குவதே' எனக் குறிப்பிடுகின்றது. இருப்பினும் இதற்கு எதிர்மாறாக பாகிஸ்தானிய கட்டளைச் சட்டம் மக்களுக்குள்ள தகவல் அறியும் உரிமையை பிரத்தியேகமாக பிரகடனம் செய்யத் தவறியுள்ளது.

தகவல் வெளிப்பாடு மற்றும் தடை ஆகியவைகளுக்கு மத்தியில் சம நிலையை ஏற்படுத்தும் வழிக்காட்டல்களையும் குறிக்கோள் வாசகம் குறிப்பிடுவதுண்டு. அவுஸ்திரேலிய நாட்டின் 1999ம் ஆண்டின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 'தகவல் வெளிப்பாடு மிகக் குறைந்த கட்டணத்திற்கு, சரியான நேரத்திற்கு மக்களால் பெறப்படுவதை முடியமான வரை எளிதாக்கும்' வகையில் அதற்கான ஏற்பாடுகள் அமையவேண்டும் என்பதை தெளிவுப்படுத்துகிறது. 1982ம் ஆண்டின அவுஸ்திரேலிய நாட்டின் தகவல் உரிமைச் சட்டம் "அரசாங்க தகவல்கள் பொது மக்களுக்கு கிடைப்பது அவசியம்" என தெளிவுப்படுத்துகிறது. "தகவல் வெளியிடலிலிருந்து விதிவிலக்கு பெறும் விடயங்கள் குறிப்பிடப்பட்டவையாகவும், மட்டுப்படுத்தப்பட்டதாகவும் இருப்பதோடு இது சம்பந்தமான விடயங்கள் அரசாங்கத்தோடு சம்பந்தமற்ற சுதந்திர அடிப்படையில் மறுபரிசீலனை செய்யப்படவேண்டும்" எனவும் இச்சட்டம் கூறுகிறது.

இலங்கையின் 2003ம் ஆண்டின் தகவல் சுதந்திர மாதிரி சட்டமூலம் ஓரளவுக்கு மேலுள்ள முக்கிய விடயங்களை உட்படுத்தியிருந்தது. இம்மாதிரி சட்டமூலத்தின் முன்னுறையில் கூறப்பட்டிருந்த குறிக்கோள்களாக "பொது நிறுவனங்களில் பொறுப்பு கூறும் தன்மை, வெளிப்பாட்டுத்தன்மை ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்காகவும், மக்களின் உரிமைகளை பாதுகாத்து, செயல்படுத்தும் வகையில் தகவல் பெறுவதற்கான செயல்திறன் மிக்க வழிமுறையை இலங்கை மக்கள் அடையும் சமூக சூழலை செயல் வடிவமாய் ஊக்கவிப்பதற்காகவுமே" என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

---

**உள்ளடக்கத்தின் அளவு**

உச்சக்கட்ட வெளிப்பாட்டுக் கொள்கை சட்டத்துக்கு ஊக்குவிப்பாக அமைவதோடு சட்டத்தின் உள்ளடக்க அளவு முடியுமான வரை விபரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

---

### உள்ளடக்கப்படுவது யாரை?

எல்லா பொது நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், பொது பணிகளை மேற்கொள்ளும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது நிதியை செலவிடும் அல்லது பொது மக்கள் உரிமையை பாதிக்கும் செயல்பாடுகளோடு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அனைத்தும் சட்டத்துக்குள் உள்ளடக்கப்படவேண்டும்.

மரபு ரீதியாக சட்டவாக்க சபை நீதித்துறை ஆகியவைகளிடமிருந்து தகவல் பெறுவதைவிட நிறைவேற்று அதிகாரமுள்ளோரிடமிருந்து தகவல் பெறுவதில்தான் சட்டம் கவனம் செலுத்துவதுண்டு. நிறைவேற்று அதிகார அரசாங்கத்தில் அரச தலைவருக்கு சிலவேளைகளில் விதிவலக்கு அளிக்கப்படுவதுமுண்டு. நவீன தேர்தல் முறை ஜனநாயகத்தில் இந்த கட்டுப்பாடற்ற விதிவிலக்கு கேள்விக்குரியதாகும்.

தகவல் அறியும் வழிமுறைக்கான சட்டவாக்கத்தின் உள்ளடக்க ஏற்பாட்டில் ‘பொது அதிகாரிகள்’ அல்லது ‘குறிப்பிடப்பட்ட அதிகாரிகள்’ என்பதன் வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டிருக்கும். பொதுநலவாய அமைப்பின் பெரும்பாலான தகவல் சட்டங்களில் அமைச்சுக்கள், அரசாங்க திணைக்களங்கள், பொது நிறுவனங்கள், உள்ளூர் அதிகார சபைகள், அரச கூட்டுத்தாபனங்கள், விசாரணை ஆணைக்குழுக்கள், பொது சேவை ஆணைக்குழுக்கள் ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்திய சட்டமானது அரசமைப்பின் ஊடாக அல்லது அரசாங்க சட்டத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட எந்த அதிகார சபையோ அல்லது அரசாங்க நிதிவளங்கள் மூலம் கட்டுப்படுத்தப்படும் அல்லது உருவாக்கப்படும் எந்த நிறுவனங்களையும் உள்ளடக்கும் அளவுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது. இந்திய சட்டத்தில் ‘தகவல்’ என்பதன் வரைவிலக்கணம் “அமுலிலிருக்கும் எந்த சட்டத்தாலும் உருவாக்கப்பட்ட பொது நிறுவனங்களால் மதிப்பீடு செய்யமுடியுமான தனியார் நிறுவனங்கள் பற்றிய தகவல்” என்பதையும் உள்ளடக்குகிறது. இந்த அரிதான உருவாக்கமானது பொது மக்கள் எந்த சட்டத்தின் அல்லது துணை சட்டத்தின் கீழும் தமக்கு தேவையான தரவுகள் அல்லது அறிக்கைகளை பெற்று தரும்படி பொது நிறுவனங்களை கோருவதற்கு வழிவகுக்குகிறது.

தனியார் நிறுவனங்களால் வைக்கப்பட்டிருக்கும் தகவல்களை நேரடியாக உள்ளடக்கும் வகையில் வழிமுறைக்காண சட்டங்கள் தற்பொழுது விஸ்தரிக்கப்படுகின்றன. தென்னாபிரிக்காவின் தகவல் அறிவதற்கான வழிமுறை ஊக்குவிப்பு சட்டம் மற்றும் அண்மை கால அண்டிகுவா மற்றும் பார்படா அகிய நாடுகளின் தகவல் சுதந்திர சட்டம் (2004) இதற்கான உதாரணமாகும். சட்டரீதியாக அமுலாக்கப்பட வேண்டிய உரிமைகளை பாதுகாக்கவோ அல்லது அமுலாக்கவோ தேவைப்படும் தகவல்களாயின் அவற்றை தனியார் நிறுவனங்களிடமிருந்தும்

பெற்றுக்கொள்ள இச்சட்டங்கள் வழிவகுக்கின்றன. அதோடு இச்சட்டங்களுக்குள்ளாகும் பொது அல்லது தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்தியிருக்கும் வேறொரு ஒப்பந்ததாரர் வசமிருக்கும் தகவல்களை பெற்றுக்கொள்ளவும் இந்த சட்டங்கள் வழி வகுக்கின்றன. 2000ஆம் ஆண்டின் ஐக்கிய இராச்சிய தகவல் சுதந்திர சட்டம் கூறும் □பொது அதிகாரிகள்□ என்ற பதம் பொது நிறுவனங்கள் சார்பில் தகவல்களை வைத்திருக்கும் ஏனைய நபர்களையும் உள்ளடக்குவதாக வரைவிலக்கணங்கள் கூறுகிறது. இதன் அடிப்படையில் அரசாங்க ஒப்பந்ததாரர்களும் பொறுப்பு கூறும் வட்டத்துக்குள்ளாகிறார்கள். இன்னும் பொது நிறுவனங்களோடு ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்படி பணிகளை மேற்கொள்ளும் தனியார் நிறுவனங்களை உள்ளடக்கக்கூடியவாறு கட்டளை பிறப்பித்து சட்டத்தை விரிவாக்கவும் இச்சட்டம் அனுமதி வழங்குகிறது. 2002ம் ஆண்டின் ஜமைக்கா நாட்டின் தகவல் அறியும் வழிமுறைச் சட்டம் ஜமைக்கா சமூகத்தின் நலன்பாடுகளுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்கும் தனியார் நிறுவனத்தை சட்டத்துக்குள் கொண்டுவரும் அதிகாரத்தை சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு வழங்குகிறது. இந்த ஏற்பாடுகளுக்கு கீழ் குறிப்பிட்ட தனியார் நிறுவனத்தின் எல்லா தகவல்களும் வெளியிடப்படமாட்டாது. மரபு ரீதியான வரையறைகளுக்குள் சிறப்புரிமைகள் (அதாவது வைத்தியருக்கும் நோயாளிக்கும் இடையிலான தகவல் கணவன் மனைவிக்கிடையிலான தகவல்) தனிப்பட்ட அந்தரங்கங்கள், வர்த்தக இரகசியங்கள் போன்றவையும் அடங்கும்.

இலங்கையின் தகவல் சுதந்திர சட்டமூலம் ஒரு நிறுவனம் தகவல் வெளிப்பாட்டு கடமை கொண்டதா? இல்லையா? என அறிவதற்கான விதிகளை தெளிவாக கூறியுள்ளது. பொது நிறுவனங்களிடமிருந்து தகவல்கள் பெறுவதற்கு மக்களுக்கு உரிமையுண்டு என்பதை இச்சட்டமூலத்தின் 2ம் பிரிவு குறிப்பிடுகிறது. பொது அதிகாரி எனும் பதத்தின் விரிவாக்கத்தை பொருளாக்கப்பிரிவு தெளிவுபடுத்துகிறது. அரசாங்க அமைச்சுகள், திணைக்களங்கள், அரசியலமைப்பின் மூலம் உருவாக்கப்பட்ட நிறுவனங்கள், அலுவலகங்கள், பொதுக்கூட்டுத்தாபனங்கள், அரசு பங்குதாரராய் இருக்கும் கம்பனிகள், உள்ளூராட்சி மன்றங்கள், மற்றும் மாகாணசபையால் உருவாக்கப்பட்ட திணைக்களங்கள், நிறுவனங்கள் ஆகியன இப்பதத்துக்குள் அடங்கும். ஆனால் பாராளுமன்றமும் அமைச்சர்களும் இப்பட்டியலுக்குள் கொணடுவரப்படவில்லை. இது ஒரு சிறந்த வழிமுறையல்ல. காரணம் இந்தச்சபைகள் மக்களின் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும். இச்சபைகள் இலங்கை மக்களின் பெயராலும் மக்கள் செலுத்தும் வரியினாலுமே செயல்படுகின்றன.

### யாருக்கு தகவல் பெறலாம் ?

எந்த நாட்டின் தகவல் அறியும் சட்டமாகினும் அச்சட்டத்தின் மூலம் எந்த ஒரு தனி நபருக்கும், பிரஜையோ பிரஜையாக இல்லாதவரோ தகவல் பெற்றுக்கொள்ள முடியும். மக்கள் தகவல் கோருவதற்கான எந்த காரணமும் கூறத் தேவையில்லை.

சில சட்டங்கள் தகவல் கோருபவர் ஒரு பிரஜையாக இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. வேறு சில சட்டங்கள் யாரும் தகவல் கோரி பெற்றுக்கொள்ளலாம் என கூறுகிறது. சிலவேளை ஒரு பிரஜையாக இல்லாவிடின் ஒரு சட்டப்படியான நிரந்தர வசிப்பாளியாக இருக்கவேண்டுமென்றோ அல்லது தொடர்புகளுக்காக உரிய நாட்டின் தகுந்த விலாசம் தரப்பட வேண்டும் என்றோ கோருகின்றன. நியூஸிலாந்து நாட்டின் 'உத்தியோக தகவல் அறியும் சட்டம்' (1982) தகவல் பெற தகுதியுடையோர் பட்டியலில் வர்த்தக நிலையங்களையும் அந்நாட்டில் வர்த்தகம் புரியக் கூடிய இடம் இருப்பவர்களையும் உள்ளடக்குகிறது. வரி குறிப்பேடுகள், வைத்திய பதிவுகள் சமூக பாதுகாப்பு பத்திரங்கள் போன்ற தனி நபர் தகவல்களை பெற சட்டம் அனுமதி வழங்கும் வேளையில் கடும் நிபந்தனையுடனேயே அனுமதி வழங்குகிறது. எவ்விடயத்திலாவது சர்ச்சையாக மாறியிருக்கும் தனி நபர் தகவல்களை மாத்திரமே இவ்வகையில் பெற முடியும் என்பதை தனி நபர் அந்தரங்கங்கள் பாதுகாக்கும் அவசியம் வலியுறுத்துகிறது.

பொதுநலவாய நாடுகள் எதிலும் தகவல் வேண்டி நிற்பவர் அதற்கான காரணத்தை கூறவேண்டியதில்லை. இருப்பினும் சிலவேளை தகவல் மிக அவசரமாக கோரப்பட்டால் அதற்கான காரணம் கூறப்படவேண்டிய அவசியம் உள்ளது. நேபாள நாட்டில் தகவல் கோருபவர் அதற்கான காரணத்தை தெரிவிக்க வேண்டும். அல்லது தகவல் கோரப்படும் விடயத்தில் அவர் ஒரு பங்குதாரி என்பதை காட்டவேண்டும். தகவல் வெளிப்பாட்டை விரும்பாத, தடுக்கின்ற அதிகாரிகள் அடிக்கடி கூறும் காரணம்தான் தகவல் கோரும் விண்ணப்பத்துக்கு பின் தீய காரணங்கள் இருக்கலாம் என்பது. எனவே அவர்கள் காரணத்தை அறிய வேண்டும் என வாதிடுகிறார்கள். ஆனால் தகவல் கோருவதற்கான நோக்கம் சம்பந்தமற்றது. தகவல் அறியும் அணுகுவழியானது அவசியப்பாட்டடிப்படையிலான கருத்தல்ல. மாறாக தனிநபர் மற்றும் குழுக்களின் இலவச பாவனைக்கான பொதுவளமே தகவல் என்ற அடிப்படையிலான உரிமை கோட்பாடாகும்.

இலங்கையின் தகவல் சுதந்திரம் தொடர்பான சட்டமூலம் நாட்டு பிரஜைகளுக்கு மாத்திரமே தகவல் பெற்றுக்கொள்ளும் உரிமையை கொடுக்கிறது. இது பங்களாதேஸ், இந்தியா, நேபாளம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் உள்ள வழக்கத்தை ஒத்ததாகும். நாட்டின் பிரஜையாக இருக்கவேண்டும் என்பது தகவல் பெறுவதற்கான நிபந்தனையாகும். இது தவறான ஒரு வழக்கமாகும். நாட்டின்

பிரஜைத் தன்மையை பாராது வாழும் உரிமை எப்படி எல்லா தனி நபருக்கும் சர்வதேச மட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளதோ அதே போன்று தகவல் பெறும் உரிமையை எந்த நாட்டவராயினும் பெற்றுள்ளவராய் இருத்தல் வேண்டும். காரணம் தகவல் அறியும் உரிமையானது சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமையாகும். இந்திய சட்டத்தை போலல்லாது இலங்கை சட்டமூலத்தில் தகவல் கோரும் நபரை காரணம் கேட்டு எந்த அதிகாரியும் வற்புறுத்த முடியாது என தடை விதிக்கும் ஏற்பாடுகள் இல்லை. ஆனால் தகவல் கோருபவர் குறிப்பிட்ட அதிகாரியின் அனுமதியின்றி பெற்ற தகவலை பிரசுரிக்க முடியாது என்ற தடை உள்ளது. இத்தடையானது அரசியல் சட்டம் வழங்குகின்ற பேச்சுரிமை சுதந்திரத்துக்கு எதிரான ஒரு கட்டுப்பாடாகும். தகவல் அறியும் உரிமை சட்டவாக்கம் மூலம் தகவல் வழங்குவதென்பது அதனை எந்த நபரும் அடைந்து கொள்ளும் வழிமுறையை தடுக்க முடியாது என்பதற்கு ஒப்பானதாகும். ஏனெனில் ஒரு நபருக்கு கொடுக்க முடியுமான தகவல் எல்லா நபருக்கும் கொடுக்க முடியுமானதாகவே இருக்கும். பெற்றுக்கொண்ட தகவலை அக்குறிப்பிட்ட நபர் பிரசுரித்தால் ஏனையவர்கள் அத்தகவலை மீண்டும் கோரும் தேவையும் ஏற்படாதவாறு பொது அதிகாரியின் சுமையை குறைக்கும். ஜனநாயகம் என்பது 'கலந்துரையாடல் அடிப்படையிலான அரசாங்கம்' என அதிகமாக உணர்த்தப்பட்டு வருவதால் அரசாங்கத்தின் கொள்கை, முடிவுகள், செயற்பாடுகள் ஆகியவற்றை விவாதிப்பதற்காக 'தகவல் அறியும் உரிமையை' பாவிப்பதற்கு ஊக்குவிக்க வேண்டுமே தவிர கட்டுப்பாடு விதிக்கக்கூடாது.

### உள்ளடக்கப்படுபவர் யார்?

தகவல் என்பதன் வரைவிலக்கணம் பல விடயத்தை உள்ளடக்கியதாகவும் பரவலானதாகவும் அமைய வேண்டும்.

சட்டத்தில் உள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் அர்த்தமும் செயல்பாடும் உண்டு. எனவே மக்களுக்கு எதனை வெளிப்படுத்தவேண்டும் என முடிவு செய்வதற்கு தகுதியாக “பதிவுகளுக்கு” அல்லது “பத்திரங்களுக்கான” வழிமுறை என்பதைவிட “தகவலுக்கான” வழி என்ற பதமே மிக பொருத்தமானதாகும். மற்ற இரண்டு பதங்களும் மட்டுப்படுத்தப்பட்ட பதங்களாகும். “தகவல்” என்ற சொற்பொருள் எழுதப்பட்ட குறிப்புகளைவிட மேலாக கட்டிட வேலைகளில் பாவிக்கும் பொருட்களின் மாதிரிகள், இன்னும் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி செயல்பாடுகள் சம்பந்தமான பொருட்களின் தரத்தை பெற விரும்புவோருக்கு முக்கியம் என கருதப்படும் பொருட்கள் ஆகியவைகளையும் உள்ளடக்கும்.

தகவலுக்கான வழிமுறையை அனுமதிப்பது என்பது விண்ணப்பதாரி விண்ணப்பிக்கும் வேளையில் எழுத்து வடிவில் இருக்கும் தகவலை மட்டும் பெற்றுக்கொள்ள அவரை அனுமதிப்பதல்ல. குறிப்பாக இந்தியாவின் தகவல் அறியும் உரிமைக்கான சட்டம் (2005) "தகவல்" என்பதற்கு பரந்ததொரு விளக்கத்தை கொடுக்கிறது. இவ்விளக்கம் பொதுவேலைகளை பார்வையிடுவதற்கும் அவ்வேலைகளில் உபயோகிக்கப்படும் பொருட்களின் மாதிரிகளை பெற்றுக்கொள்வதற்கும் அனுமதி வழங்கும். இவ்விடயமானது பொது வேலைகளில் ஊழல் இடம்பெறுவதை மக்கள் கண்காணிப்பின் மூலம் சரிபடுத்த முடியும் என்பதை உணர்த்துவதோடு பல நாடுகளில் ஊழல் புரிவது என்பது கடினமானது என்பதையும் அடையாளப்படுத்துகிறது.

நடைமுறை ரீதியில் தகவல் கோரும் ஒருவரால் வேண்டப்படுகின்ற விடயங்கள் ஒரு பதிவில் அல்லது ஒரு பத்திரத்தில் அடங்கியிருக்காது. உதாரணமாக அரசாங்கத்தால் ஒரு ஒப்பந்ததாரருக்கு எத்தனை முறை ஒப்பந்தம் கொடுக்கப்பட்டது என்ற தகவல் (அரசாங்கம் - ஒப்பந்ததாரர் ஆகியோரின் உறவு பற்றி தெளிவு படுத்தும் தகவல்) வித்தியாசமான திணைக்களங்களில் பரவி பல பத்திரங்களில் இருக்கும். எனினும் இத் 'தகவல்' அரசாங்கத்திடமே உள்ளது. இது போன்று ஒருவர் கோரும் தகவலானது பல பத்திரங்களில் இருக்கும். அல்லது பல மூலங்களிலிருந்து பெறும் தகவலாகின்றபோதே பிரயோசனமாக இருக்கும். ஒரு குறிப்பட்ட நோய் சம்பந்தமான முழு வருடத்திற்குமான தரவுகள் அடங்கிய தகவல்கள் பல நிறுவனங்களிலிருந்து ஒன்று திரட்டப்பட்ட பின்பே அறிவு பூரணமானதாய் திகழும்.

துரதிஷ்டவசமாக பொதுநலவாய நாடுகளின் சட்டம் உத்தியோகப்பூர்வ குறிப்புகளையும் பத்திரங்களையுமே உள்ளடக்குகின்றன. ஆனால் நியூசிலாந்து நாட்டின் உத்தியோகப்பூர்வ தகவல் சட்டம் "உத்தியோகப்பூர்வ தகவல்" என்ற பதத்துக்கு பரவலான அர்த்தத்தை அளிக்கிறது. பொது அதிகாரிகளால் எழுத்தில் வைத்திராத ஆனால் வைக்கவேண்டிய தகவலையும் உள்ளடக்கும் வகையில் நீதிமன்றங்கள் இப்பதத்தை அர்த்தப்படுத்துகின்றன. அதே போன்றே ஐக்கிய இராச்சியத்தின் சட்டமும் வெறும் குறிப்புகளை மாத்திரம் தகவலாக மட்டுப்படுத்தாமல் மிகவும் பரவலான தகவல் உரிமைக்கு வழிவகுக்குகிறது. ஆகவே தகவல் அறியும் உரிமை சட்டங்கள் பலதரப்பட்ட ஊடகங்களின் உள்ளடக்கத்தையும் புதிய தொழில்நுட்பம் பாவிக்கும் தகவல் உள்ளடக்க முறைகளையும் உள்ளடக்கியதாக அமைவது அவசியம்.

இலங்கையின் சுதந்திர தகவல் சட்டமூலம் வெறுமனே உத்தியோகப்பூர்வ குறிப்புகளை மாத்திரம் உள்ளடக்காது "உத்தியோகப்பூர்வ தகவல்" களை உள்ளடக்கக்கூடிய நோக்கத்தைக் கொண்ட முன்னேற்றகரமான சட்டமாக உள்ளது. அதன் "உத்தியோகப்பூர்வ தகவல்" என்ற பதம் மட்டுப்படுத்தப்பட்டதாக இல்லாமல் கடித, மற்றும் ஏனைய தொடர்ப்புகள், பத்திரங்கள், மாதிரி சட்டமூலங்கள், புத்தகம், வரைப்படங்கள், புகைப்படம், சினிமா படச்சுருள், நுண்படலம், ஒலி.்.ஒளிப்பதிவு நாடா, இயந்திர வாசிப்புச் சார் பதிவுகள், கணனிப் பதிவுகள் மற்றும் இதர குறிப்பேடுகள் ஆகிய பரவலான குறிப்புச் சாதனங்களை உள்ளடக்குவதோடு இவைகளின் பிரதிகளையும் உள்ளடக்குகிறது.

## செயல்முறை வெளிப்பாடுகள்

ஓர் அரசாங்கம் அதன் மக்களுக்கு பொது நிறுவனங்களின் செயல்பாடுகள், வடிவமைப்புகள், நியமங்கள், நிதி முதலான நிலைப்பாடுகள், ஆலோசனைக்கான சந்தர்ப்பங்கள் போன்ற மக்கள் சார் விடயங்களை காலத்துக்கு காலம் செயல்முறை அடிப்படையில் அறிவிக்க வேண்டும் என சட்டம் கடமைப்பாட்டை விதிக்கவேண்டும்.

அரசாங்கத்திடமிருந்து தகவல் பற்றிய அறிவும் அதனை எப்படி பெறுவது என்பது பற்றியும் மக்களுக்கு போதிய அளவு தெரியாமல் இருப்பதால் அது பற்றி அறிவிப்பது மிகவும் முக்கியமாகும். இவ்வமைப்பில் காத்திரமான தகவல் கொடுபடுகின்றபோது தகவல் அறியும் சட்டத்தின் கீழ் தகவல் கோரும் வேண்டுதல்கள் மிக மிக குறைவாகவே இருக்கும். இவ்வடிப்படையில் மிக முக்கியம் வாய்ந்த தகவல்களாக திணைக்கள வடிவமைப்புகள் மற்றும் செயல்பாடுகள், திணைக்களங்களின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பதிவுகள், திணைக்கள உத்தியோகத்தர்களால் நிர்வாக காரணங்களுக்காக பாவிக்கப்படும் கைநூல்கள் தகவல் கோரல் சம்பந்தமாக கடமை புரியும் அதிகாரிகள் பெயர், விலாசம் ஆகியவைகள் வழமையாக பிரசுரிக்கப்படவேண்டும் என்ற சட்டங்கள் அதி முக்கியத்துவம் பெறுகிறது. திணைக்களங்களின் கட்டமைப்பு, செயல்பாடு, அதிகாரிகளின் முடிவெடுக்கும் அதிகாரம், கொள்கை வகுப்பில் மக்களுடனான ஆலோசனைக்கான ஏற்பாடுகள், அதிகாரிகள் வசம் இருக்கும் பத்திரங்களின் வகைகள் ஆகிய அடிப்படை தகவல்களை திணைக்களங்கள் பிரசுரிக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு பல பொதுநலவாய நாட்டு சட்டங்களில் உள்ளது. தென் ஆபிரிக்காவில் அரசாங்க தகவல் அதிகாரிகளின் தொடர்பு விவரங்கள் எல்லா தொலைபேசி விவரப்புத்தகத்திலும் அவசியம் பிரசுரிக்கப்படவேண்டும் எனற விதி உள்ளது. பெலிசே நாட்டு சட்டத்தின் (1994) பிரகாரம் அடிப்படையான திணைக்கள செயல்முறைகள் பற்றிய குறிப்பேடு இல்லாதிருந்தால் அதன் காரணமாக ஏற்படும் தவறுகள், குறைபாடுகளுக்காக எந்த நபரும் மன்னிக்கப்படலாம்.

இந்திய தகவல் அறியும் உரிமைச் சட்டம் (2005) பொதுநலவாய அமைப்புகள் சட்டத்தைவிட ஒரு படி மேல் சென்று செயல்முறை வெளிப்பாடுகள் பற்றிய விதிகளை அமைத்துள்ளது. இவ்விதி பொதுவான பொறுப்புச் சொல்லும் தன்மையை வளர்ப்பதற்காக அரசாங்க தகவல்களை பிரசுரிப்பதை செய்கை ரீதியாக அமுல்படுத்த வழி வகுக்குகிறது. இன்னும் ஊழியர்களின் விவரப்பட்டியல், அமுல்படுத்தும் சட்டங்கள், தண்டனைச்சட்டங்கள், விதிமுறைகள், அதிகாரிகளின் அதிகாரம் மற்றும் கடமை, அவர்களின் செயல்பாடுகளுக்கான நியமங்கள், அவர்களின் சம்பவங்கள், ஏனைய கொடுப்பனவுகள், திணைக்கள வரவுசெலவு திட்டம், அரசாங்கத்தின் சலுகைகள், அனுமதி பத்திரங்கள், மானியங்கள் பெறுவோர் விவரம் ஆகிய விடயங்களையும் வழமையாக பிரசுரிக்கவேண்டும் என இச்சட்டம் வற்புறுத்துகின்றது. பொது அதிகாரிகள் தமது நிர்வாக அல்லது தோற்றமளவிலான விசாரணை முடிவுகளுக்குறிய காரணத்தை அம்முடிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவேண்டும் எனவும் அதேபோல் பொது மக்களை பாதிக்கும் கொள்கை வகுப்புகள், முடிவுகள் ஆகியவைகளை அறிவிக்க வேண்டும் எனவும் இச்சட்டம் கூறுகிறது. அத்துடன் சாதாரன மக்கள் விளங்கிக் கொள்ளும் வகையிலான மொழிகளில், தேவையான தகவல்களை செயல்வடிவமாக வழங்குவதற்கு பொது அதிகாரிகள் முழு முயற்சி எடுக்கவேண்டும் எனவும் சட்டம் வலியுறுத்துகின்றது.

இலங்கையின் சட்டமூலம் ஜனாதிபதியும், அமைச்சர்களும் தமது நீதியாதிக்கத்தில் உள்ள விசேட தகவல் வகைகளை இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு வழங்குவதை உறுதி செய்யவேண்டும் என கோருகிறது. அரச அதிகாரிகளின் அமைப்பு, செயல்பாடுகள், அதிகாரம் மற்றும் கடமை, அமைச்சர்கள் ஊழியர்கள் ஆகியோரின் செயல்பாடுகள். பொது அதிகாரிகளால் தங்கள் செயல்பாடுகளை நடத்த வழிவகுத்துள்ள நியமங்கள், விதிமுறைகள், அறிவுரைகள், கையேடுகள் மற்றும் அதிகாரிகளின் பதிவுகள், தகவல் அதிகாரிகளின் பெயர், பதவி, தொடர்பு விவரங்கள் மக்கள் தகவல் பெற்றுக்கொள்வதற்காக ஏற்படுத்தியுள்ள வழிவகைகள் ஆகிய தகவல்கள் சுயேச்சையாக வெளிப்படுத்தப்பட வேண்டும். அபிவிருத்தி திட்டங்கள் பற்றிய அனைத்து தகவல்களையும் செயல்முறை அடிப்படையில் பொது மக்களுக்கும், அபிவிருத்தி திட்டத்தால் பாதிக்கப்படும் மக்களுக்கும் சம்பந்தப்பட்ட வேலைகளை துவங்கும் முன்பே வழங்குவது ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களது கடமையென சட்ட மூலம் வலியுறுத்துகிறது. இருப்பினும் அதற்கான நிர்வாக அல்லது தோற்றமளவிலான நீதித்துறை முடிவுகளை பாதிக்கப்பட்டவருக்கு அவரது வேண்டுகோளுக்கு மாத்திரமே பொது அதிகாரியால் வழங்கப்படும். இந்தச் சடடத்தின் கீழ் இத்தகவலும் செயல்முறை அடிப்படையில வழங்கப்படவேண்டும்.

**வெளிப்பாட்டிலுள்ள வரையறை**

வெளிப்பாட்டிலுள்ள வரையறைகள் இறுக்கமாகவும், குறுகியதாகவும் விளக்கப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். தகவல் வழங்குதலுக்கான மறுப்புகள் இருப்பின் அவை பொது மக்கள் நலனுக்கு பாதிப்பு ஏற்படும் என்ற அடிப்படையிலேயே மறுக்கப்பட வேண்டும்.

தகவல் அறியும் வழிமுறைக்கான எந்த சட்டமாகினும் அதன் உண்மை தன்மை தங்கியிருப்பது அது விதிக்கும் வெளிப்பாட்டு வரையறையில்தான். அரசாங்கம் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருக்கும் எல்லா தகவலையும் ளெியிடமுடியாது என்பது உண்மையே. ஆனால் “பாதுகாக்கப்பட்ட” தகவல் என்ற வரையறையை நியமிக்கும் பொழுதுதான் இணக்கமின்மை ஏற்படுகிறது. எப்படியான தகவலுக்கு விதிவிலக்களிப்பது என தீர்மானிப்பதில் சட்ட முறையான நலன்பாடுகளுக்கு மத்தியில் தடுமாற்ற நிலை உருவாகின்றது. மக்கள் பார்வையிலிருந்து பாதுகாத்து வைக்கவேண்டிய தகவல் சட்டத்தின் ஏற்பாடுகளை பாவித்து நியாயமற்ற முறையில் கூடுதலான தகவலை தடுக்கின்றனர். அனைத்து தகவலும் கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான் அத்தியாவசிய கோட்பாடாக உள்ளது. தகவல் கொடுப்பதால் பொது நலனுக்கு பாதிப்பு ஏற்படுகின்ற பட்சத்தில் அதனை தடுக்கும் விதிவிலக்கு உண்டு. இத்தகைய தடுப்புக்கான முக்கிய குறிக்கோள் உண்மையில் பொதுநல ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பாக இருக்கவேண்டும். அமைச்சு பத்திரங்கள், புலனாய்வு நிறுவனங்களின் பத்திரங்கள் ஆகியவற்றை பாதுகாக்கும் வகையிலான பெயரளவிலான விதிவிலக்கு நியாயமற்றதாகும். தகவல் வெளிப்பாட்டால் சட்டரீதியான பொது நலனுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுமா என்பதுதான் முக்கியமாக கவனிக்கப்படவேண்டும்.

சர்வதேச தரத்திலான சிறந்த நடைமுறையாக கருதப்படும், 19ம் ஷரத்தின் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ள வகையில் தகவல் உரிமையை ஊக்குவிக்கும் நடைமுறையின் அடிப்படையில் ஒவ்வொரு தகவல் தடுப்பும் 3 அம்சங்களை அவதானத்தில் கொண்டிருக்க வேண்டும்:

1. தகவல் சட்டரீதியான விதிவிலக்கு கொண்டதாக இருக்கிறதா ?
2. தகவல் வெளிப்பாடு உண்மையாகவே பாதிப்பை ஏற்படுத்துமா ?
3. தகவல் வெளிப்பாட்டால் ஏற்படும் பாதிப்பு பொதுநலனை விட கூடுதலான பாதிப்பை ஏற்படுத்துமா?

இலங்கையின் தகவல் சுதந்திரம் தொடர்பான சட்டமூலம் 13 வகையான தகவல் வெளிப்பாட்டு விதிவிலக்குகளை பட்டியலிடுகிறது. தேசிய பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்கும் தகவல் வெளிப்பாடு தனி நபர் அந்தரங்கத்தை பாதிக்கக்கூடிய தகவல்கள் ஒரு நபரின் வாழ்வுக்கும், பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் செலுத்தக் கூடியவை, சர்வதேச உறவுகளை பாதிக்கக் கூடியவை, வர்த்தக இரகசியங்களை வெளியிடக் கூடிய அல்லது நலன்களை பாதிக்கக் கூடியவை, மருத்துவ இரகசியங்களை வெளியிடக் கூடியவை, குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த அல்லது கைது செய்வதை அல்லது குற்றங்களை கண்டுப்பிடிப்பதை தடுக்கக் கூடிய தகவல்கள், இன்னும் அரசாங்கத்தின்பால் முடிவெடுக்கப்படாத விடயங்கள் வரி மதப்பீடு அல்லது சேகரிப்பு நம்பிக்கை அடிப்படையிலான உறவுகள் காரணமாக அந்தரங்கமாய் வைத்திருக்க வேண்டிய தகவல்கள் அல்லது நிபுணத்துவ சலுகைகள் மற்றும் பரீட்சைகள் சம்பந்தமான விடயங்களும் அந்தரங்கமாய் இருக்கவேண்டிய பெறுபேறுகள் ஆகிய அனைத்தும் இப்பட்டியலில் அடங்கும். பிராந்தியத்தின் ஏனைய நாடுகளோடு ஒப்பிடும்போது இந்தியாவை தவிர்த்து இலங்கை தகவல் சுதந்திர சட்டமூலம் குறுகிய பட்டியலையே உள்ளடக்கியுள்ளது.

**விடயங்களை மூடிமறைத்தல்**

பொது அதிகாரிகளால் நடத்தப்படும் விசாரணைகள் பற்றிய தகவல்களை அரசாங்கங்கள் இரகசியமாக வைப்பதற்கு அதிகமான வழிமுறை சட்டங்கள் வழி வகுத்துள்ளன. கலவரங்கள், நிதி மோசடிகள், அரசியல் ஊழல்கள் ஆகிய அவசர பொதுவிடயங்களை ஆராயும் விசாரணை ஆணைக்குழுக்களைத்தான் பொதுவாக இரகசியம் சம்பந்தமான ஏற்பாடுகள் உள்ளடக்குவதுண்டு. பாதிப்பாகும் உண்மை தகவலை இரகசியமாக வைத்திருக்கும் அதேவேளை நீண்ட நாட்கள் செல்லும் விசாரணைகள் பொதுகலவரத்தின் கால எல்லையிலிருந்து மீட்சி பெறும் நல்ல முறையாக அமையலாம். பாகிஸ்தானில் 1971ன் யுத்தம் பற்றி ஆராய நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவை நடத்தும் விடயத்தில் இது தெளிவாகியது.

ஆணைக்குழு 1971 டிசம்பரில் ஸ்தாபிக்கப்பட்டபோதும் அதனது அறிக்கை 1972 ஜுலையில்தான் வெளியாகியது. அவ்வறிக்கை பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படவில்லை. அறிக்கையின் ஒரு சில பகுதிகள் மாத்திரமே தயாரிக்கப்பட்டு யாருக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது என்ற பட்டியல் இரகசியமாகவே வைக்கப்பட்டது. 2000ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்திய

பத்திரிகை ஒன்று அறிக்கையின் மிக முக்கிய பகுதிகளில் நீண்டதொகுதியை வெளியிட்டபோது பாகிஸ்தான் பத்திரிகைகளும் அதனை மீள் பிரசுரம் செய்தன. அதன்பிறகு அறிக்கையின் பெரும்பாலான பகுதிகள் இரகசிய பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இருப்பினும் அறிக்கை வெளியீட்டின் தாமதம் காரணமாக நிகழ்வுக்கு பொறுப்பு கூறும் விடயம் பற்றி தொடர்ந்து நடவடிக்கை எடுக்கமுடியாது போனது. இது ஆணைக்குழுவின் முக்கிய நோக்கத்தை தோற்கடித்தது.

### வகுப்பு∴இனம்∴தனிநபர் அல்லது அமைப்பு மூலம் விதிவிலக்கு இல்லை

சட்டவாக்கம் பரந்த, வரையறையற்ற விதிவிலக்கை தவிர்க்க வேண்டும். பெரும்பாலான நிகழ்வுகளில் குறிப்புகளும் அதன் வெளிப்பாட்டு உள்ளடக்கமும் தனித்தன்மை கொண்டதாகவும் அதன் நலன்களை வைத்து தீர்மானிக்கப்படக்கூடியதாகவும் இருக்கவேண்டும்.

தகவல் அறியும் வழிமுறைக்கான சட்டங்கள் பெரும்பாலும் அரச பதவிகளில் இருப்பவருக்கு அல்லது தேசிய பாதுகாப்பு நிறுவனங்கள், புலனாய்வு நிறுவனங்கள் போன்ற அரசாங்க நிறுவனங்களுக்கு மொத்த விதிவலக்கு வழங்குவதுண்டு. காலனித்துவ மரபுமுறை காலங்களில் அரசருக்கு இருந்தது போன்று இப்பொழுதும் அரச தலைவர்கள் சிலவேளை முற்று முழுதாக சட்டத்திலிருந்து விதிவிலக்கு பெற்றிருப்பார்கள். ஆனால் தகவல் வழுங்குவதிலிருந்து பொது அதிகாரிகளையோ அல்லது முழு நிறுவனங்களையுமோ தவிர்த்து வைப்பதானது பொது மக்களுக்கு பொறுப்பு சொல்வதிலிருந்து அவர்களை நியாயமற்ற முறையில் பாதுகாத்து வைப்பதாகவே உள்ளது. இராணுவ மற்றும் பாதுகாப்பு நிறுவனங்கள் வசமுள்ள மிககுறுகிய வகையிலான தகவல்களே பொதுவாக ‘புலனாய்வு’ தகவல்களாக கருதப்படுகிறது. இத்தகையவைகளே விசேட விதிவிலக்கு வாசகம் மூலம் பாதுகாக்கப்படும். ஏனையவைகள் பொதுதகவலாகவே திகழும். உதாரணமாக தேசிய பாதுகாப்புக்கு ஆள் திரட்டும் விதிகள் அல்லது பாராளுமன்ற உறுப்பினருக்கு வழங்கப்படும் பிரயாண கொடுப்பனவுகள் போன்ற விடயங்கள் இரகசியமானவையல்ல. அர்த்தமற்ற திறந்த விதிவிலக்குகள் கொடுக்கப்பட்டால் அது சம்பந்தமற்ற நிறுவனங்களையும் சேர்க்கும் வண்ணம் விரிவடைந்து செல்லும். உதாரணமாக அவுஸ்திரேலியாவில் ஒலிம்பிக் விளையாட்டுக்கான சிட்னி ஏற்பாட்டுக்குழு மற்றும் அவுஸ்திரேலிய கிரேண்ட் பிரிக்ஸ் நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் சில வழிமுறை விதிமுறைகளிலிருந்து விதிவிலக்கு பெற்றதாகவே இருக்கிறது.

பல சமயங்களில் குறிப்பிட்ட குறிப்பேடுகள் தனிப்பட்ட தகவல் வகைகளைச் சார்ந்தது என கூறி தானாகவே விதிவிலக்கு பெற்றவைகளாக கருதப்படுகிறது. இதுவும் சரியான முறையல்ல. குறிப்பேடுகள் ஒரு குழுவுக்கோ, குறிப்பிட்ட வகைகளுக்கோ சேர்ந்ததாகையால் விதிவிலக்கானதா? எனக்கூற முடியாது. அவைகளின் வெளிப்பாட்டால் பொது நலனுக்கு பாதிப்பு ஏற்பட்டால் மாத்திரமே அப்படி கூறமுடியும். விதிவிலக்கு பெற்ற குறிப்பேடுகள், பத்திரங்களுள் அடங்கக்கூடியவை என கருதப்படுவதானது: நாட்டின் பாதுகாப்பு, வெளிநாட்டுக் கொள்கை மற்றும் சர்வதேச உறவுகளை பாதுகாக்க கூடியவைகள் பொது அதிகாரிகளால் நடத்தப்படும் விசாரணைகள் விசாரணை ஆணைக்குழு சம்பந்தப்பட்டவை, சட்ட அமுலாக்கம் குற்றத் தடுப்பு விடயங்கள் அல்லது மாகாண உறவுகள் சட்ட சலுகைகள், தனிநபர் அந்தரங்கம், பாதுகாப்பு அந்தரங்க திணைக்கள கொடுக்கல் வாங்கல் புலனாய்வு பொருளாதார மற்றும் வர்த்தக தகவல்கள் ஆகிய அம்சங்களை பாதிக்க கூடிய அனைத்து விடயங்களும் இதிலடங்கும்.

மேலதிகமாக பொது சுகாதாரம் ஆபத்துக்குள்ளாகும், பொது மக்கள் சொத்துக்கு பாதிப்பு ஏற்படும், அரசியல் சட்ட மரபுறையின் புனிதத்துவத்தை கெடுக்கின்ற தேர்தல் பட்டியல் அல்லது நடத்தப்படும் ஆய்வுகள் ஆகியவையின் அந்தரங்கம் பாதிக்கின்ற தகவல் வெளிப்பாடுகளும் அடங்கும். தகவல் வெளிப்பாட்டு விதிவிலக்கு ஏற்பாடுகள் மீளாய்வு செய்யப்படவும் வேண்டும். விதிவிலக்கு பெற்ற எல்லா தகவலும் தொடர்ந்து புலனாய்வு அடிப்படை வாய்ந்ததாய் இருக்காது. அதிகாரிகள் தொடர்ச்சியாக விதிவிலக்கு அளிப்பதற்கு சார்பாகவே செயல்படுவார்கள். இரகசிய தகவலாக கருதப்பட்டஅறிக்கைகள் புலங்கூர் நிலையிலிருந்து விலக்கப்படுகின்றபோது அவைகள் மக்களுக்கு வெளியிடப்படக் கூடியவைகளாக மாற்றம் பெறவேண்டும்.

தகவல் அறியும் உரிமைக்கான புதிய சட்டங்கள் விதிவிலக்குகளுக்கான கால எல்லையையும் நிர்ணயிக்கின்றன. உதாரணமாக இந்தியச் சட்டம் விதிவிலக்குகளுக்குள்ளாகும் 10 வியங்களில் 7 விடயங்களை 20 வருடத்துக்கு மட்டுப்படுத்துகிறது. இந்த கால எல்லையைவிட பலமையான தகவல்கள் இந்த 7 விடயங்களுக்குல்லான போதும் அவைகள் வெளிப்படுத்தப்படவேண்டும்.

இலங்கையின் தகவல் சுதந்திர சட்டமூலம் பாராளுமன்றத்தையும் அமைச்சர்களையும் தனது வரையறைக்குள்ளாக்கவில்லை. இந்த ஏற்பாடு சட்டமாக மாறும் பட்சத்தில் இலங்கையர் இவ்விரண்டு அங்கங்களிலிலிருந்து எந்த தகவலையும் உரிமை என்ற அடிப்படையில் பெறமுடியாது. இலங்கையின் இச்சட்ட மூலம் சர்வதேச தரம்வாய்ந்த சிறப்பு வழக்குகளுக்கு மாற்றமாக சில விதிவிலக்குகளையும் உள்ளடக்கியுள்ளது. உதாரணமாக அரசாங்க முடிவுகளுக்கு காத்திருக்கும் விடயம் பற்றிய தகவல் மற்றும் வருமான வரி திணைக்களத்தின்

மதிப்பீடு, வரி சேகரிப்பு பற்றிய தகவல்கள் எந்த வேளையிலும் இரகசியமாக வைத்திருக்க வேண்டும் எனக்கூறுகிறது. இருப்பினும் 13 விதிவிலக்குகளில் 10 விதிவிலக்குகளின் கால எல்லை 10 வருடஙகளில் காலாவதியாகிவிடும். வர்த்தக இரகசியங்கள், நலன்கள் மருத்துவ பதிவுகள், அந்தரங்கங்கள் நிபுணத்துவ சலுகைகளுகுள்ளாகும் தகவல்கள் ஆகியன தொடர்ந்தும் விதிவிலக்கு சலுகைகளுகுள்ளாகும். இந்தியாவை போலல்லாது இங்கு தேசிய பாதுகாப்பு, பாதுகாப்பு சம்பந்தமான விடயங்கள், மற்றும் சர்வதேச உறவு சம்பந்தமான விடயங்களுக்கான விதிவிலக்கு 10 வருடங்களுக்கு பின்னும் அமுலிலேயே இருக்கும்.

**வெளிப்பாட்டுத் தன்மை அதற்குரிய விருதாகும்.**

அரசாங்க கொள்கை மற்றும் அபிவிருத்தி சம்பந்தப்பட்ட விவகாரங்களை வெளியிடுவதால் அதன் தெளிவும் வெளிப்பாட்டுத்தன்மையும் பாதிக்கும் என்ற அடிப்படையில் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் கொள்கை வகுப்பு விடயங்களை வெளியிடாது பாதுகாத்து வருவர். உண்மையில் கொள்கை வகுப்பு கட்டங்களில் அப்படியான விடயங்களை வெளியிடாது பாதுகாப்பதை அவசியமாக கருதினாலும் கொள்கை வகுப்பு முடிவு பெற்ற பிறகு அவைகளை இரகசியமாக பாதுகாப்பது அவசியமற்றதாகும். இதனை அங்கீகரித்து 1994ல் ஐக்கிய இராச்சிய அரசாங்கம் நிதி அமைச்சருக்கும் மத்தியவங்கி ஆளுநருக்கும் இடையிலான மாதாந்த கூட்டத்தின் அறிக்கையை 6 வாரங்களுக்கு பிறகு வெளியிடுவதற்கு தீர்மானித்தது. இக்கூட்ட அறிக்கை முன்பு மிகவும் இரகசியம் வாய்ந்ததாக கருதப்பட்டது. இதனை வெளியிடுவது பலவிதமான கருத்துக்களையும் பாதிப்பையும் உருவாக்கும் என்ற நம்பிக்கையைப் பொய்யாக்கியது. “மந்தமான இணக்கமின்மை என்ற தன்மையைவிட கூட்ட அறிக்கை மிக தெளிவாக உள்ளது. ” என லண்டன் டைம்ஸ் பத்திரிகை கருத்து தெரிவித்துள்ளது.

### அதிகாரிகளின் சொந்த விருப்பு வெறுப்போ அமைச்சர்களின் தடையோ இருக்கக்கூடாது.

விருப்பு தெரிவுகள் மிக கவனமாகவும் தெளிவாகவும் தெரிவு செய்யப்படவேண்டும். அமைச்சர்கள் தகவல் தடை விதிப்பது முற்றிலும் தடுக்கப்படவேண்டும்.

பொதுவாக தகவல் வெளிப்பாடுகள், பரந்த விருப்பத்தடைகள், விதிவலக்குகள் அமைச்சர்களின் தடைகளுக்கு பாத்திரமாவது வழக்கம். தெளிவான பிரமாணங்களை வகுக்காமல், சுயாதீன அங்கங்களுக்கு மேன்முறையீடு செய்யக்கூடிய ஏற்பாடுகளை

செய்யாமல் தகவல் வெளிப்பாடு பற்றிய முடிவுகளை எடுப்பதற்கு திணைக்களங்களுக்கு பரந்த விருப்பு அதிகாரங்களை வழங்குவது தன் வழக்கில் தானே நீதிபதியாக இருப்பதற்கு சமமாகும். இப்படியான அதிகாரத்தை சட்டம் வழங்குவது தகவல் வெளிப்பாட்டு நிலையின் பெரும் குறைபாடாகவே இருக்கும். ஏற்றுக்கொள்ளவே முடியாத இப்படியான விருப்பு அதிகாரங்களை அமைச்சர்களுக்கு வழங்குவதால் தகவல் வெளிப்பாட்டை தடுக்கும் சான்றிதழ்களை அவர்கள் தான்தோன்றித் தனமாக வழங்குவார்கள். ஆவுஸ்திரேலியா மற்றும் ஜமைக்கா ஆகிய நாடுகளின் சட்ட ஏற்பாடுகள் அமைச்சு நடைமுறைகள், சட்ட அமுலாக்கம், பொது மக்கள் பாதுகாப்பு, பொருளாதாரம் ஆகியவைகளை உள்ளடக்கும் வகையில் மிகவும் பரவலானதாக அமைக்கப்பட்டுள்ளது. அமைச்சர்களின் சான்றிதல்கள் முடிவானதாகவும் பலம் வாய்ந்ததாகவும் இருக்கும். சட்டத்தை மேற்பார்வை செய்யும் மேன்முறையீட்டு நியாயச் சபைகளாலும் அவைகளை ரத்து செய்ய முடியாது.

சுய விருப்ப அதிகாரங்கள் எந்த மேற்பார்வையும், நுண்ணாய்வுமின்றி அதிகாரிகளுக்கு வழங்கப்படும்போது அவைகளின் உபயோகம் தகவல் அறியும் வழிமுறை சட்டவாக்கத்தின் அடிப்படை நோக்கங்களை மீறுவனவாகவும் சுயவிருப்பம் கொண்டதாகவும் அமையும். அவுஸ்திரேலியாவில் முன்மொழியப்பட்ட தேசிய அடையாள அட்டையின் விலைமதிப்பு மற்றும் சில சுகாதார நிகழ்ச்சிகள் பற்றிய தகவல் வெளிப்பாடு முற்றாக தடை செய்யப்பட்டது போன்று வரையறையற்ற விருப்பு அதிகாரங்கள் சிந்தனையோடு பாவிக்கப்படாமல் துஷ்பிரயோகம் செய்யப்படும். இது போன்று நியூஸிலாந்து நாட்டிலும் மின்சார சுவர் பொருத்திகளின் டெண்டர் விலை, வேலையற்றோர் மதிப்பீடுகள், பாடசாலைகளில் கணனி பாவனை பற்றிய மதிப்பீடு ஆகிய தகவல்கள் தடை செய்யப்பட்டது. ஐக்கிய இராச்சியத்தில் அமைச்சர்களுக்கு கிடைத்த பரிசுப்பொருட்களின் பட்டியலை வெளியிடும்படி ஆளாட்சியாளர் வேண்டுகோளிட்டதை பிரதம மந்திரி காரியாலயம் மறுத்தபோது தகவல் வெளிப்பாட்டுக்கெதிரான தடை அதிகாரம் கொண்டுவரப்பட்டது. வெளிப்பாட்டுக்கு ஆதரவு தெரிவித்த முதலமைச்சரின் விருப்பம்கூட பத்திரிகைகள் பரிசு பட்டியலை வெளியிடுவது மனக்கஷ்டங்களை ஏற்படுத்தும் எனக்கூறி பிரதம மந்திரி அலுவலக மேலதிகாரியால் புறத்தொதுக்கப்பட்டது.

இலங்கையின் சுதந்திர தகவல்கள் சட்டமூலம் சிறந்த சர்வதேச வழக்கத்தை கொண்டுள்ளது. அதிகாரிகளின் சுய விருப்ப தடை மூலம் தகவலுக்கான அணுகுவழியை நிறுத்தவோ தகவல் ஆணைக்குழுவால் முடிவெடுக்கப்பட்ட தகவல் வெளியீட்டை தடுக்கும் அதிகாரம் மூலம் நிறுத்தவோ இச்சட்டமூலம் இடம் கொடுக்கவில்லை.

### பரிசோதனைகளை மீறிச்செல்லும் பொதுநலம்

உள்ளடக்க நோட்டமிடலுக்கும் தனி தனியான மீளாய்வுக்கும் உட்பட்டே விதிவலக்குகள் வழங்கப்பட வேண்டும். அதோடு வெளிப்பாட்டு தடை முற்றிலும் பொதுநல பாதிப்பு, மோசமான தீங்குகள் ஆகியவைகள் ஏற்படும்போது மட்டுமே அனுமதிக்கப்படவேண்டும்.

எல்லா விதிவிலக்குகளும் “மீறிச்செல்லும் பொது நலன்” என்றதொரு வாசகத்துக்கு உட்படுத்தப்படவேண்டும். அதாவது ஒரு தகவலை பாதுகாப்பது என்ற நிலை ஏற்பட்டபோதும் அத்தகவலை வெளியிடுவதால் ஏற்படும் நலன் வெளியிடாது பாதுகாப்பதால் ஏற்படும் நலனை மிஞ்சுகிறதா என பரிசோதித்து, அப்படியாயின் அத்தகவலை வெளியிடவேண்டும். இம்முறையானது ஒவ்வொரு விடயத்தை தனித்தனியாக அதன் நன்மை கருதி முடிவுசெய்யும் நிலையை ஏற்படுத்துவதோடு பொது அதிகாரிகள் தான்தோண்றித்தனமாக எல்லாத்தகவல்களையும் தொடர்ச்சியாக விதிவிலக்கு பட்டியலில் வைத்திருப்பதை தடுக்கும். இந்தியா, அன்டிகுவா மற்றும் பார்படா ஆகிய நாடுகளின் சட்டங்கள் எல்லா விதிவிலக்கு வாசகங்களுக்கும் பொருந்தும் “மீறிச்செல்லும் பொதுநலன்” ஏற்பாடுகளை உருவாக்கியுள்ளது. தென் ஆபிரிக்கா, டிறினி டேட் மற்றும் டொபோக்கோ போன்ற நாடுகளின் நீதியாதிக்கத்தில் கீழுள்ள விடயங்களின் சான்றுகள் வெளியாகும் அளவுக்கு விதிவிலக்காகும் தகவல்கள் வெளிப்படுத்தப்படவேண்டும் - அதாவது: சட்டம் மீறப்படல் தனி நபருக்கெதிரான அநீதி பொதுநிதியை அனுமதியின்றி பாவித்தல் பாரதூரமான சூழல் அபாயம் அரசாங்க ஊழியர்களால் புரியப்படும் துஷ்பிரயோகம் மற்றும் கடமை தவறுதல். கோரப்படும் தகவலின் புலங்கூர் தன்மையை நிர்ணயிக்க தகவல் கோரப்படும் காலத்தை அடையாளப்படுத்துவது முக்கியமானதாகும். எல்லா தகவல்களையும் ‘அணுகமுடியா தகவல்’ என அடையாளப்படுத்துவதைவிட அத்தகவல் வெளிப்பாட்டால் ஏற்படும் பாதிப்பை நிர்ணயிக்க இது நல்லதொரு வழியாகவும் இருக்கும். உதாரணமாக இராணுவம் எங்கே முகாமிட்டு தங்கியுள்ளது என யுத்த காலத்தில் தகவல் அறிவது பாதிப்பான விடயம். ஆனால் பல வருடங்களுக்கு பிறகு அத்தகவலை வெளியிடுவது எந்தப்பாதிப்பும் இல்லாத பொதுநலன் சார்ப்பாகவே இருக்கும். உதாரணமாக இராணுவத்தில அதிக எண்ணிக்கையானோா் ஏன் பலியானார்கள்? மற்றும் காயமடைந்தார்கள் என்ற பின்னணியை தெரிந்துக் கொள்ள பொதுமக்கள் ஆவலாய் இருக்கக்கூடும்.

**பொது நலனை சமப் படுத்தல்.**

நியூஸிலாந்து நாட்டின் ஒரு விடயம் 'மீறிச் சென்ற பொதுநலனின்' மதிப்பை எடுத்துக்காட்டுகிறது. அங்கு நடந்த ஒரு படகு விபத்தில் 2 பேர் இறந்துபோனர். இது பற்றிய விசாரணையை அரச நிறுவனமான கடல் வலயப்பாதுகாப்பு அதிகாரச்சபை நடத்தியது. இந்த விசாரணை அறிக்கை பிரதி ஒன்றை கேட்டு விண்ணப்பம் செய்தபோது இறந்தவர்களின் விதவைகளோடு கலந்துரையாடி அவர்கள் அவ்வறிக்கையை பொது மக்கள் பார்வைக்கு விட விரும்பவில்லை என்று காரணம் காட்டி அதன் பிரதியை வெளியிட மறுத்துவிட்டது. மேன்முறையீடு செய்தபோது உண்மையில் அத்தகவல் கொண்ட அறிக்கை அந்தரங்க நலனால் பாதுகாக்கப்பட்டுள்ளதுதான் என கூறிய ஆளாட்சி அதிகாரி அதன் வெளியீட்டால் எதிர்காலத்தில் இப்படியான படகு விபத்தை தவிர்க்கலாம் என்பதால் பொது நலன்கூட அதில் உள்ளது என கருத்து தெரிவித்தார். அதோடு இவ்விடயத்தில் இருக்கும் தனிநபர் நலனைவிட பொதுநலன் பலம் பெற்றிருப்பதால் அதனை வெளியிடலாம் என முடிவு செய்தார்.

மீறிச்செல்லும் பொதுநல விடயத்தில் அவுஸ்திரேலியா, ட்றினிடேட், டொபாக்கோ மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் சுதந்திர நிலையை கடைப்பிடிக்கின்றன. தகவல்தடுப்பு முறைக்கு எதிராக தகவல் வெளியிடும் நலனை சமப்படுத்தும் வகையில் கட்டாய முடிவுகளற்ற முறையில் அணுகுகின்றனர். நியூஸிலாந்து நாட்டின் சட்டமானது சில வகையான தகவல்களை வெளியிடுவதில் குறிப்பிட்ட நலன்களுக்கு பங்கம் ஏற்படுமாயின் அதனை தடுப்பதை நியாயப் படுத்தும் வகையிலான பல நோக்கு முறைகளை கடைப்பிடிக்கின்றது. வேறு சில தகவல்களை வெளியிடுவதால் பலத்த பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் அதனை தடுக்கும் வகையிலும் அது செயல்படுகிறது. கனடா நாட்டின் மீறிச்செல்லும் நலனானது குறுகியதாகவே உள்ளது. பொது சுகாதாரம், பொது மக்கள் பாதுகாப்பு அல்லது சூழல் பாதுகாப்பு சம்பந்தமான விடயங்களில்தான் பொதுநலனை கருத்தில் கொள்கிறது.

குடும்ப விமர்சனத்துக்குள்ளான வழிமுறை சட்டமாக ஐக்கிய இராச்சியத்தின் சட்டம் இருக்கிறது காரணம், கோரப்படும் தகவலை எதவித 'பாதிப்பு சோதனைக்கும்' விடாமல் அனைத்து வகையான தகவல்களையும் தடுத்து வைக்க இச்சட்டம் வழி வகுக்கின்றது. அரசாங்க கொள்கை வகுப்பு, சட்ட அமுலாக்கம் மற்றும் கட்டுப்பாட்டு நிறுவனங்களினாலான விசாரணைகள், சட்ட அதிகாரிகளினால் வழங்கப்பட்ட

அறிவுறைகள், மற்றும் பாதுகாப்பு சேவைகள் சம்பந்தப்பட்ட தகவல்கள் அனைத்தும் இதில் அடங்கும். தகவல் வெளியிடுவது பொது நல சார்பாக இருந்தாலும் திணைக்களத்துக்கு சார்பான அமைச்சருக்கு தடுக்கும் அதிகாரம் உண்டு. தகவல் ஆணையாளர் வெளியீட்டுக்கு சார்பான கட்டளையை பிறப்பித்தபோது அமைச்சருக்கு அதனை மீளச் சென்று வெளியீட்டை தடுக்கலாம். இருப்பினும் மேன்முறையீட்டு அங்கமான 'தகவல் நியாய சபை' க்கு அமைச்சரின் தடுத்தலை மீறிச்செல்லும் அதிகாரம் உண்டு.

இலங்கையின் சுதந்திர தகவல் சட்டமூலத்தின் 13 விதிவிலக்குகளுக்குள் 5 விதிவிலக்குகளில் பல தரங்களினாலான பாதிப்பு சோதனை உண்டு. தனி நபர் தகவல் பாதுகாப்பு விடயங்கள் மற்றும் தேசிய பாதுகாப்புடன் சர்வதேச உறவு, வர்த்தக இரகசியம், வணிகநலன், நீதிமன்ற நடைமுறையுட்பட சட்ட அமுலாக்கம், நம்பகமான தகவல்கள் ஆகிய எல்லா தகவலுக்கும் 'பாதிப்பு சோதனை' உண்டு. 5 விதிவிலக்குகள் மாத்திரமே "மீளச்செல்லும் பொது நலனு" க்கு பாத்திரமாகும். அவைகளாவன – தனி நபர் தகவல் பாதுகாப்பு விடயங்கள் தேசிய பாதுகாப்பு சர்வதேச உறவு தனிநபரின் வாழ்வு மற்றும் பாதுகாப்பு வணிக இரகசியம் மற்றும் நலன்கள்.

### பகுதி வெளிப்பாடு

ஒரு குறிப்பிட்ட பத்திரத்தில் விசேட விதிவிலக்குகளுக்குள்ளாகும் தகவலும் விதிவிலக்குகளுக்குள்ளாகாத தகவலும் இருப்பின் விதிவிலக்குகளுக்குள்ளாகா தகவல்கள் வேறாக்கப்பட்டு ஏனையவை வெளியிடப்பட வேண்டும்.

சிலவேளை பத்திரங்களில் விதிவிலக்கு வகைளுக்குள்ளாகும் தகவல்கள் இருப்பதோடு விதிவிலக்குக்கு உள்ளாகாத தகவல்களும் சேர்ந்து இருப்பதுண்டு. தகவல்கள் கோரிக்கைக்கான விண்ணப்பம் வருகின்றபோது வெளிப்பாட்டு விதிவிலக்குகளுக்குள்ளாகும் தகவல்கள் இருக்கும் காரணத்தால் அதற்குள்ளாகாத தகவல்களையும் தடுப்பது நியாயமற்றதாகும். இப்படியான சந்தர்ப்பங்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் பெரும்பாலான சட்டங்கள் 'வேறுபடுத்தும்' கோட்பாட்டை அடையாளப்படுத்துகிறது. இக்கோட்பாட்டுக்கு இணங்க விதிவிலக்குகளுக்குள்ளாகாத தகவல்களை புலனாய்வு தன்மைக் கொண்டவைகளிலிருந்து வேறுபடுத்தி விண்ணப்பதாரருக்கு வெளிப்படுத்தலாம். பகுதி வெளிப்பாடு மட்டுப்படுத்தப்பட்ட மக்களுக்கான வெளிப்பாடு போன்ற சட்டம் வழங்கும் இயந்திரங்கள் ஊடாக திறந்த தன்மையை கடைப்பிடிக்கலாம்.

இலங்கையின் சுதந்திர தகவல் சட்டமூலம் விதிவிலக்கு அளிக்கப்படாத பகுதியை விதிவிலக்கு அளிக்கப்பட்ட பகுதியிலிருந்து பிரித்தெடுக்கும் 'பகுதி வெளிப்பாட்டிற்கான' ஏற்பாடுகளை வகுத்துள்ளது.

**ஒழுங்குமுறை அவசியப்பாடுகள்**

அணுகுவழி சட்டத்தின் நற்பயனுக்கான சோதனையாக மக்கள் தகவல்களை பெற்றுக்கொள்ளும் இழகுவழி, அதிக கட்டணமின்மை மற்றும் உடனடி செயல்பாடு ஆகியவைகளே திகழ்கின்றன. தகவல் வேண்டுபவர் குறைந்த கட்டணத்தில் அவசரமாக தகவல்களை பெற்றுக்கொள்ளும் தடுமாற்றமில்லாத தெளிவான ஒழுங்குமுறையை சட்டம் வகுக்க வேண்டும்.

### விண்ணப்பிப்பது எவ்வாறு?

அணுகுவழி முறைகள் எளிதானதாக, தகுந்ததாக, அவசரமானதாக இருப்பது அவசியம்.

பெரும்பாலான சட்டங்கள் தகவல் பெறுவதற்கான வேண்டுகோள் எழுத்தில் இருக்கவேண்டும் என கூறுகிறது. ஆனால் ஜமைக்கா நாட்டுச் சட்டம் இந்த வேண்டுகோளை தொலைபேசி மூலம் விடுக்கும் அனுமதியை வழங்குகிறது. இந்தியா, அன்டிகுவா மற்றும் பார்படாவிலும், உகண்டா மற்றும் தென் ஆபிரிக்காவிலும் தேவையான தகவலை வறியவர்களும், எழுத்தறிவில்லாதவர்களும் பெறும் வழியை வகுத்துள்ளது. தகவல் பெற விரும்பும் விண்ணப்பதாரிக்கு எழுத்தில் வேண்டுகோளிட முடியாத பட்சத்தில் அதிகாரிகள் அவரது வாய் மூலமான வேண்டுதலை எழுத்தில் ஏற்றுக்கொள்ள எல்லா உதவிகளையும் நல்க வேண்டும் என்கிறது சட்டம். ஒரு விண்ணப்பதாரிக்கு தனது வேண்டுதலை சரியான முறையில் வடிவமைக்க அல்லது சரியான இலாகாவுக்கு மாற்றம் செய்ய வழி காட்ட வேண்டியது அரசாங்க இலாகாவின் கடப்பாடு என பொதுவாக எல்லா சட்டங்களும் வலியுறுத்துகின்றன. எல்லா மக்களும் தமது வேண்டுகோள்களை உள்ளூர் உத்தியோக மொழியில் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாட்டை இந்தியச் சட்டம் அனுமதித்துள்ளது.

**தொலைபேசி மூலம தகவல் வேண்டுதல் : கிராமிய தொலைத்தொடர்பு அடித்தள வசதிகள் சேவையை நோக்கிய தொலைத் தொடர்பு தொழில்நுட்பம்.**

படிப்பறிவு மிக மிக குறைவாக காணப்படும் வடஇந்திய மாநிலமான பீஹாரில் மக்கள் தன் தகவல் தேவைக்கான விண்ணப்பங்களை எளிதாக எந்த காரியாலயத்திலும் சமர்பிக்கும் வகையில் அரச சார்பற்ற நிறுவனங்களும் தொலை தொடர்ப்பு நிபுணர்களும் சேர்ந்து வழி அமைத்துள்ளார்கள். மக்கள் தம் தகவல் பெறும் விண்ணப்பத்தை வெறும் தொலைபேசி மூலமாகவே பதிவு செய்ய அரசாங்கம் ஒரு தொலைபேசி அழைப்பு இலக்கத்தை விளம்பரப்படுத்தியுள்ளது. நன்றாக பயிற்றுவிக்கப்பட்ட குழு ஒன்று தொலைபேசி அழைப்புகளை ஏற்று, வேண்டுகோளை எழுத்திலிற்று, சம்பந்தப்பட்ட இலாகாக்களுக்கு அனுப்பிவைப்பதோடு அதன் பிரதி ஒன்றையும் விண்ணப்பதாரிக்கு அனுப்பி வைக்கிறது. தொலைபேசி அழைப்பு முடிந்ததும் அழைப்பு விடுத்தவர் (விண்ணப்பதாரி) விண்ணப்ப கட்டணத்தையும் தொலைபேசி கட்டணத்துடன் பொது தொலைபேசி உரிமையாளரிடம் கொடுக்க அவர் விண்ணப்பத்துக்கான கட்டணத்தை அரசாங்க திறைசேறிக்கு செலுத்தி விடுவார். எழுத்து மூலம் தங்கள் வேண்டுதலை சமர்பபிக்க முடியாத மக்களுக்கு இந்த தொலைபேசி முறை மிக்க சௌகரியத்தை அளிக்கிறது.

தகவலுக்கான கோரிக்கைகளை துரிதமாக நடைமுறைப்படுத்த விண்ணப்பதாரர்கள் தான் கோரும் தகவல்கள் உள்ள குறிப்பேடு அல்லது பத்திரங்கள் பற்றிய போதுமான தகவல்களை வழஙகவேண்டும. இதற்காக திணைக்களங்கள் தம்மிடமுள்ள குறிப்பேடுகள் பற்றிய பட்டியலை வைத்திருப்பதும் அவைகளை மக்களுக்கு பார்வையிட அணுமதிப்பதும் அவர்களுக்கு தேவையான தகவலை அடையாளப்படுத்த இலகுவாக்கும்.

இலங்கையின் சுதந்திர தகவல் சட்டமூலம் தகவலுக்கான கோரிக்கையை சாதாரண சந்தர்ப்பங்களில் எழுத்து மூலம் சமர்பிக்க வேண்டும் என கூறுகிறது. முடியாத நிலைகளில் வாய்மூல விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட தகவல் அதிகாரி அதனை எழுத்தில் வடிப்பது அவரது கடமை. அது மட்டுமல்லாது தகவல் கோருபவருக்கு முடியுமான எல்லா உதவிகளையும் நல்குவதும் கடமையாகும்.

## அணுகுவழி முறைகள்

விண்ணப்பதாரிக்கு விருப்பமான வடிவத்தில் அவருக்கு தேவையான தகவலுக்கான அணுகுவழியை கொடுக்க வேண்டும்.

மக்கள் சார்ப்பான அணுகுவழி சட்டங்கள் தகவல் கோருவோருக்கு தேவையான வழியில் அவர் விரும்பும் வடிவத்தில் - வாசிக்கவோ, பார்க்கவோ, கேட்கவோ, போடோ பிரதிகள், கையெழுத்து பிரதிகள், கணனி மூலமான அச்சுப் பிரதிகள் ஆகிய எந்த வடிவத்தில் வேண்டுமானாலும் பெறக்கூடிய வகைகளை செய்யும். நியூஸிலாந்து நாட்டுச் சட்டம் விண்ணப்பதாரிக்கான தகவலை வாய்மூலம் வழங்குவதற்கும் அனுமதிக்கின்றது. மக்கள் எழுத்து வடிவிலான பிரதிகளுக்கு காத்திருக்காது அவசரமாக தகவல் பெறும் வாய்ப்பு இதன் மூலம் கிடைக்கிறது. தென் ஆபிரிக்கா மற்றும் உகண்டா நாட்டுச் சட்டங்கள் வலது குறைந்தவர்கள் தனக்கு தேவையான தகவலை அவர்கள் கிரகித்துக்கொள்ளும் வகையில் வாசிக்கவோ, கேட்கவோ, பார்க்கவோ, பெற்றுக்கொள்ளும் உரிமையை வழங்குகிறது. புலக்குறைபாடுகள் உள்ளவராக விண்ணப்பதாரி இருந்தால் அவருக்கு அதிகாரிகள் முடிந்த அளவு உதவி புரிந்து தகவலை வழங்க வேண்டும் என இந்திய சட்டம் கூறுகிறது. ஐக்கிய இராச்சியத்தின் சட்டம் விண்ணப்பதாரி கோரும் எந்த நியாயமான வடிவத்திலும் தகவல் கொடுக்கப்பட வேண்டும் என கூறுகிறது.

ஒன்றுக்கு மேற்பட்ட உத்தியோகப்பூர்வ மொழிகள் பாவிக்கப்படும் இடங்களில் தகவல் பலமொழிகளிலும் வைக்கப்படவேண்டும் எனவும் விண்ணப்பதாரி விரும்பும் மொழியில் அது கொடுக்கப்பட வேண்டும் எனவும் பல அணுகுவழி சட்டங்கள் கூறுகின்றன. இப்படியான ஏற்பாடுகள் இல்லாவிடில் தகவல் பெறும் வழிவகை பல குழுக்களுக்கு இல்லாமல் போய்விடும். உதாரணத்திற்கு கனடாவில் பொதுவாக ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகளில்தான் தகவல் வைக்கப்படுகின்றன. பொதுநலனை கருதி இலாகா தலைவர்கள் மொழிபெயர்ப்புகளை கொடுக்கலாம் என்ற அனுமதி வழங்கும் ஏற்பாடும் சட்டத்தில் இருக்கிறது. வேண்டும் தகவலை விண்ணப்பதாரி விரும்பும் மொழியில் பெற்றுக்கொள்ள தென் ஆபிரிக்க சட்டம் வழி செய்கிறது. 18 உத்தியோகப் பூர்வ மொழிகளை கொண்ட இந்திய சட்டம் இது பற்றி மௌனம் சாதிப்பது ஆச்சரியமாகும்.

குறிப்பிட்ட பத்திரங்களின் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படாத வரைக்கும் விண்ணப்பதாரர் கோரும் எந்த வகையிலும் தகவல் அறிய வாய்ப்பு வழங்கப்படும் என இலங்கையின் தகவல் அறியும் சட்டமூலம் கூறுகிறது. கேட்கப்படும் வகையில் ஒரு தகவலை அதிகாரிக்கு வழங்க முடியவில்லை என்றால் தகவல் கோருபவரின் விரும்பும் வடிவில் அத்தகவல் கிடைப்பதற்கான சகல ஒத்துழைப்பையும் அவ்வதிகாரி வழங்குதல் அவசியம். விண்ணப்பதாரி கேட்கும் மொழியில்தான் அத்தகவல் கொடுக்கப்பட வேண்டும் என்று எந்த ஏற்பாடும் சட்டத்தில் இல்லை.

### கட்டணம்.

தகவல் அணுகுவழிக்காக எந்தவித கட்டணமும் அறவிடாமல் இருப்பது சாலச்சிறந்ததே. தேவையாயின் குறைந்த ஒரு கட்டணத்தை அறவிடுவதில் தவறில்லை. ஆனால் விண்ணப்பதாரர் தகவல் வேண்டுவதை தடுக்கும் அளவிற்கு கட்டணம் மிக உயர்ந்ததாக இருக்கக் கூடாது.

பொதுநலவாய நாடுகள் அனைத்தும் கட்டணம் அறவிடுவதை அனுமதிக்கின்றன. எனினும் அவுஸ்திரேலியாவில் தகவல் உரிமைக்கான சமஸ்டி நீதியாதிக்கத்தில் முதல் 4 ஆண்டுகளில் கட்டணம் எதுவும் அறவிடப்படவில்லை. தற்பொழுதெல்லாம் முக்கியத்துவமற்ற தகவல் வேண்டுதலை தடுக்கும் மார்க்கமாக உயர்ந்த கட்டணம் அமுலில் உள்ளது. தகவல் பாதுகாப்பு முறையை நடத்துவதற்கும் சீராக வைத்துக்கொள்வதற்கும் அதிகபட்ச நேரமும் பணமும் செலவாகுவதால் பொது மக்கள் அச்செலவில் ஒரு பகுதியை பொறுப்பேற்க வேண்டும் என்று அரசாங்கங்கள் தெரிவிக்கின்றன. இந்த தர்க்கம் கேள்விக்குரிய விடயமாகும். ஏனெனில் தகவல் சேகரிப்பதும், பதிவுகளை பாதுகாத்து வெளியிடுவதும் செயல்திறன் மிகு அரசாங்கத்தின் அடிப்படை செயல்பாடாகும். அதோடு பொது அதிகாரிகள், திணைக்களங்கள் மக்கள் பணத்தில்தான் செயல்படுகின்றன. வறிய மக்களுக்கு கட்டணம் என்பது பெரும் தடையாகவே இருக்கும்.

எப்படியிருப்பினும் தகவல் அறியும் அணுகுவழி சட்டங்கள் விண்ணப்பிக்கும்போது கட்டணம் ஒன்றை அறவிடுவதோடு தகவல்களை தேடுவதற்கு அதிகாரிகள் எடுத்துக்கொண்ட காலத்திற்கும், சேகரிப்புக்கும், பிரதி தயாரிப்பதற்குமாக மேலதிக கட்டணம் ஒன்றையும் அறவிடுகிறது. பிரதி தயாரிப்புக்கு மட்டும் கட்டணம் இடுவதில் தவறில்லை. நேரத்துக்கும் தகவல் தேடலுக்கும் விண்ணப்ப செயல்முறைக்கும் கட்டணம் அறவிடக் கூடாது. அப்படி அறவிட்டால் அது தடைசெய்யப்பட்ட கட்டணத்துக்குள்ளாகும். இந்திய சட்டத்தின் பிரகாரம் தகவல் வழங்குவதற்கான கட்டணம் நியாயமானதாக இருத்தல் வேண்டும். அரசாங்கத்தால் வறுமை கோட்டிற்கு கீழ் வாழ்பவர்கள் என்று நிர்ணயிக்கப்பட்டவர்களிடம் தகவலுக்காக கட்டணம் அறவிட முடியாது. கட்டணம் அறவிடுவதால் விண்ணப்பதாரருக்கு கஷ்டம் ஏற்படும் என்ற நிலையிருந்தாலோ, முற்று முழுதாக தகவல்களை வெளிப்படுத்துவது மக்கள் பொதுநல காரணத்துக்காக என்ற நிலையிருந்தாலோ அல்லது அதிகாரிகளின் விருப்பத்தின் பேரிலோ கட்டணத்தை இல்லாதாக்குவதற்கோ அல்லது குறைப்பதற்கோ சில சட்டங்கள் ஏற்பாடுகள் வைத்துள்ளன.

டுறினிடேட் மற்றும் டொபாக்கோவைப் போலவே இந்திய சட்டத்தின் பிரகாரம் கட்டணம் அறவிடப் பட்டபின் சரியான நேரத்துக்குள் தகவல் கொடுக்கவில்லை என்றால் அதன் பின் இலவசமாகவே தகவல் கொடுக்கப்பட வேண்டும். சில

இடங்களில் செலுத்தப்பட்ட கட்டணத்துக்கான முழு தகவலும் கொடுக்கப்படாவிடில் குறைகின்ற தகவலின் அளவிற்கு கட்டணம் குறைக்கப்பட வேண்டும். இலங்கையின் சுதந்திர தகவல் சட்டமூலத்தின் பிரகாரம் சம்பந்தப்பட்ட அதிகாரி தகவல் வழங்குவதற்காக இரண்டு விதமான கட்டணத்தை அறவிடலாம். அவை எந்த சந்தர்ப்பங்களில் அறவிடப்படவேண்டும் என்ற தெளிவு கொடுக்கப்படவில்லை. எப்பொழுது கட்டணம் விட்டொழிக்கப்பட வேண்டும் என்பதை அரசாங்க வர்த்தமாணி மூலம் அறிவிப்பதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அதிகாரம் உண்டு. தகவல் வெளிப்பாட்டிற்கான கட்டண விபரத்தை ஒவ்வொரு பொது அதிகார சபையிலும் பொது இடத்தில் பார்வைக்காக வைக்கவேண்டும். தகவல் ஆணைக்குழு கட்டண அறவிடலுக்கான வழி காட்டல்களை வழங்கும். இந்த சட்ட ஏற்பாடுகள் தெற்காசியாவில் எங்குமே இல்லாத முன்னேற்றகரமான ஏற்பாடாகும்.

### கால எல்லை.

தகவல் வெளிப்பாடு முடிந்த அளவு அவசரமாக கொடுக்கப்படுவதோடு காலஎல்லை கண்டிப்பாக அமுல் படுத்தப் படவேண்டும்.

அதிகாரிகள் ஏற்படுத்தும் தாமதமே தகவல் கோருதலை தடுக்கும் முக்கிய கருவியாகும். இதனை இல்லாதொழிக்க தகவல் கொடுக்கப்படவேண்டிய கால எல்லையை சட்டம் நிர்ணயிக்க வேண்டும். (பொதுவாக விண்ணப்ப நாளிலிருந்து 14 – 30 தினங்கள் வரை) கால எல்லையின் கடைசி நிமிடத்தில் தகவல் வழங்குவதை தடுப்பதற்காக சில சட்டவாக்கங்கள் □முடிந்த அளவு வேகமாக□ தகவல் கொடுக்கப்பட வேணடும் என அதிகாரிகளை வேண்டி நிற்கிறது.

சில வகையான தகவல்களை குறுகிய கால எல்லைக்குள் கோர முடியும். உதாரணமாக இந்திய மற்றும் பங்களாதேஷ் அணுகுவழி சட்டங்கள் 48 மணித்தியாலத்துக்குள் கொடுக்கப்பட வேண்டிய ஒரு நபரின் வாழ்வு மற்றும் சுதந்திரம் சம்பந்தமான தகவலுக்கும் 30 நாள் கால எல்லைக்குள் வழங்கப்பட வேண்டிய ஏனைய தகவலுக்கும் இடையில் வித்தியாசத்தை ஏற்படுத்தியுள்ளது. கோரப்பட்ட தகவல் குறிப்பிட்ட கால எல்லைக்குள் கொடுக்கப்படாவிடில் அது தகவல் மறுப்பாக கருதப்பட்டு விண்ணப்பதாரியின் மேன் முறையீட்டுக்கான வாய்ப்பு தானாகவே செயல்படுகிறது என கால எல்லையின் முக்கியத்துவத்தை கனடா, இந்தியா மற்றும் தென் ஆபிரிக்கா சட்டங்கள் கூறுகின்றன.

இலங்கையின் சுதந்திர தகவல் சட்டமூலம் தகவல்கள் வெளிப்பாடு சம்பந்தமான முடிவை 14 நாட்களுக்குள் எடுக்க வழிவகுக்கிறது. சம்பந்தப்பட்ட தகவல் அதிகாரி இந்த கால எல்லைக்குள் தகவலை வழங்கவோ அல்லது தகவல் மறுப்பு அறிவிப்பை கொடுக்கவோ வேண்டும் என்ற கடப்பாட்டில் உள்ளார். அவசரமான தகவல் கோரல் பற்றிய எந்த ஏற்பாடும் இலங்கை சட்டமூலத்தில் இல்லை.

### மேன்முறையீடும் அமுலாக்களும்

அணுகுவழி சட்டவாக்கத்தின் வெற்றி செயல்திறன்மிகு அமுலாக்க ஏற்பட்டில்தான் தங்கியுள்ளது. தகவலை மறுப்பவர் எவராகினும் அதற்கான காரணத்தை வழங்க வேண்டும். சட்ட அமுலாக்கம் தவறும் பட்சத்தில் அதற்கான கண்டிப்பான கட்டளைகளை இடக்கூடிய அதிகாரம் கொண்ட, பாரபட்சமற்ற, பலம்வாய்ந்த, சுதந்திர அங்கம் உருவாக்கப்படவேண்டும். வேண்டுமென்றே தகவல் வெளிப்பாட்டுக்கு தடையிடுகின்றவர்களுக்கு எதிராக தடைகளும், தண்டனைகளும் சட்டம் வழங்க வேண்டும்.

### தீர்வுக்கான காரணங்கள்

தகவல் வெளிப்பாட்டு மறுப்பு பற்றிய அறிக்கைகள் மறுப்புக்கான சட்டத்தின் நியாயங்களை சுட்டிக்காட்டுவதோடு விண்ணப்பதாரியின் மேன்முறையீட்டு உரிமை பற்றி ஆலோசனை வழங்கவேண்டும்.

தகவல் மறுப்புக்கான காரணத்தை கூறாது அதிகாரிகள் வெறுமனே மறுப்பு தெரிவிப்பது ஆகாது. அம்மறுப்புக்கான காரணத்தை சரியாக கூறும்போதுதான் விண்ணப்பதாரிகள் நிவாரணம் பெற மேன்முறையீட்டு சபைகளை நாட முடியும். உண்மையில் தகவல் மறுப்புக்கான காரணத்தை வழங்குவது பல பொதுநலவாய நாடுகளின் நிர்வாக சட்டத்தின் பொதுவான தேவைபாடாகும். இதனை மீறும் பொது அதிகாரிகளுக்கு எதிராக நீதி மன்றங்கள் கண்டிப்பு தெரிவித்துள்ளன. பொது அதிகாரிகள் தமது மறுப்புக்கான காரணத்தை அவசியம் தெரிவிக்க வேண்டியதோடு அக்காரணத்துக்கான அடிப்படையையும் (குறிப்பிட்ட விதிவிலக்கு பற்றியும) எடுத்துரைப்பதோடு அதற்கான நிவாரணத்தையும் விண்ணப்பதாரருக்கு அறிவிக்க வேண்டுமமென பெரும்பாலான பொதுநலவாய நாடுகளின் அணுகுவழி சட்டங்கள் கடப்பாடு விதிக்கிறது.

சம்பந்தப்பட்ட தகவல் அதிகாரி தகவல் மறுப்புக்கான காரணத்தை எழுத்தில் அறிவிக்க வேண்டும் என்றும் 4ம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விதிவிலக்குகள் அடிப்படையிலேயே மறுப்பு அனுமதிக்கப்படும் என்றும் இலங்கை சட்ட மூலம் கூறுகிறது.

### மேன்முறையீடுகள்

தகவல் மறுப்பை மீளாய்வு செய்வதற்கும், வெளிப்பாட்டை வற்புறுத்துவதற்கும், சட்டம் அமுலாக்கப்படாத தவறுக்கு தண்டனை விதிப்பதற்கும் அதிகாரம் கொண்ட, அற்பணிப்புள்ள, சுதந்திர தகவல் அதிகாரி ஒருவரை உருவாக்க சிறப்பு வழக்குகள் உறுதுணையாகின்றன.

அரசாங்கம் தனது சொந்த நலனை பொதுநலநோடு குழப்பமடையச் செய்யும் கொள்கையை கொண்டு தானே தன் வழக்குக்கு நீதிபதியாக இருக்கும் நிலை இருப்பதால் மேன் முறையீடுகள் அரசாங்க இலாகா மட்டத்தில் இருப்பது போதுமானதல்ல. எல்லா சட்டங்களும் ஏதோ ஒரு வகையான மேன்முறையீட்டை கொடுக்கின்றது. முதலாவதாக ஒரு உட்புற மீளாய்வுக்கும், பிறகு சுதந்திரமான நியாய சபைக்கும், அதன் பின் நீதிமன்றத்தின் ஆய்வுக்கும் அநேக முறைகள் வழி வகுத்துள்ளன.

உள்ளக மேன்முறையீடுகள் அதிக செலவில்லாத முதல் சந்தர்ப்ப மீளாய்வுக்கு வழி வகுக்கிறது. அரசாங்க அழுத்தங்கள் எதுவுமில்லாத சுதந்திர முறையில் நீதி காண்பவர் ஒருவரது மேற்பார்வை நிர்வாக சீர்கேடுகளுக்கு எதிரான பெரியதொரு பாதுகாப்பாகும். சுதந்திரமான நுண்ணாய்வு இருக்கின்றபோது சுதந்திர வாசகங்கள் பொறுப்புணர்ச்சியோடு பொருள் கொள்ளப்பட்டு மக்களின் வேண்டுக்கோள்கள் வீணாக தட்டிக்களிக்கப்பட மாட்டாது. தகவல் வெளிப்பாட்டு மறுப்பு சம்பந்தமான முறைபாடுகளை ஆராயும் சுதந்திர மேற்பார்வை அங்கங்கள் எளியதாகவும், அதிக நற்பயன் அளிக்கக்கூடியதாகவும், நீதிமன்றங்களுக்கான மாற்று அங்கங்களாகவும் இருக்கும். அதோடு செயல் முறையில் எளிதானதாகவும், சிறந்த வளம் மிக்கதாகவும், சிறப்பு சுதந்திரமுள்ளதாகவும் இருக்கும் பட்சத்தில் பொது மக்கள் நம்பிக்கையை வென்றதாகவும் திகழும்.

பொதுநலவாய சட்டங்கள் தகவல் ஆணையாளர்களை போன்ற நேரம் தவறா உள்ளக ஆய்வுகளுக்கும், விசேட வெளிப்புற ஆய்வு முறைகளுக்கும் வழி வகுத்துள்ளது. தென் ஆபிரிக்காவில் உள்ளக ஆய்வு முடிவில் திருப்தியில்லாதோர் உயர் நீதிமன்றத்தை அணுகலாம். அவுஸ்திரேலிய சட்டத்தின் பிரகாரம் ஒருவர் மத்தியஸ்தம் பெறுவதற்கு ஆளாட்சி அதிகாரியை அணுகலாம். அதுவும் தவறினால் நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு மேன்முறையீடு செய்யலாம். இதே போன்றே முதல் முறையீடாக ஆளாட்சி அதிகாரியிடமும் அது திருப்தியில்லாது போகும்போது நீதிமன்றங்களுக்கு மேன்முறையீடு செய்யவும் தென்னாபிரிக்க சட்டம் வழி வகுக்குகிறது. சட்டத்தின் கீழ் மேன் முறையீடுகளை விசாரிப்பதற்காக ஒரு விசேட தகவல் ஆணையாளர் உருவாக்கப்படுவதே சாலச்சிறந்தது. பொதுநலவாய அமைப்புக்குள் அவுஸ்திரேலியா தகவல் ஆணையாளர்களை நியமித்துள்ளது.

தகவல் கோருபவருக்கும் நிறுவனத்துக்கும் இடையில் நிலவும் சர்ச்சையில் மத்தியஸ்தம் செய்து அறிவுரைகளை வழங்குவதற்கு மாத்திரமே தகவல் ஆணையாளருக்கு அதிகாரம் வழங்குகிறது இந்திய சட்டம். தகவலை வெளியிடும்படி நிறுவனத்துக்கு கட்டளையிட அவருக்கு அதிகாரம் இல்லை. ஆனால் அறிவுரையை ஏற்க மறுத்தால் ஆணையாளரோ தகவல் கோருபவரோ தங்கள் முறையீட்டை நீதிமன்றத்துக்கு எடுத்து செல்ல முடியும். ஐக்கிய இராச்சியத்தை பொறுத்தவரை மேன்முறையீட்டை முதலில் தகவல் ஆணையாளரிடமும் அது தவறின் இரண்டாம் முறையீட்டை தகவல் நீதிசபையிடமும் அதுவும் தவறும் பட்சத்தில் நீதிமன்றத்தில் முறையிடவும் முடியும். இந்திய சட்டத்தில் (மத்திய, மாநில ஆட்சிகளில் ஏற்படுத்தியுள்ள) முறையீட்டை தகவல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். முறையீட்டை தீர விசாரித்து, ஆராய்ந்து சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கும்படியான கட்டுப்படும் முடிவை வழங்க அவர்களுக்கு பரந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குற்றம் புரிந்த அதிகாரிகளுக்கு அபராதம் அல்லது இழப்பீடு செலுத்தும்படி கட்டளையிடவும் அவர்களுக்கு அதிகாரம் உண்டு. நேபாளம் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் சட்டமும் இதே போன்ற அதிகாரங்களை தகவல் ஆணையாளருக்கு வழங்கியுள்ளது.

3 அடிப்படையிலான மேன்முறையீட்டை இலங்கையின் சுதந்திர தகவல் சட்டமூலம் ஏற்படுத்தியுள்ளது. தகவல் மறுப்புக்கெதிரான முதல் மேன்முறையீட்டை அதற்காக ஏற்படுத்தப்படும் அதிகாரி விசாரிப்பார். ஆனால் இவ்வதிகாரி தகவல் அதிகாரியைவிட மேலுள்ளவராய் இருப்பார் என இந்தியச் சட்டம் கூறுவது போல் இலங்கையின் சுதந்திர தகவல் சட்டமூலம் எந்த வலியுறுத்தலையும் வழங்கவில்லை. முதல் விசாரனையின் முடிவில் திருப்தியல்லாதபோது இரண்டாம் தர மேன்முறையீடு தகவல் ஆணைக்குழு முன் வைக்கப்படும். அதிலும் திருப்தியற்ற நிலையில் இருந்தால் உச்ச நீதிமன்றத்தில் முறையீட்டை பதியலாம். விண்ணப்பதாரர் மேற்சொன்ன எந்த நிலையிலாவது சுயமாக மேன்முறையீட்டை செய்ய இயலாது போனால் அவர் சார்பில் இன்னொருவர் அதனை மேற்கொள்ளும் அதிகாரத்தை அவர் வழங்கலாம். தெற்காசிய நாடுகளின் அணுகுவழி  சட்டம் எதிலும் இல்லாத ஒரு வித்தியாசமான ஏற்பாடு இலங்கை சட்டமூலத்தில் உள்ளது.

அரசியல் சட்டமன்றத்தின் சிபாரிசின் பேரில் 3 பேர் கொண்ட தகவல் ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி நியமிக்கும் ஏற்பாட்டை இலங்கையின் சுதந்திர தகவல் சட்டமூலம் கொண்டுள்ளது. ஆணைக்குழுவுக்கு அணுகுவழி சட்ட அமுலாக்கம் பற்றி மேற்பார்வையிடவும் அது சம்பந்தமான சர்ச்சைகளை நீதி காண ஆராயவும், பாராட்டுதல் வழங்கவுமே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதோடு தகவல் அணுகுவழிக்கான கட்டணங்கள் பற்றி வழிகாட்டுதல் வழங்கவும் வேண்டும்.

## அமுலாக்கமும் தண்டனையும்

சட்டத்தை அமுலாக்க தவறியமைக்காக தண்டம் அல்லது சிறைவாசம் தண்டனையாக அமைவது முக்கியமாகும்.

உரிமைகள் மீறப்படும் பட்சத்தில் அதற்கான பரிகாரங்களும் இருப்பது அவசியமாகும். தகவல் தடுப்பு, நியாயமற்ற தாமதம் மற்றும் கோரப்படும் தகவலை அழித்துவிடுவது போன்ற செயல்களுக்கு குறைந்த பட்ச தண்டனை வழங்கப்பட்டால்தான் தகவல் அணுகுவழி சட்டம் அர்த்தமுள்ளதாய் அமையும். குற்றம் புரியும் அதிகாரிகளுக்கு எதிரான தண்டனைக்கான ஏற்பாடுகள் இல்லாது போனால் அணுகுவழி நீதியாதிக்கத்தின் அடிப்படையை அது தகர்த்து விடும். குறிப்பாக பொது வேண்டுகோள்களை அவசரமாக நிறைவேற்றாத ஒரு நிலைப்பாடு இருக்கும் இடத்தில் சரியான நேரத்தில் தகவல் வெளிப்பாடு நிறைவேற தடைகளும், தண்டனைகளும் மிகவும் தேவையானதாகும்.

தண்டனைகள் இல்லாது போனால் அரசியல் தலைவர்களும், அதிகாரிகளும், குறிப்பாக ஊழல் மிகுந்த நிர்வாக முறைகள் இருக்கின்ற நாடுகளில் சட்டத்தின் நோக்கத்தை திசை திருப்பி விடுவார்கள். துரதிஷ்டவசமாக பொதுநலவாய நாடுகளின் சில அணுகுவழி  சட்டங்கள்தான் கடுமையான தண்டனைகளை விதிக்கின்றது. இந்தியாவிலும் நேபாளத்திலும் மற்றும் பங்களாதேஷிலும் சட்டங்கள் தவறு செய்யும் அதிகாரிகள் அபராதம் கட்ட வேண்டும் என கூறுகிறது. உண்மையில் அணுகுவழி சட்டத்தை அமுல்படுத்த திணைக்கள தலைவர்கள் பொறுப்பு சொல்பவர்களாக ஆக்கவேண்டும். சில சந்தர்ப்பங்களில் பொறுப்புள்ள அதிகாரிகள் சட்டத்தை மீறியதற்காக தம் சொந்த பணத்தில் அபராதம் செலுத்த வேண்டும் என விதிப்பது நியாயமானதே. அது மட்டுமின்றி அவர்கள் வேண்டுமென்றே தகவல் வெளிப்பாட்டை தடை செய்து பாரதூர பாதிப்புகள் ஏற்படுத்தினால் குற்றவியல் சட்டத்தின் கீழும் தண்டனை வழங்கப்பட வேண்டும். தகவல்களை அழித்துவிடுவது, மறைப்பது, பொய் தகவல்கள் சேர்த்து அல்லது குறைத்து மாற்றம் செய்வது போன்ற விடயங்கள் பல பொதுநலவாய நாடுகளின் தகவல் அணுகுவழி  சட்டத்தின் கீழ் பெரும் குற்றமாக கருதப்படுவதோடு தண்டனை வழங்குவதற்கும் சட்டம் இடமளிக்கிறது. உத்தயோகப்பூர்வ தகவல் சட்டத்தின் கீழ் வைக்கப்படும் கோரிக்கை சரியான நேரத்தில் நிறைவேற்றப்படாவிடில் அது பற்றிய முறையீட்டை ஆய்வு செய்து உடனடியாக தகவல் வழங்கப்படுவதோடு பாதிக்கப்பட்டவருக்கு நட்டஈடும் வழங்கப்படவேண்டும் என  நியூஸிலாந்து நாட்டின் தனி நபர் அந்தரங்கம் சம்பந்தமான ஆளுனராக இருக்கும் மேன்முறையீட்டு விசாரனை அதிகாரி சுட்டிக்காட்டுகிறார். தகவலுக்கான விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ள மறுப்பது அல்லது நியாயமற்ற முறையில் தாமதப்படுத்துவது தண்டனை பெற வேண்டிய குற்றமாக இந்தியச் சட்டம் கருதுகிறது. அதோடு தாமதமாகும் ஒவ்வொரு தினத்துக்கும் அதிகாரி

அபராதம் செலுத்தவும் நிர்ணயிக்கிறது. இன்னும் தகவல் ஆணைக்குழுவுக்கு நட்டஈடு வழங்க உத்தரவு பிறப்பிக்கவும் அதிகாரம் வழங்கியுள்ளது. ஐக்கிய இராச்சிய சட்டத்தின் கீழ் தகவல் ஆணையாளரால் கொடுக்கப்பட்ட அமுலாக்கல் அறிக்கை அமுல்படுத்தப்படாவிட்டால் அல்லது அறிக்கைக்கு எதிராக பொய் தகவல் கொடுக்கப்பட்டால் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்கு மேல் நீதிமன்றத்தில் வாதிடலாம். ஆனால் பொது கொள்கை அடிப்படையில் இந்த குற்றத்திற்காக குடியியல் வழக்கு தொடர முடியாது என சட்டம் கூறுகிறது.

நன்நோக்கில் கடமை செய்கின்றபோது ஏற்படும் தவறுகளுக்கு அதிகாரிகள் மேல் சட்ட நடவடிக்கை எடுப்பதை பலசட்டங்கள் தடை செய்கின்றன. இந்த விடயமானது தகவல் தடுப்புக்கான அரசியல் அழுத்தங்கள் எங்கே மேற்கொள்ளப்பட்டன என கண்டுபிடிப்பதை கடினமாக்குகிறது. குற்றம் புரியும் அதிகாரிகளுக்கு எதிராக அபராதம் விதிப்பது பற்றி இலங்கை சட்டமூலம் கூறுகிறது. குறிப்பிட்ட தகவல் அதிகாரி சட்டத்தில் கூறப்பட்ட விதிவிலக்கு போன்ற தக்க காரணம் காட்டாது தகவல் விண்ணப்பமொன்றை நிராகரித்தால் அல்லது குறிப்பிட்ட கால எல்லைக்குள் தன்னுடைய முடிவை வெளியிடாவிட்டால் ரூபா ஐயாயிரத்துக்கு குறையாத அபராதம் அவருக்கு விதிக்கப்படும். நீதிமன்றம் மூலம் அவர் குற்றவாளியாக கருதப்படும் பட்சத்தில் இந்த அபராதம் விதிக்கப்படும். தெற்காசிய நாடுகளைப்போல் தகவல் ஆணைகுழுவுக்கு அபராதம் விதிக்கவோ, ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தவோ இங்குள்ள தகவல் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை. விதிவிலக்குக்கு உள்ளாகும் தகவலை வெளியிட்டாலும் ஒரு அதிகாரி நீதி மன்றத்தால் குற்றம் சாட்டப்படலாம். ஆனால் நல்லெண்ணத்துடன் பணிபுரியும் அதிகாரிகளின் தவறுகளை பாதுகாக்க இலங்கை சட்ட மூலத்தில் இடமுண்டு.

---

**நடைமுறைப்படுத்தலை இலகுவாக்குதல்.**

சட்டத்தை மேற்பார்வையிட்டு ஊக்குவிக்க விசேட அரச நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்க வேண்டும். தகவலுக்கான உரிமை பற்றிய போதுமான அறிவையும் அது சம்பந்தமான பயிற்சியையும் அரசாங்க அதிகாரிகளுக்கு வழங்க வேண்டிய கடப்பாட்டை சட்டம் விதிக்க வேண்டும். சட்டத்தின் குறிக்கோளை இலகு படுத்தும் பதிவுகளை முகாமைத்துவப்படுத்தும் முறைமைகளை உருவாக்கி சிறப்பாக பேணவேண்டும்.

---

**மேற்பார்வையிடல்.**

சட்டத்துக்கு கட்டுப்படுவது பற்றி தொடர்ச்சியாக மேற்பார்வையிட்டு பாராளுமன்றத்துக்கு அது பற்றி அறிக்கையிடுவது அணுகுவழி சட்டத்தின் அமுலாக்க முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமாகும்.

சட்டம் நாளடைவில் வலுவிழந்து அதிகாரம் குன்றிவிடாமல் சட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்படுகிறது என உறுதிசெய்ய அமுலாக்கம் பற்றிய சுதந்திரமான மேற்பார்வை அவசியம். பொதுநலவாய நாட்டு சட்டங்கள் ஏதாவது ஒரு வகையான மேற்பார்வையையும் வருடாந்த அறிக்கையிடலையும் வேண்டி நிற்கிறது. வேறு சில சட்டங்கள் குறிப்பிட்ட தலையங்கத்தில் வேலைக்கேற்ற அறிக்கைகள் பிரசுரிக்கப்படுவதை அனுமதிக்கின்றது. அறிக்கைகள் பொதுவாக சட்டத்தை நிர்வகிக்கும் அமைச்சராலோ மேன்முறையீட்டை விசாரிக்கும் சுதந்திர அங்கத்தாலோ தொகுக்கப்படுவது வழக்கம்.

உதாரணமாக பெலீசே நாட்டுச் சட்டத்தை பொறுத்தவரை பொறுப்பான அமைச்சர் வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். உகண்டா நாட்டின் 2005ம் ஆண்டு தகவல் அணுகுவழி சட்டத்திற்கு இணங்க சட்ட அமுலாக்கம் பற்றிய அறிக்கை ஒன்றை ஆண்டுக்கு ஒருமுறை ஒவ்வொரு அமைச்சர்களும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பது அவசியமாகும். கனடா நாட்டு சட்டம் தகவல் ஆணையாளர் ஓர் அறிக்கையையும் அரசாங்க இலாகாவின் தலைமைகள் ஒவ்வொரு அறிக்கையையும் பாராளுமன்றத்துக்கு கொடுக்க வேண்டும் என்கிறது. தென் ஆபிரிக்க மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டம் அமுலாக்கத்தை தொடர்ச்சியாக அவதானித்து வருகிறது. நேபாளம் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் சட்டத்தின் ஆற்றல், அமுலாக்கம் பற்றிய வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்துக்கு அரசாங்கம் சமர்பிக்க வேண்டும் என கோருகிறது.

விண்ணப்பம் பற்றிய அடிப்படை தரவுகள் மற்றும் மேன்முறையீடுகள் ஆகிவற்றையே அநேக அறிக்கைகள் உள்ளடக்கியுள்ளன. இருந்தாலும் வருடாந்த அறிக்கைகள் அமுலாக்கத்தை முன்னேற்ற தேவையான பரிந்துரைகளை வழங்குவதே ஒப்புக்கொள்ளப்பட்ட நடைமுறையாகும். இந்தியாவிலும், அன்டிகுவாவிலும் பார்படாவிலும் தென்னாபிரிக்காவிலும் நேபாளம் மற்றும் பங்களாதேஷிலும் அப்படியான பரிந்துரைகள் அறிக்கைக்கு அவசியமாகும். வருடாந்த அறிக்கையை சரியான முறையில் தொகுப்பதற்கு அறிக்கை தயாரிப்போருக்கு தேவையான தரவுகளை பொது அதிகாரிகள் வழங்க வேண்டும் என்ற கடப்பாட்டை வைத்திருப்பது முக்கியம். இதற்காக தொடர்ச்சியான மேற்பார்வையும் தரவு திரட்டுதலும் செவ்வனே நடப்பதை உறுதி செய்யும் உகந்த செயல்முறை அவசியம்.

ஆண்டறிக்கைகள் வெறுமனே பாராளுமன்ற நூலகத்தை அழகுபடுத்தாமல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக அது ஒரு பாராளுமன்ற குழுவுக்கு கண்காணிக்க மற்றும் மீளாய்வு செய்ய அனுப்பப்பட வேண்டும் என சிலசட்டங்கள் கூறுகிறது. அக்குழுவின் பரிந்துரையின் பேரில் அரசாங்கம் முக்கிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இச்செயல் முறை கனடா நடைமுறைப்படுத்தப்படுகிறது.

எல்லா பொது அதிகார சபைகளும் சட்ட அமுலாக்கம் பற்றிய ஆண்டறிக்கையை தகவல் ஆணையாளருக்கு சமர்பிக்க வேண்டும் என இலங்கையின் சுதந்திர தகவல் சட்டமூலம் வேண்டி நிற்கின்றது. தகவல் அறிவதற்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பத்தின் மொத்த எண்ணிக்கை, தகவல் கொடுக்கப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள், மறுப்புக்கான காரணம், எத்தனை முறை முறையீடுகள் செய்யப்பட்டன, தகவல் வழங்குவதற்கு திரட்டப்பட்ட கட்டணம் ஆகிய அனைத்து தரவுகளும் ஆண்டு அறிக்கையில் உள்ளடக்கப்படவேண்டும். தகவல் ஆணைக்குழுவும் அதனது செயல்பாடுகள் பற்றிய ஆண்டறிக்கை ஒன்றை பாராளுமன்ற ஆய்வுக்காக அனுப்ப வேண்டும் என சட்டமூலம் கூறுகிறது.

### அறிவூட்டலும் பயிற்சியும்.

அதிகாரிகளின் பயிற்சிக்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்ய அப்பயிற்சி வழங்குவதன் அவசியப்பாட்டை சட்டம் கூறவேண்டும்.

தகவலுக்கான கோரிக்கையை ஏற்படுத்துவதும் அறிவூட்டல் வழங்குவதும் செயல்திறன் மிக்க தகவல் அணுகுவழி முறைமையின் முக்கிய அம்சமாகும். மேன்முறையீடுகளை திறம்பட கையாள்வதற்கும் சட்ட அமுலாக்கத்தை பார்வையிடுவதற்கும் மட்டுமின்றி தகவலுக்கான உரிமை, திறந்த ஆட்சி முறை ஆகிய கோட்பாடுகளை பொதுஅதிகாரிகளுக்கு மத்தியிலும், பொது மக்களுக்கும் ஊக்குவிப்பதற்கு சுதந்திரமான நிறுவனத்தை ஏற்படுத்துவதை கடமையாக்கும் ஏற்பாடுகள் சட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவது அதிகரித்து வருகின்றன. இதனை அடையாளம் கண்டுள்ள தென் ஆபிரிக்க சட்டமும் இந்தியச் சட்டமும் முறையே அவர்களது மனித உரிமை ஆணைக்குழுவையும் இந்திய அரசாங்கத்தையும் நடவடிக்கை மேற்கொள்ளும்படி தூண்டியுள்ளன. தகவல் அறியும் உரிமை சம்பந்தமாக பொது மக்களுக்கு வழிகாட்டுதல் தயாரித்தளிப்பது, பொது மக்கள் அறிவூட்டல் நிகழ்ச்சிகள் நடத்துவது, சட்டத்தின் நன்மை பற்றி விசேடமாக நலன்கள் குறைந்த மக்களுக்கு அறிவூட்டுவது மற்றும் தகவல் உரிமை சலுகைகளை பொது நிறுவனம் மற்றும் தனியார் நிறுவனங்கள் பாவிக்க தூண்டுவது போன்ற விடயங்களை நடைமுறைப்படுத்த இவ்விரு நாட்டு சட்டமும் கரிசனை கொள்கிறது. நேபாள நாட்டுச்

சட்டம் அதன் தகவல் ஆணையாளர் தகவல் அறியும் உரிமையை பாதுகாத்து, ஊக்குவித்து, பிரபல்யப்படுத்த வேண்டுமென கூறுகிறது. இதே கடமைகளை பங்களாதேஷ் தகவல் ஆணைக்குழு மேல் புதிதாக எழுதப்பட்ட அந்நாட்டு சட்டம் விதிக்கின்றது.

அரசாங்க தகவல் அதிகாரிகளை பயிற்றுவிக்கும்படி தென் ஆபிரிக்க மற்றும் இந்தியச் சட்டங்கள் கூறுகின்றன. அன்டிகுவாவிலும் பார்படாவிலும் அமுலிலுள்ள சட்டம் ஒரு படி மேலே சென்று எல்லா உத்தியோகத்தர், அதிகாரிகளுக்கும் இச்சட்டம் பற்றிய சிறந்த பயிற்சி வழங்கப்பட வேண்டும் என்ற தனியான ஏற்பாட்டை வகுத்துள்ளது. பொது அதிகாரிகள் மத்தியில் சிறந்த பழக்கத்தை ஊக்குவிப்பதும், சட்ட நடத்தை, பொது மக்களுக்கு தகவல் வெளிபடுத்துவதும் தகவல் ஆணையாளர் மீதுள்ள கடமையென ஐக்கிய இராச்சிய தகவல் அணுகுவழி சட்டம் கூறுகிறது. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு தகுந்த பயிற்சிகளை வழங்குவதற்கான பாட விதானங்களை விருத்தி செய்வது மத்திய மட்டும் மாநில அரசுகளின் கடமை என இந்திய சட்டம் குறிப்பிடுகிறது.

இலங்கையின் சுதந்திர தகவல் சட்டமூலம் தகவல் ஆணைக்குழு அதனது சட்ட ஏற்பாடுகளை மக்களுக்கு அறியச்செய்து அது வழங்கும் உரிமைகளை பிரபல்யப்படுத்தவேண்டும் என கோருகிறது. தகவல் அணுகுவழி சட்டவாக்கத்தை திறம்பட அமுல்படுத்த உத்தியேகத்தர்களை பயிற்றுவிப்பதும் ஆணைக்குழுவின் கடமை என்கிறது இச்சட்டமூலம்.

### பதிவு முகாமைத்துவம்

சட்டம் கூறுவது போன்று தகவலுக்கான அணுகுவழியை இலகுவாக்கும் அடிப்படையில் பதிவுகள் முகாமைத்துவம் செய்யப்படவேண்டும்.

அரசாங்கம் வசம் இருக்கும் பரந்த அளவிளான பெரும் தொகையான தகவல்கள் மிக கவனமாக முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். அப்பொழுதுதான் சரியான நேரத்துக்கு வேண்டப்படும் தகவல்களை திரட்டி வழங்க முடியும். தகவல் உரிமையின் குறிக்கோள்களை ஆதரிக்கக் கூடிய ஆற்றல் மிகுந்த சட்டவடிவம் அதற்கான முக்கிய அம்சமாகும். தகவல் அறியும் உரிமையை இலகுவாக்கும் முறையிலும், வடிவத்திலும் பதிவுகளை பேணி, தகுதியான எல்லா பதிவுகளையும் தகுந்த காலத்துக்குள், இருக்கும் வளங்களுக்கு ஏற்ப கணனி மயமாக்கி, அதனை இலகுவாக அடைந்துக் கொள்ளக்கூடிய வித்தியாச முறைகளில் நாட்டின் எல்லா பாகங்களுக்கும் வலைப்பின்னல் மூலம் தொடர்ப்புபடுத்தி பாதுகாப்பது பொது அதிகாரசபையின் கடமை என இந்திய மற்றும் பாகிஸ்தானிய சட்டம் கூறுகிறது.

பதிவு முகாமைத்துவ முறைகள் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்பட்டு முன்னேற்றம் அடைகிறதா என உறுதி செய்ய தொடர்சியான அறிவுறைகள் சட்டத்துக்கு தேவையாகும். வளரும் அறிவு தொழில்நுட்பத்தின் துணையுடன் தகவல் உருவாக்கம், நிர்வாகம் சீர் செய்யப்படவேண்டும். தகவல்களை பாதுகாத்து நிர்வாகிப்பதற்கு மட்டுமின்றி அவைகளை முறையாக அழித்துவிடுவதற்கும் தேவையான வழிகாட்டுதல்களை வழங்கும் பயிற்சி கோட்பாடுகளை உருவாக்க வேண்டுமென ஐக்கிய இராச்சிய சட்டம் குறிப்பிடுகிறது. சட்டத்திற்கேற்ப தகவல் பதிவுகள் பாதுகாக்கப்பட்டு நிர்வாகிக்கப்படும் முறையை மீளாய்வு செய்வது சம்பந்தப்பட்ட அமைச்சரின் பொறுப்பு என கனடா நாட்டின் சட்டம் கூறுகிறது. தகவல் பதிவு முகாமைத்துவம் சம்பந்தமான தேசிய நியமம் அவுஸ்திரேலியாவில் பொது அதிகாரிகளுக்கு வழிகாட்டுதல்களை வழங்குகிறது. மக்களுக்கு தகவல் வழங்கும் வழிமுறையை இலகுபடுத்தும் நோக்கோடு கணனி மயப்படுத்தப்பட்டு வலைப்பின்னலுடனான தகவல் பதிவு நிர்வாகம் உருவாக்கப்படுவது அவசியம் என்கிறது இந்தியச் சட்டம்.

இலங்கையின் பொது அதிகாரசபைகள் மற்றும் நிறுவனங்கள் தம்வசம் இருக்கும் தகவல் பதிவுகளை திறம்பட பராமரிப்பதற்கு சுட்டெண்ணுடனான பட்டியல் முறையை பேணுவது கடமையென இலங்கை தகவல் அறியும் உரிமை சட்டமூலம் கூறுகிறது. 2003ல் தயாரிக்கப்பட்ட இலங்கையின் தகவல் சுதந்திர சட்டமூலம் சர்வதேச தரத்திற்கேற்ப ஒப்பற்ற நல்ல பல அம்சங்களை கொண்டுள்ளது. அதனை மேலும் முன்னேற்ற சிறந்த வழிகள் உள்ளது. வடக்கு கிழக்கு மாகாணங்களையும், முழு நாட்டையும் ஆட்டி படைத்த யுத்த சூழல் முடிவுக்கு வந்துவிட்ட இத்தருணத்தில் தேங்கி கிடக்கும் இச்சட்டமூலத்தை இன்னும் பல புதிய ஏற்பாடுகளுடன் வெளிக்கொண்டுவர சிறந்த சந்தர்ப்பமாக இது உள்ளது. இரகசியமாக தயாரிக்கப்படும் சட்டத்தைவிட பொது மக்களையும் சிவில் சமூகத்தையும் இணைத்துக் கொண்டு தயாரிக்கப்படும் சட்டம் மிக சிறப்பாக பயன்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படும்.

**இந்திய ஆயுள் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் இந்திய தொழிற்சங்க சம்மேளனம் உட்பட ஏனையவை**

**எதிர் - பேராசிரியர் மனுபாய் டி ஷா மற்றும் சினேமாட் மன்றம்**

அரச நிறுவனங்களால் இடப்பட்ட தணிக்கையை எதிர்த்து மேன் முறையீடு செய்யப்பட்ட வழக்குகளில் ஜனநாயக முறைமையில் இடம்பெறும் முன்னேற்றங்களை அறிந்துக்கொள்ளும் பொது மக்களின் அடிப்படை உரிமையின் முக்கியத்துவத்தை வழியுறுத்தியது உச்ச நீதிமன்றம்.

இவ்வழக்கு ஒரு காப்புறுதி நிபுணர் அரச காப்புறுதி நிறுவனம் ஒன்றின் பாரபட்ச கொள்கையை விமர்சித்து எழுதிய கட்டுரையை அந்நிறுவனத்தின் உள்ளக சஞ்சிகையில் பிரசுரிக்க நிறுவனம் மறுப்பு தெரிவித்தது சம்பந்தமானதாகும்.

1978ம் ஆண்டு பேராசிரியர். மனுபாய் டி ஷா நுகர்வோர் உரிமை சார்பான பிரபல்யமான நிபுணர் ஒருவர் இந்திய ஆயுள் காப்புறுதி கூட்டுத்தாபனம் பின்பற்றும் பாரபட்ச கொள்கை பற்றிய ஆய்வு கட்டுரை ஒன்றை பிரசுரித்து பரவலாக விநியோகித்தார். இக்காப்புறுதி நிறுவனம் எப்படி நியாயமற்ற அதிக கட்டணங்களை வசதி படைத்தவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு வறிய மக்களுக்கு காப்புறதி வழங்க மறுக்கிறது என்பதை தரவுகள் மூலம் எடுத்து காட்டினார். ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் அங்கத்தவர் ஒருவர் பேராசிரியர். ஷாவின் கட்டுரைக்கு பதில் கட்டுரை ஒன்றை எழுதி பிரபல்யமான ஆங்கில பத்திரிகை ஒன்றில் பிரசுரித்தார். காப்புறுதி நிறுவனத்தின் வாதங்களுக்கு பதிலாக பேராசிரியர். ஷா இன்னுமொரு கட்டுரையை அதே பத்திரிகையின் மூலம் எழுதி பிரசுரித்தார். பிறகு காப்புறுதி நிறுவனம் அதன் உள்ளக சஞ்சிகையான 'யோகக்ஷேமா' என்ற சஞ்சிகையில் காப்புறுதி கூட்டுத்தாபன அங்கத்தவர் பத்திரிகைக்கு எழுதிய ஆரம்ப பதில் கட்டுரையை பிரசுரித்தது. இதற்கு பத்திரிகை மூலம் பேராசிரியர் எழுதிய பதில் கட்டுரையையும் சஞ்சிகையில் பிரசுரிக்கவேண்டும் என பேராசிரியர். ஷா நிறுவனத்தை கேட்டுக்கொண்டபோது நிறுவனம் மறுப்பு தெரிவித்தது. 'யோகக்ஷேமா' சஞ்சிகை ஓர் உள்ளக சஞ்சிகையென்றும் நிறுவனத்தின் செயல்பாடுகள் பற்றிய விடயங்களை அதன் ஊழியர்களுக்கு அறிவிக்கும் சஞ்சிகையேயன்றி பொது மக்களுக்கு விற்கப்படும் சஞ்சிகையல்ல என்றும்

ஆயுள் காப்புறுதி கூட்டுத்தாபனம் கூறியது. அத்தோடு பேராசிரியர். ஷாவுக்காக சஞ்சிகையில் பிரசுரிக்க கோரும் உரிமையில்லை என்றும் நிறுவனம் வாதிட்டது. தனது வேண்டுகோள் மறுக்கப்பட்டதற்கு எதிராக பேராசிரியர். ஷா குஜராத் உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்து தனது பேச்சு மற்றும் வெளிப்பாட்டு சுதந்திரம் மீறப்பட்டுள்ளதாக வாதிட்டார்.

மனுவை விசாரித்த குஜராத் உயர் நீதிமன்றம் ஆயுள் காப்புறுதி கூட்டுத்தாபனம் ஓர் அரச நிறுவனமாதலால் மக்களின் அடிப்படை உரிமை மீறாத அளவுக்கு செயல்பட அரசியல் சாசன அடிப்படையிலான கடமை அதற்குண்டு என்று கூறியது. இன்னும் □யோகக்ஷேமா' சஞ்சிகை பொது மக்களுக்காகவும் சந்தையில் விற்கப்படுவதோடு நிறவனத்தின் ஊழியர்களுடன் பொது மக்களிடமிருந்தும் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. ஆதலால் அதனை ஓர் உள்ளக சஞ்சிகையென தரப்படுத்த முடியாது என்றும் முடிவு செய்தது. அதோடு அச்சஞ்கை பொது நிதியைக் கொண்டு பிரசுரிக்கப்படுவதால் பொது மக்கள் அணுகக் கூடியதாகவே அது இருக்கவேண்டும் என்று கூறிய உயர் நீதி மன்றம் பேராசிரியர். ஷாவின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதால் அவரது பதில் கட்டுரையை அது பிரசுரிக்க வேண்டும் என தீர்ப்பு கூறியது.

இத்தீர்ப்பை ஆட்சேபித்து ஆயுள் காப்புறுதி கூட்டுத்தாபனம் உச்ச நீதிமன்றம் சென்றது. உயர் நீதிமன்றத்தில் வாதிட்ட அதே அடிப்படையில் உச்ச நீதி மன்றத்தில் வாதிட்டதோடு பேராசிரியரின் கட்டுரை காலங்கடந்ததாகிவிட்டதால் பிரசுரத்திற்கு தகுந்ததல்ல என்றும் வாதிட்டது.

சர்வதேச மனித உரிமை பிரகடனத்தை சுட்டிக்காட்டிய உச்ச நீதிமன்றம் பேச்சு மற்றும் வெளிப்பாட்டுரிமையானது மனிதப் பிறப்புடன் சேர்ந்து வரும் இயற்கை உரிமை என்றும் அரசியல் சாசனத்தால் அது பாதுகாக்கப்பட்டுள்ளது என்றும் தீர்ப்பு கூறியது. இந்திய மற்றும் அமெரிக்க சட்டவியலின் மூலம் உள்ளுணர்வு பெற்ற உச்ச நீதி மன்றம் ஊடகத்தின் மூலமாக கருத்து வெளியிடும் உரிமையையும் பேச்சுரிமை உள்ளடக்கியுள்ளது என கருத்து தெரிவித்தது.

“பேச்சு மற்றும் வெளிப்பாட்டுரிமை பற்றிய அரசியல் சாசன உறுதிப்பாடு மக்கள் நலனுக்கு எப்படியோ அப்படியே பத்திரிகை நலனுக்குமாகும். ஜனநாயக நடைமுறை ஒன்றில் நிகழும் முன்னேற்றங்களை

அறிந்துக்கொள்வது மக்களின் உரிமையாகும். இந்த தகவல் வெளிப்பாட்டில் பத்திரிகைக்கு முக்கிய பங்குண்டு” எனக் கூறிய உச்ச நீதி மன்றம் “மக்கள் பணத்தால் நடத்தப்படுகின்ற அரசாங்கமோ அதன் அங்கங்களோ வேறு பொது நிறுவனங்களோ அவைகளின் செயல்பாடுகளிலுள்ள குறைகளை எடுத்துக் கூறுகின்ற கட்டுரைகளிலிருந்து தப்பிவிடவோ அவைகளை மக்களுக்க வெளியிடும் காரியத்தை தடுக்கவோ முடியாது” என்றும் அறிவித்தது. மேலும் இவ்வழக்கு தீர்ப்பில் கருத்து தெரிவித்த உச்ச நீதி மன்றம் - ஆயுள் காப்புறுதி கூட்டுத்தாபனம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தால் சமூக நலனுக்காக ஆயள் காப்புறுதி பணியை மேற்கொள்ள உருவாக்கப்பட்டதாகும். இதனது செயற்பாடு இந்த நியதிச்சட்ட நோக்கத்தை நிறைவேற்றும் வண்ணம் நடைபெறுகிறதா? என்பதை அறிய மக்களுக்கு பூரண உரிமை உண்டு எனவும் விளக்கப்படுத்தியது. ஆயுள் காப்புறுதி கூட்டுத்தாபனம் அதனது வீணான செலவுகளை குறைத்துக்கொண்டால் அது அநியாயமாக அறவிடும் உயர் காப்புறுதி கட்டணங்களை குறைக்க முடியுமென மக்களுக்கு அறிவிக்கவே பிரதிவாதி ஆய்வுக் கட்டுரையை எழுதியுள்ளார். கூட்டுத்தாபனத்தின் குறைபாடுகளை சமூகத்துக்கு எடுத்துக்காட்டி எந்தெந்த துறைகளில் முன்னேற்றமும், திருத்தமும் மேற்கொள்ளப்படவேண்டும் என அறியத்தரும் முயற்சியில்தான் அவர் அதை எழுதியுள்ளார்” என்றும் உச்ச நீதி மன்றம் தனது தீர்ப்பில் கூறியது. ஆயுள் காப்புறுதி கூட்டுத்தாபனம் பிரதிவாதியின் கட்டுரையை பிரசுரிக்க மறுத்தது நியாயமற்றது. ஏனெனில் மக்கள் சுயமாக முடிவு செய்வதற்காக இரு வேறுப்பட்ட கருத்துக்களையும் அது பிரசுரித்திருக்க வேண்டும். மக்களுக்கு தகவல் வெளிப்பாட்டை மறுத்ததால் ஆயுள் காப்புறுதி கூட்டுத்தாபனம் பொது நன்மைக்கெதிராக இயங்கியுள்ளது” என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

கட்டுரை காலம் கடந்ததாகிவிட்டது என்ற ஆயுள் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் வாதத்துக்கு பதிலளித்த நீதிமன்றம் “பிரதிவாதியின் பதில் கட்டுரையை நிறுவனம் பிரசுரிக்க மறுத்ததால் அவரின் அடிப்படை உரிமையை அது மீறியுள்ளது எனக் கூறியதோடு ஒரு குழுவின் உரிமையை தவறுதலாகக்கூட இல்லாமலாக்கி விடாத அளவுக்கு நீதிமன்றம் மிக கவனமாக இருக்கவேண்டும். பிரதிவாதி தனது ஆக்கம் உயிரோட்டமிக்கது, தகுந்தது, ஆதலால் பிரசுரத்தை விரும்புகிறேன் என கருதினால் அவரது

மதிப்பீட்டை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். நீண்ட வருடங்களுக்கு பிறகு இந்த பதில் கட்டுரை ஏன் பிரசுரிக்கப்படுகிறது என வாசகர் அறிந்து பாராட்ட வேண்டும் என்பதற்காக ஆயுள் காப்புறுதி கூட்டுத்தாபனத்துக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது போன்று பதில் கட்டுரையை தகுந்த விளக்கத்துடன் பிரசுரிப்பதோடு தாமதத்துக்கு மன்னிப்பும் கோர வேண்டும் என தீர்ப்பளித்தது.

பிறகு ஆயுள் காப்புறுதி கூட்டுத்தாபனம் பேராசிரியர். மனுபாய் டி ஷாவின் பதில் கட்டுரையை யோகக்ஷேமா சஞ்சிகையில் பிரசுரித்தது. ஜனநாயக செயல்முறையின் உள்ளடக்கங்களை அறிவது ஒவ்வொரு தனி மனிதனது உரிமையாதலால் அதனை அநியாயமாக தடுக்காமல், மீறாமல் இருப்பது அரசாங்கத்தின் கடமை என உச்ச நீதிமன்றம் அடையாளப்படுத்தியதில்தான் இந்த தீர்ப்பின் மதிப்பும், முக்கியத்துவமும் தங்கியுள்ளது.

NOTES:

1. Document issued by the Commonwealth Expert Group Meeting on the Right to Know and the Promotion of Democracy and Development, London, 30-31 March 1999.

2. UN General Assembly (1946) Resolution 59(1), 65th Plenary Meeting, 14 December http://daccess-ods.un.org/access.nsf/Get?OpenAgent&DS=A/RES/59(I)&Lang=E&Area=RESOLUTION as on 21 August, 2009

3. Emphasis added. 4. Report of the Special Rapporteur, UN Doc. E/CN.4/1998/40, 28 January 1998, para.14.

5. Res. E/CN.4/1998/42, 17 April 1998, para.2.

6. Report of the Special Rapporteur, UN Doc. E/CN.4/2000/63, 18 January 2000, paras 43, 44. The Principles were developed by the non-governmental organisation Article 19 – the International Centre against Censorship.

7. Res. E/CN.4/RES/2000/38, 20 April 2000, para 2.

8.Office of the Special Rapporteur for Freedom of Expression, Inter-American Commission on Human Rights (2004) International Mechanisms for Promoting Freedom of Expression: Joint Declaration by the UN Special Rapporteur, Organisation of Security and Co-operation in Europe on Freedom of the Media and Organisation of American States Special Rapporteur on Freedom of Expression, 6 December: http://www.cidh.oas.org/relatoria/showarticle.asp?artID=319&lID=1 as on 21 August, 2009. 9. Ibid. 10.Ibid.

11.Joint Declaration by the UN Special Rapporteur, Organisation of Security and Co-operation in Europe Representative on Freedom of the Media, and Organisation of American States Special Rapporteur on Freedom of Expression, adopted 26 November 1999, UN Doc. E/CN.4/2000/63, 18 January 2000, Annex 1.

12. UN Doc. E/CN.4/2000/63, 18 January 2000, Annex 2.

13. United Nations (2000) Committee on Social, Economic and Cultural Rights, General Comment no.14 E/C.12/2000/4, para 12:http://www.unhchr.ch/tbs/doc.nsf/(symbol)/E.C.12.2000.4.En as on 21 August, 2009

14. United Nations (2003) Committee on Social, Economic and Cultural Rights, General Comment no.15 E/C.12/2002/11,para.45:http://www.unhchr.ch/tbs/doc.nsf/0/a5458d1d1bbd713fc1256cc400389e94?Opendocument as on 21 August, 2009.

15. United Nations (1999) Committee on Social, Economic and Cultural Rights, General Comment no.13 E/C.12/1999/10, para. 56: http://www.unhchr.ch/tbs/doc.nsf/(symbol)/E.C.12.1999.10.En?OpenDocument as on 21 August, 2009.

16. United Nations (1999) Committee on Social, Economic and Cultural Rights, General Comment no.12 E/C.12/1999/5, para.23: http://www.unhchr.ch/tbs/doc.nsf/0/3d02758c707031d58025677f003b73b9?Opendocument as on 21 August, 2009.

17. Articles 10(h), 14(b) and 16(1)(e), Website of the UN Division for the Advancement of Women, International Convention on the Elimination of All Forms of Discrimination against Women, http://www.un.org/womenwatch/daw/cedaw/text/econvention.htm as on 21 August 2009.

18. Articles 13(1), 28(1)(d) and 22(2), International Convention on the Rights of the Child, Website of the UN High Commissioner for Human Rights: http://www2.ohchr.org/english/law/crc.htm as on 21 August 2009.

19. United Nations (1990) International Convention on the Protection of the Rights of All Migrant Workers and Their Families: http://www.ohchr.org/english/law/cmw.htm as on 21 August, 2009.

20. UN Doc. A/Conf.151/26 - Vol. 1, June 1992, Annex 1, Principle 10.

21. UN Doc. A/RES/S-19/2, 19 September 1997, para 108. 22. Plan of Implementation for the World Summit on Sustainable Development, September 2002, para.128, http://www.un.org/esa/sustdev/documents/WSSD_POI_PD/English/POIToc.htm as on 21 August, 2009.

23. Programme of Action of the World Summit for Social Development, March 1995, para. 16.

24. United Nations (2003) United Nations Convention Against Corruption: http://www.unodc.org/unodc/en/treaties/CAC/index.html as 21 August, 2009.

25. See: http://www.thecommonwealth.org/subhomepage/191086/ as on 21 August, 2009.

26. Communiqué, (1980) Issued by Commonwealth Law Ministers, Barbados.

27. Communiqué, (1999) Issued by the Meeting of Commonwealth Law Ministers, Trinidad and Tobago.

28. Communiqué issued by the Commonwealth Law Ministers, Trinidad and Tobago, May 1999, para. 21.

29. The Durban Communiqué, Commonwealth Heads of Government Meeting, Durban, 15 November 1999, para. 57.

30. Freedom of Information Act [ ], Commonwealth Secretariat Doc. LMM(02)6, Annex, September 2002.

31. G-7, civil society press for IMF world Bank transparency reforms available at http://www.brettonwoodsproject.org/art-4569 as on 21 August, 2009

32. Roberts, A. (2000) “Informational commons at risk”, p.15, http://www.queensu.ca/sps/publications/working_papers/08.pdf as on 21 August, 2009.

33. WTO (2002) Procedure for the Circulation and Derestriction of WTO Documents, Doc. WT/L/452, decision of 14 May 2002, http://docsonline.wto.org/DDFDocuments/t/WT/L/452.doc as on 21 August, 2009.

34. WTO (2002) Explanatory note on old and new procedures, http://www.wto.org/english/forums_e/ngo_e/derestr_explane_e.htm as on 21 August, 2009.

35. Article II.2.xvi, SAARC Social Charter, website of SAARC Secretariat, http://www.saarc-sec.org/main.php?id=13 : as on 21 August, 2009.

36. For more details about the 2003 process in Sri Lanka, please see vol. 1 in this series: The Right To Information: Touchstone For Democracy And Development. 37. Art. 21(1)(f), Constitution of Ghana; Art. 37, Constitution of Malawi; Art.74(1), Constitution of Mozambique; Art. 51, Constitution of Papua New Guinea; Art.32, Constitution of South Africa; Art.18(2), Constitution of United Republic of Tanzania; Art.41, Constitution of Uganda.

38. See Comparative Table- Status of the Right to Information in the Commonwealth, website of CHRI: http://www.humanrightsinitiative.org/programs/ai/rti/international/laws_&_papers.htm as on 21 August 2009.

39. For a more detailed discussion on the decisions of the Supreme Court of Sri Lanka please see vol. 1 in this series: The Right To Information: Touchstone For Democracy And Development. 40. State of Uttar Pradesh v Raj Narain, AIR 1975, SC865. 41. S P Gupta v President of India, [1982] 2 SCR 365.

42. Dewan Abdul Kader v Bangladesh, 46 DLR 1994. cited in Kitora, Mika (2003), The Right to Information in Bangladesh, Ain o Salish Kendra (ASK): contribution to CHRI's publication- Open Sesame: Looking for the Right to Information in the Commonwealth, unpublished.

43. Right to Information Act, 2009, website of CHRI: http://www.humanrightsinitiative.org/programs/ai/rti/international/laws_papers/bangladesh/bangladesh_rti_act_2009.pdf for an unofficial English language version of the law see: http://www.humanrightsinitiative.org/programs/ai/rti/international/laws_papers/bangladesh/unofficial_english_version_of_bangladesh_rti_act.pdf as on 21 August 2009.

44. Preamble to the Right to Information Act 2005. Similar provisions can be found in the Preamble of the Promotion of Access to Information Act 2000 (South Africa), and s.2 of the in the Access to Information Act 2002 (Jamaica).

45. Section 3.

46. Section 3(2).

47. Section 2(1).

48. Law Commission of Sri Lanka (2003), Report of the Law Commission of Sri Lanka on the Draft Freedom of Information Bill: http://www.lawcomdept.gov.lk/info/index.asp?xp=723&xi=808 as on 21 August, 2009.

49. For example, Freedom of Information Act 1994 (Belize) excludes the Governor General (s.5); Access to Information Act 2002 (Jamaica), excludes the Governor-General (s.5(a)); Freedom of Information Act 1999 (Trinidad & Tobago) excludes the national President (s.5(1)(a)) and allows the President by decree to exempt other government agencies from being covered by the Act (s.5(1)(c)).

50. Section 2. The Freedom of Information Act 1999 (Trinidad & Tobago) contains a similar provision (s.4).

51. Promotion of Access to Information Act 2000 (South Africa), s.50; Freedom of Information Act 2004, s.16(3).

52. Section 4. See also Official Information Act 1982 (NZ), s.2(5).

53.Section 3(2).

54. Section 5(1).

55. Jamaican Act s. 5(3) 56. Section 36 supra., n. 50.

57. For example, Freedom of Information Act 2000 (UK), s.1.

58. For example, Freedom of Information Act 2000 (India), s.3.

59. For example, Access to Information Act 1983 (Canada), s.4(1)(b). The Canadian Act also gives the Governor-General the discretion to extend the right of access to persons other than citizens and permanent residents (s.4(1), (2)).

60. For example, Freedom of Information Act 1982 (Aust), s.15(1)(c).

61. Section 12(1)(d) and (e).

62. For example, Official Information Act 1982 (NZ), s.12(3).

63. Sections 7(1) and 9(1), Right to Information Act, 2064 B.S., website of the Nepal Information Commission: http://www.nic.gov.np/download/rti_act_eng_official.pdf as on 21 August, 2009.

64. Section 2.

65. Section 27.

66. Sen Amartya (2009) The Idea of Justice, Allen Lane, India, chapters 15-17.

67. Freedom of Information Act 1982 (Aust), s.4(1); Access to Information Act 2002 (Jamaica), s.6; Promotion of Access to Information Act 2000 (South Africa) Act, s. 3. In the South African Act, "record" has been defined very widely to include any information regardless of the form or medium in which it is presented, regardless of whether it was created by a public or private body, and regardless of when it was created.

68. Section 1.

69. Section 36, supra., n. 50. 70. Freedom of Information Act 1994 (Belize), s.6; Freedom of Information Act 2002 (India), s.4(b); Promotion of Access to Information Act 2000 (South Africa), s.14.

71. Promotion of Access to Information Act 2000 (South Africa), s.16.

72. Section 6. See also Freedom of Information Act 1982 (Aust), s.10.

73. Section 4.

74. Section 4(c) and (e)

75. Section 7, supra., n. 50.

76. Section 8.

77. Section 9(2).

78. Section 9(2).

79. Section 4.

80. Based on: (2001) Global Trends on the Right to Information: A survey of South Asia, ARTICLE 19, CHRI, CPA, HRCP, pp.91-2.

81. For example, section 24 of the Right to Information Act 2005 (India) provides a blanket exemption to "intelligence and security organisations" which are specified in a schedule to the Act. This schedule includes such bodies as the Narcotics Control Bureau and the Aviation Research Centre. Section 7 of the Freedom of Information Act 1982 (Aust) adopts a two-tiered to exemptions, listing: (i) agencies which are fully exempt from its purview (eg. the Auditor-General, the Australian Security Intelligence Organisation, the Australian Shipping Commission); and (ii) agencies which are exempt in respect of particular documents (eg. Reserve Bank of Australia, in relation to its banking operations and exchange control matters).

82. Freedom of Information Act 1989 (NSW) Schedule 1, Clause 22.

83. Australian Grand Prix Act 1994 (Vic), s.49

84. Freedom of Information Act 2000 (UK), ss. 24, 26, 27.

85. Section 8(3).

86. Section 4(1)(a) and (d).

87. "Minutes of Interest", The Times, 14 April 1994.

88. For example, Freedom of Information Act 1982 (Aust), s.58(3); Freedom of Information Act 1994 (Belize), 35(4); Access to Information Act 2002 (Jamaica), s.32(6)(b).

89. CFOI (2002) "Campaign warns about ministers' 'disclosure veto'", 11 January 2002, http://www.cfoi.org.uk/scotctteerpt110102pr.html 90. Frankel, M. (2003) "A window on the mind of No 10: Open Government would have prevented the Iraq war debacle", http://www.cfoi.org.uk/gdnarticle290803.html as on 21 August, 2009.

91. Right to Information Act 2005 (India), s.8(2); Freedom of Information Act 2004 (Antigua & Barbuda), s.24.

92. Promotion of Access to Information Act 2000 (South Africa), s.46; Freedom of Information Act 1999 (Trinidad & Tobago), s.35.

93. Ombudsman Quarterly Review (NZ), 1:2 June 1995, cited in CFOI (1997) "Freedom of Information: Key Issues", www.cfoi.org.uk/opengov.html#issues as on 21 August, 2009..

94. For example, security and national defence interests (s.6(a)).

95. For example, where the national economy is concerned (s.6(d)).

96. Access to Information Act 1983 (Canada), s..20(6).

97. Section 60.

98. Section 4(1), supra., n. 50.

99. For example, Freedom of Information Act 1982 (Aust), s. 17; Freedom of Information Act 1994 (Belize), s.19; Official Information Act 1982 (NZ), s. 17; Freedom of Information Act 2002 (India), s.10; Promotion of Access to Information Act 2000 (South Africa), s.28.

100. Section 5, supra., n. 50.

101. Section 7(2)(a). 102. Right to Information Act 2002 (India), s.6; Freedom of Information Act 2004 (Antigua & Barbuda), s.17; Access to Information Act 2005 (Uganda), s.11; Promotion of Access to Information Act 2000 (South Africa), ss.18(3)(a).

103. For example, Freedom of Information Act 2002 (India), s. 5(2); Promotion of Access to Information Act 2000 (South Africa), ss.19, 20; Freedom of Information Act 1994 (Belize), ss.12(5), 13; Freedom of Information Act 1999 (Trinidad & Tobago), s.14; Freedom of Information Act 1982 (Aust), s. 15; Access to Information Act 2002 (Jamaica), s.8.

104. For example, the Official Information Act 1982 (NZ) s.12(2) requires the requestor to specify the information sought "with due particularity". Section 6 of the Access to Information Act 1983 (Canada) requires requesters to "provide sufficient detail to enable an experienced employee of the institution with a reasonable effort to identify the record." Similar phraseology is used in the Freedom of Information Act 1982 (Aust) (s.15(2)(b)) and Freedom of Information Act 1999 (Trinidad & Tobago) (s.13(2)).

105. Section 20(1), supra., n. 50.

106. Ection 19(2).

107. For example, Freedom of Information Act 1982 (Aust), s.16; Official Information Act 1982 (NZ), s.18; Freedom of Information Act 1999 (Trinidad & Tobago), s.4.

108. Section 16(1)(f).

109.Promotion of Access to Information Act 2000 (South Africa), s.29(5); Access to Information Act 2005 (Uganda), s.20(5)-(7). Section 12(3) of the Access to Information Act 1983 (Canada) also contains a provision which permits special access for requestors with "sensory" disabilities.

110. Section 7(4).

111. Section 11(4).

112.Access to Information Act 1983 (Canada), s.12(2)(b).

113. Section 31.

114. Constitution of India, Sch. VIII, read with Arts. 344(1) and 351. As well as the 15 languages listed here, English is also an officially recognised language in India.

115. Section 23(1), supra., n. 50.

116. Section 23(2), supra., n. 50.

117. Ricketson, M. (2002) "Keeping the lid on information", The Age, 28 November 2002, http://www.mail-archive.com/cypherpunks@minder.net/msg29658.html. as on 21 August, 2009

118. For example, Access to Information Act 1983 (Canada), s. 11(2), which charges for any search time incurred beyond an additional free first five hours; Promotion of Access to Information Act 2000 (South Africa), ss.22(2) and(6).

119. For example, Access to Information Act 2002 (Jamaica), s.12(1); Promotion of Access to Information Act 2000 (South Africa), s.22(7).

120. Section 7.

121. For example, Access to Information Act 1983 (Canada), s.11(6); Access to Information Act 2002 (Jamaica), s.12(2).

122. For example, Freedom of Information Act 1982 (Aust), s.29(5).

123. Access to Information Act 2002 (Jamaica), s.17(3); Right to Information Act 2005 (India), s.7(6).

124. For example, Freedom of Information Act 2004 (Antigua & Barbuda), s.20.

125. Section 21, supra., n. 50.

126. Section 22.

127. For example, Freedom of Information Act 2002 (India), s.7(1); Official Information Act 1982 (NZ), s.15(1); Promotion of Access to Information Act 2000 (South Africa), s.25(1) .

128. Section 7(1) of the Indian RTI Act, 2005 and Section 9 of the Bangladeshi RTI Act, 2009.

129. Access to Information Act 1983 (Canada), s. 10(3); Right to Information Act 2004, s.7(2); Promotion of Access to Information Act 2000 (South Africa), s.27.

130. Section 21, supra., n. 50.

131. For example, Freedom of Information Act 1982 (Aust), s. 26(1); Freedom of Information Act 1994 (Belize), s.21; Freedom of Information Act 2002 (India), s.7(3); Official Information Act 1982 (NZ), s. 19.

132. Section 24, supra., n. 50.

133. Part V.

134. Part IV, in particular ss.55-57.

135. Freedom of Information Act 1994 (Belize), Part V; Official Information Act 1982 (NZ), Part V; Freedom of Information Act 1999 (Trinidad & Tobago), ss.38A and 39.

136. The Antigua & Barbuda Act also requires the establishment of an Information Commissioner, but at the time of writing it is not known whether this requirement has been complied with.

137. Sections 30-37.

138. Parts IV and V.

139. Section 18(1)(f).

140. Section 19(8)(a).

141.Section 19(8)(b) and (c).

142. Sections 28, 29 and 30 supra., n. 50.

143. Section 31.

144. Section 11(1) and 11(2)

145. Section 20 of the Indian RTI Act, 2005, Section 27, of the Bangladeshi RTI Act, 2009 and Section 32 of the Nepali RTI Act, 2007.

146. For example, Access to Information Act 1983 (Canada), s.67.1; Access to Information Act 2002 (Jamaica), s.34; Promotion of Access to Information Act 2000 (South Africa), s.90; Freedom of Information Act 2000 (UK), s.77

147. Slane, B.H. (1997) "Submission by the Privacy Commissioner to the Law Commission in relation to a 'fine-tuning' review of the Official Information Act 1982", 14 April 1997, para. 4.17, http://www.privacy.org.nz/official-information-act/ as on 21 August, 2009.

148. Ibid.

149. Section 20(1).

150. Section 19(8)(b).

151. Section 54. 152. Section 56.

153. For example, Freedom of Information Act 1982 (Aust), s.92; Right to Information Act 2005 (India), s.21; Freedom of Information Act 1999 (Trinidad & Tobago), s.36.

154. Section 33, supra., n. 50.

155. Section 5(3).

156. Section 6.

157. Section 43.

158. Sections 38 and 72.

159. Part V.

160. Section 30 of the Bangladeshi RTI Act, 2009 and Section 25 of the Nepali RTI Act, 2007.

161. See Right to Information Act 2005 (India), s.25(1); Access to Information Act 1982 (Canada), ss.38 and 72; Freedom of Information Act 2004 (Antigua & Barbuda), s.37; Promotion of Access to Information Act 2000 (South Africa), Part V.

162. Sections 38 and 39.

163. Sections 9 and 13(a). 164. Section 32, supra., n. 50.

165. Promotion of Access to Information Act 2000 (South Africa), s.83; Right to Information Act 2005 (India), s.26(1).

166. Section 11.

167. Section 13.

168. Section 13.

169. Section 47.

170. Section 26.

171. Section 13(f), supra., n. 50.

172. Section 13(e), supra., n. 50.

173. Right to Information Act 2005 (India), s.4(1); Freedom of Information Ordinance 2002 (Pakistan), s.6.

174.Section 46.

175. Section 71(1)(a).

176. Australian Standard AS 4390-1996: Records Management. 177. Section 13.

178. Section 4(1(a).

179. Section 6(1), supra., n. 50.

180.Section 6(2)(a)&(b).

181. AIR1993 SC171

182. As this case is not directly related to the people's right to know, the details are not being discussed here.

# துணையாளி பற்றி

Friedrich-Naumann-Stiftung für die Freiheit

The Friedrich-Naumann-Stiftung für die Freiheit சமஷ்டி அரசியலுக்கான ஒரு மன்றமாகும். இரண்டாம் உலக மகாயுத்தத்தைத் தொடர்ந்து, ஜேர்மனியின் முதலாவது சமஷ்டி ஜனாதிபதியான தியோடோர் ஹேயுஸ் இன்னும் சிலருடன் 1958ஆம் ஆண்டு இதனைத் தாபித்தார். இப்போது, இம்மன்றமானது உலகில் உள்ள அறுபது நாடுகளில் சுதந்திரத்திற்கான உத்திகள் மற்றும் விடுதலைக்கான ஆலேசனைகளையும் ஊக்குவிப்பதில் பணியாற்றிவருகின்றது. சிவில் சமூகக் கல்வி, அரசியல் ஆலோசனை மற்றும் அரசியல் உரையாடல் என்பன இதன் உபாயக்கருவிகளாகும்.

The Friedrich-Naumann-Stiftung für die Freiheit சட்டத்தின் ஆட்சி, சந்தைப் பொருளாதாரம், ஜனநாயகம், சுதந்திரம் என்பனவற்றை பலமானதாகவும் வலுவானதாகவும் மாற்றும் முயற்சிகளுக்கு தனது நிபுனத்துவத்தை வழங்கிவருகின்றது. உலகில் இதேதன்மையில் வேலை செய்யும் ஒரே சமஷ்டி மன்றம் என்றவகையில், அடுத்த தலைமுறைக்கான கடப்பாடுகளை தாங்கும் எதிர்காலச் சுதந்திரததிற்கான களத்தினை அமைப்பதற்கு இம்மன்றம் ஒத்துழைப்பு வழங்கும்.

தெற்காசியாவில் இந்நிறுவனம், பொறுமை எனும் அதன் உறுதியான பாரம்பரியத்துடனும் தகவல் மீதான அதீத பற்றுடனும், தொடர்ச்சியாகத் தம்மை பலப்படுத்திக்கொள்ளும் மத்தியதர வகுப்பினருடன் அதன் பொருளாதார நெகழ்ச்சிப்படுத்தலுடனும் பொது கௌரவத்துடனான வாழ்க்கை, சமூக அபிவிருத்திக்கான பொருளாதார முன்நிபந்தனைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி, ஜனநாயகத்தின் அமைப்பு என்பனவற்றை வலுப்படுத்துவதற்காக பல துணை நிறுவனங்களுடன் மன்றம் சேர்ந்து பனியாற்றுகிறது.

Friedrich Naumann STIFTUNG FÜR DIE FREIHEIT

# ட்ரான்ஸ்பேரன்ஸி இன்ரநெஷனல் ஸ்ரீலங்கா

ட்ரான்ஸ்பேரன்ஸி இன்ரநெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனமானது ஊழல் ஒழிப்பை முதல் நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்ற முன்னணி சர்வதேச நிறுவனமான ட்ரான்ஸ்பேரன்ஸி இன்ரநெஷனல் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனமாகும்.

உலகெங்கும் பல நாடுகளில் நூற்றுக்கு மேற்பட்ட அளவில் கிளைகளைக் கொண்டுள்ள ட்ரான்ஸ்பேரன்ஸியின் முழு வலைப்பின்னலும், வெளிப்படைத்தன்மை, வகை கூறல் மற்றும் நல்லாட்சி கொள்கைகளை விருத்தி செய்யும் பொருட்டு அர்ப்பணமாயுள்ளதோடு "ட்ரான்ஸ்பேரன்ஸி இன்ரநெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம்" நேர்மைத்திறன் கொண்ட தேசமொன்றைக் கட்டியெழுப்பும்" நோக்கைக் கொண்டு தனது சமூகப் பணியில் ஈடுபட்டுள்ளது.

நாட்டின் ஆட்சிச் செயற்பாட்டில் மக்கள் பங்கெடுக்கவுள்ள சந்தர்ப்பத்தை விரிவாக்கத் தேவையான தகவல் அறியும் உரிமை பிரஜை ஒருவருக்கு இருக்க வேண்டிய அடிப்படை உரிமையொன்று எனக் கருதும் ட்ரான்ஸ்பேரன்ஸி இன்ரநெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் அது பற்றி மக்களை அறிவூட்டுவதிலும் மக்கள் செயற்பாட்டாளர்களை உற்சாகப்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ளது.

# பொதுநலவாய மனித உரிமைகள் புத்தாக்க (CHRI) நிகழ்ச்சித்திட்டம்

ஊண்மையான ஜனநாயகம் மற்றும் அபிவிருத்தி என்பன மக்களின் வாழ்வில் யதார்த்தமான ஒன்றாக மாறுவதற்கு பொறுப்புக்கூறுவதற்கான காத்திரமான பொறிமுறை ஒன்றும் பொதுநலவாய மற்றும் அங்கத்துவ நாடுகளுக்கிடையில் பங்கேற்பும் அவசியமாகும். இதனடிப்படையில், பாரிய மனித உரிமை அறிவூட்டல் செயற்திட்டங்களுக்கு மேலதிகமாக, பொதுநலவாய மனித உரிமைகள் புத்தாக்கல் திட்டமானது தகவலுக்கும் நீதிக்குமான அடைவினையும் ஊக்குவித்துவருகின்றது. ஆய்வுகள், வெளியீடுகள், செயலமர்வுகள், தகவல் பரப்புதல் மற்றும் எடுத்துக்கூறல் ஆகியவற்றின் ஊடாக இதனை மேற்கொண்டுவருகின்றது.

**மனித உரிமைகளுக்கான ஊக்குவிப்பு**

பொதுநலவாய மனித உரிமைகள் புத்தாக்கமானது பொதுநலவாய அங்கங்களுக்கும் அரசாங்க அங்கத்தவர்களுக்கும் தொடர்ச்சியான ஒப்புவிப்புகளை வழங்கிவருகின்றது. காலத்திற்குக் காலம் இது தகவல் திரட்டும் குழுவமர்வுகளை நடத்தியும் வருகின்றது. 1995ஆம் ஆண்டு தொடக்கம் இத்தகைய பிரசாரகுழுக்களை நைஜீரியா, சாம்பியா, பிஜிதீவுகள் மற்றும் சியராலியோன் ஆகியநாடுகளுக்கு அனுப்பிவந்துள்ளது. அத்துடன், இது பொதுநலவாய மனித உரிமைகள் வலைப்பின்னலையும் ஒருங்கிணைத்துவருகின்றது. இவ்வலைப்பின்னலானது, வித்தியாசமான குழுக்களை ஒன்றிணைத்து அவர்களின் கூட்டு பலத்தை மனிதஉரிமைகளை ஊக்குவிக்கும் முயற்சிக்காக பயன்படுத்திவருகின்றது. மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் பொது உணர்வில் இடம்பெறுவதை பொதுநலவாய மனிதஉரிமைகள் புத்தாக்கத்தின் ஊடகப் பிரிவு உறுதி செய்துவருகின்றது.

**தகவலுக்கான அடைவு**

பொதுநலவாய மனிதஉரிமைகள் புத்தாக்கத்திட்டம் நல்ல பயிற்சிகளை அமுல்படுத்தலுடன் பங்காளிகளுக்கு உதவியளித்தல், வலுவான சட்டவாக்கத்திற்கு உதவுவதில் ஒரு தொழில்நுட்ப நிபுனத்துவ மையமாகச் செயற்படுதல், அரசாங்கங்களையும் சிவில் சமூகத்தினையும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அறிவாற்றலை விருத்திசெய்வல் போன்ற செயல் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. இப்புத்தாக்கமானது கொள்கையாக்குனர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல், அரசாங்கங்கள் மற்றும் சிவில் சமூகத்தின் இயலுமையை உயர்த்துவதில் உள்ளூர் அதிகாரிகள் மற்றும் குழுக்களுடன் இணைந்து பணியாற்றியும் வருகின்றது. தெற்காசியாவில் மிகவும் உற்சாகத்துடன் இயங்கும் அதேநேரம், இந்தியாவின் தேசிய சட்டத்திற்கான வெற்றிகரமான பிரசாரங்களுக்கு அண்மைக்காலங்களில் இப்புத்தாக்கம் உதவியும் வருகின்றது. அத்தோடு, ஆபிரிக்காவின் சட்டவரைவுகளுக்கு உள்ளீடுகளையும் வரைதலுக்கான உதவிகளையும் வழங்குவதோடு, பசுபிக்கில் பிராந்திய மற்றும் தேசிய நிறுவனங்களுடன் சட்டவாக்கச் செயற்பாட்டினை வளப்படுத்துவதிலும் சேவையாற்றிவருகின்றது.

**நீதிக்கான அடைவ**

**பொலீஸ் மீளுருவாக்கம்:** அநேகமான நாடுகளில் மக்கள் உரிமைகளைப் பாதுபாப்பதை விட ஆதிக்கத்திற்கான அரசாங்கத்தின் ஒரு கருவியாகவும் நீதியை மறுத்து பாரியளவிலான வன்முறைகளிலும் ஈடுபடும் ஒன்றாகவுமே பொலீஸ்துறை அறியப்பட்டுள்ளது. பொதுநலவாய மனிதஉரிமைகள் புத்தாக்கம் இது தொடர்பான முறையான மீளுவருவாக்கம் ஒன்றை வழங்கிவருகின்றது. இதனால், பொலீஸ்துறையை அரசின் ஒரு கருவியாக அல்லாமல் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் ஒன்றாக மாற்றலாம். இந்தியாவில், பொதுநலவாய மனிதஉரிமைகள் புத்தாக்கமானது, பொலீஸ் மீளுருவாக்கத்திற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பை இலகுபடுத்தியுள்ளது. கிழக்காபிரிக்கா மற்றும் காணா ஆகிய நாடுகளில் இப்புத்தாக்கமானது அரசியல் தலையீடுகள் மற்றும் பொலீஸ் பொறுப்புக்கூறுதல் ஆகியவற்றையும் பரீட்சித்து வருகின்றது.

**சிறைச்சாலை மீளுருவாக்கம்:** மரபு ரீதியான மூடிய முறைமைகளில் அதிகரித்த வெளிப்படைத்தன்மை மற்றும் துஷ்பிரயோகங்களை அம்பலப்படுத்தல் என்பனவற்றில் பொதுநலவாய மனிதஉரிமைகள் புத்தாக்கத்தின் பணிகள் அவதானத்தைச் செலுத்துகின்றன. சட்டமுறைகளின் பின்னடைவு காரணமாக சிறைச்சாலைகளில் கோரமான நெரிசல், விசாரனைக்கு முன்னர் அதிககாலம் காவலில் இருத்தல் போன்ற மோசமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும் விடயங்களில் தலையிட்டு சீர் நடவடிக்கைகளில் உதவி வருகிறது. முற்றாகத் தோல்வியடைந்துள்ள சிறை நிர்வாக முறையினை நோக்குவதும் இதன் மற்றுமொரு அவதானத்தைப் பெற்ற அங்கமாகும். அவற்றை சீர் செய்வது சிறைச்சாலை நிர்வாகத்தில் ஒரு வளர்ச்சியினையும் மேம்பாட்டையும் கொண்டுவருவதுடன் நிர்வாத்தின் சமத்துவமான செயற்பாடுகளில் ஒரு புத்துயிர் தன்மையையும் தோற்றுவிக்கும் என்பது எமது நம்பிக்கை.

குறிப்பிட்ட சட்டவாக்கம் இயற்றுவதன் மூலம் மிகவும் பயனுள்ள வகையில் மேற்கொள்ளப்படுகின்ற, சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட, தகவல் அறிவதற்கான மனித உரிமையைப் பாதுகாப்பதும் விருத்தி செய்வதும் அரசாங்கங்களின் கடமையாகும். தகவல் உரித்துரிமைச் சட்டங்களை அபிவிருத்தி செய்ய உதவும் முகமாக குறைந்த பட்ச தரத்தினை உள்ளடக்கி சர்வதேச நிறுவனங்களும் சிவில் சமூகங்களும் பல வருடங்களாக கோட்பாடுகளையும் வழிகாட்டல்களையும் விருத்தி செய்துள்ளன.

பயனுள்ள தகவல் உரித்துரிமைச் சட்டம் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டிய பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகள் சில தற்போது உள்ளன. இப்பிரசுரம் இக்கோட்பாடுகளை விளக்குவதோடு, இக்கோட்பாட்டின் அடிப்படையில் இலங்கையின் சுதந்திர தகவல் சட்டமூலம் மதிப்பீடு செய்யப்படுகின்றது.

Commonwealth Human Rights Initiative

working for the practical realisation of human rights in the countries of the Commonwealth

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA

building a nation of integrity